# விநாயக பரத்துவம்



ச. குமாரசுவாமிக் குருக்கள்

அச்சுவேலி.

11002

உ

கணபதி துணை

# விநாயக பரத்துவம்

அச்சுவேலி

ச. குமாரசுவாமிக்குருக்கள்

எழுதியது

திருமயிலை

சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

பதிப்பித்தது

2 - ம் பதிப்பு.
துன்முகி, ஆவணி.
செப்டம்பர், 1956.

விலை 60 சதம்.

வித்தியாநுபாலன அச்சகம்,
நெ. 300, தங்கசாலைத் தெரு, சென்னை-1.

# பதிப்புரை

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலால் கூப்புவர் தங்கை.

விநாயகக் கடவுள் பிரணவ சொரூபி. பிரணவத்திருந்த உலகமே உண்டானபடியினால் எக்கருமங்களைத் தொடங்கும் போதும் யாம் பிள்ளையாரை வணங்குகின்றோம். சிவபிரானும் இவரும் வேறல்லர். மூத்தபிள்ளையாரென்று சொல்லுவது உபசாரமே. இவருக்கு கணபதி, விக்கினேசுரர், கணேசர், ஏரம்பர் முதலிய பல பெயர்கள் உண்டு. பக்தியோடு விநாயகப்பெருமானை வணங்கி வழிபடுவோர் தாம் விரும்பிய பலன்களை அடைவது பிரசித்தம். சிலருக்கு பலன் உடனே சித்திக்காவிடினும் பின்னர் கிடைக்கும்.

விநாயகருக்குரிய விரதங்கள் மூன்று: வெள்ளிக்கிழமை, விநாயக சதுர்த்தி, விநாயகசட்டி என்பவை. இவற்றை அனுட்டித்துப் பேறுபெற்றோர் பலர் என்பதை புராண சரிதைகளிற் காணலாம்.

இப்பிரானுரது மூர்த்தங்களின் வரலாறுகள் விநாயகபுராணம், காஞ்சிப் புராணம், கந்த புராணம் முதலிய நூல்களிற் பரக்கக் கூறப்பட்டுள; ஆண்டு காணலாம்.

அப்பல மூர்த்தங்களுள் 31 தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றின் மகிமையை வசனநடையில் பல பிரமாணங்களோடு விளக்கி விநாயகபரத்வம் எனப் பெயரிட்டு வைதிக

சைவ சிரோமணியாகிய அச்சுவேலி ச. குமாரசுவாமி குருக்கள் 1934-ல் அச்சிட்டுதவினர். இவர் சிவசங்கர பண்டிதரின் குமாரர் சிவப்பிரகாச பண்டிதரிடம் இருமொழியையும் முறையாகப் பயின்றவர். இச்சைவப் பெரியாரின் சிவாகமப் பயிற்சி இவர்கள் அச்சிட்ட பல நூல்களால் அறியலாம்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிட்ட முதற்பதிப்பின் பிரதிகள் செலவழிந்தமையால் இப்பதிப்பு என்னல் சென்னையிலுள்ள நாவலர் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளிவருகின்றது. இந்நூல் விநாயகமூர்த்தியின் நுட்ப திட்பங்களை நன்ருக விளக்குகின்றது. சிவநேயச் செல்வர்கள் இதை ஆதரித்து உய்வார்களாக.

முப்போதும் திருமேனி தீண்டும் புண்ணியசீலராகிய ஆசிரியர் நீடூழி வாழ்க.

சே. வெ. ஜம்புலிங்கம்.

திருமயிலை
துன்முகி
விநாயக சதுர்த்தி.

# நூன் முகம்

**பி**ரணவ மூர்த்தியாகிய எங்கள் விநாயகப்பெருமான் தம்மைவழிபடும் அடியார்கட்குக் காட்சிகொடுத்துத் திருவருள்செய்யும் வண்ணங் கொண்டருளிய எண்ணிறந்த மூர்த்தங்களுட் பிரதானமான முப்பத்தொரு மூர்த்தங்களுட் பிரதானமான முப்பத்தொரு மூர்த்தங்களின் வரலாற்றையும் அப்பெருமானுருடைய் திருவருட்டிறனையும் தொகுத்து விளக்கி, சைவநன்மக்கள் படித்து உணர்ந்து உய்யும் பொருட்டு, **விநாயக பரத்துவம்** என்னும் பெயருடன் நன்கு எழுதியுதவியவர், வடமொழி தென்மொழி வல்லுநரும், சிவபக்திமானும், சைவம் தமிழ் என்னுமிரண்டிலும் மிகவும் அபிமானம் பூண்டவருமாகிய யாழ்ப்பாணத்து அச்சுவேலி **பிரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்களாவர்.** மேற்படி குருக்களவர்கள் இதற்கு முன்னரும், **சிவபூசை விளக்கம், பிராசாததீபம், மகோற்சவ சந்திரிகை, சிராத்த தீபிகை, சைவப்பிரகாசிகை** முதலாஞ் சில அரிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இப்பொழுது வெளி வந்துள்ள இவ் விநாயகபரத்துவம் பல ஆகமப்பிரமாணங்க ளோடும், தேவாரம் திருவாசகம் திருமந்திரம் கந்தபுராணம் விநாயகபுராணம் முதலியவற்றிலுள்ள பிரமாணங்களோடும் படிப்போருள்ளத்திற் பத்திரசம் பெருகும்வண்ணம் இலகு வான தமிழ்வசனநடையில் திட்ப நுட்பம் வாய்ப்ப இயற்றப் பெற்றுள்ளது. இது சைவ வித்தியாசாலைகளிற் பயிலும் மாணக்கருக்குச் சமயபாடங்களுள் ஒன்றாக விதிக்கத்தக்கது. நமது குருக்களவர்கள் இன்னமும் இப்படியான அரிய

நூல்களை எழுதி வெளியிடுதலாகிய சிவதொண்டைச் செய்யும் வண்ணம் ஐங்கரக்கடவுள் இவருக்கு அரோக திடகாத்திரத்தையும் பூரண ஆயுளையும் அருளும்வண்ணம் அப்பெருமானுடைய திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேம்.

யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரி
6—8—34

**ம. வே. திருஞானசம்பந்தன்.**

கணபதி துணை

# விநாயக பரத்துவம்

# முகவுரை

விநாயகதொண்டரும் மகாவித்துவானுமாகிய

**பிரமஸ்ரீ: சி. கணேசையர் அவர்கள்**

எழுதியது.

**விநாயகபரத்துவம்** (விநாயகரின் கடவுட்டன்மையை யுணர்த்துவது) என்னும் இந்நூல், வடமொழி தென்மொழி என்னும் இருமொழியினும் வல்ல புலவர் சிகாமணியும், பிராமணோத்தமரும், வேதாகமசிரேட்டருமாய் விளங்கும் அச்சுவேலி. சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்களவர்களால் எழுதப்பட்டதாகும்.

பிரணவப்பொருளாய் விளங்கும் பரம்பொருளாகிய சிவபெருமானின் தோற்றமாய் விளங்குதலினாலே தாமும் பிரணவப்பொருளாய் விளங்கும் விநாயகக்கடவுள், தம்மை வழிபட்ட அடியார்களுக்கு அவர்களின் இடரைநீக்கி, அருள்செய்தமை காரணமாகப் பற்பல நாமங்களைத் தாங்கி யுள்ளனர். அவற்றுள் முப்பது நாமங்களின் காரணத்தை விளக்குஞ் சரித்திரங்களைத் தொகுத்து எழுதிச் சைவ சமயிகள் யாவரும் அறியும் பொருட்டே (உலோகோப காரமாக) குருக்களவர்கள் இந்நூலை வெளியிட்டுள்ளார்கள். ஆதலால், சைவசமயிகள் யாவரும் குருக்களவர்களுக்குக் கடமைப்பட்டவர்களா யிருக்கின்றார்கள். நிற்க.

தேவர்களுக்கு இடர்செய்த கயமுகாசுரனைச் சங் கரித்துத் தேவர்களைக் காத்தற்பொருட்டே விநாயகக்கடவுள்

அவதரித்தார். அவதரித்து அவனைச் சங்கரித்தமையினாலே, கயமுகாசுர சங்காரமூர்த்தி எனப்பெயர் பெற்றார். ஆதலினாலே அப்பெயர்க் காரணத்தை விளக்கற்கேற்ற சரித்திரத்தை முற்கூறிப் பின், தாம் எடுத்துக்கொண்ட மற்றைய மூர்த்திகளின் பெயர்க்காரணத்தை விளக்கற்குரிய சரித்திரங்களையும், தாமறிந்த அரிய பலநூற்பிரமாணங்களோடும், கற்றார் கல்லாதாராகிய சைவசமயிகள் யாவரும் அறிந்து தாமும் வழிபட்டு ஒழுகிப் பயனடையத் தக்கவிதமாகக் குருக்களவர்கள் எழுதியுதவியமை மிக வியக்கத்தக்க செயலாகும். நிற்க.

குருக்களவர்கள் பிள்ளையார் சுழியின் உண்மைப் பொருளை நன்கு விளக்கியுள்ளார்கள். பிள்ளையார் சுழியாகிய இது, நாதவிந்து வடிவாகிய துதிக்கை போலாம் என்று எழுதியதை நோக்கியபோது, குருக்களவர்களின் நுண்மாண் நுழைபுலம் எத்துணையதென்று கருதி மிகவும் வியப்பும் அதிசயமும் உடையனானேன்.

குருக்களவர்கள் இன்னும் தமிழிலே பிறர்க்குப் பயன் படும்படி பற்பல நூல்கள் எழுதியுள்ளார்கள். அவற்றை யெல்லாம் இங்கே காட்டப்புகின் விரியுமென்று கருதி விடுக்கின்றேன்.

மேலும் இந்நூலைச் சைவவித்தியாசாலைகளில் மாணவர்களுக்குச் சைவப்பாடத்திலொன்றாகவைப்பின், அம்மாணவர்கள் வழியாகச் சைவசமயிகள் யாவருக்கும் பயன்படுமென்பது எமது கருத்து.

குருக்களவர்கள் பலநூல்களுக்கு ஆக்கியோனாகுமாறு ஐங்கரக்கடவுள் அருள்புரிவாராக.

துன்முகிஸூ
ஆடிமீ 1உ.

இங்ஙனம்;
சி. கணேசையர்

## ஸ்ரீமத் அ. கந்தசாமிப்பிள்ளை,

தமிழ்பண்டிதர்,

கவர்மெண்டு கல்லூரி, கும்பகோணம்.

சுவாமிகள் பேரன்புபூண்டு 19-6-36-ல் அனுப்பியருளிய கடிதமும் விநாயக பரத்துவம் பிரசாததீபம் சிராத்த தீபிகை என்னும் புஸ்தகங்களும் கிடைக்கப்பெற்றன.

தங்கள் புஸ்தகங்களை நன்கு கவனித்துப் படித்துப் பார்த்தேன். அவை சமயிகளுக்குப் பெரிதும் பயன்தருவன. இக்காலத்துக்கு இன்றியமையாதன அவநெறியைப்போக்கி அருநெறியைப் போதிப்பன. பாராட்டத்தக்க பெருமையுடையன.

### விநாயக பரத்துவம்

சைவசமயிகளாயினோர் தம் கடவுளரின் உருவபேதங்களையும் அவற்றின் வரலாறுகளையும் அவை அடக்கியுள்ள தத்துவார்த்தங்களையும் ஒரு தலையாக உணர்தற்குரியர். இவற்றை யுணர்ந்தாலன்றிப் பிறசமயத்தவர்க் கிடங்கொடாமையும், தம் வழிபடுகடவுளர்பால் ஆழ்ந்த பக்தி செலுத்துதலும் அவர்க்கியலா. விநாயகபரத்துவம் அப்பெருமானது பிரபாவங்களைப் பலநூற் பிரமாணங்களால் நன்கு தெருட்டும் சிறப்புடையதாக விளங்குகின்றது..................................

இச்சீரிய நூல்களின் ஆசிரியராகிய குருக்களவர்கள் நீண்டகாலம் அரோக திடகாத்திரர்களாய் வீற்றிருந்து இன்னும் இவை போன்ற சிறந்த நூல்களை இயற்றிச் சைவ உலகுக்கு உபகரிக்குமாறு இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்:

**அ. கந்தசாமிப்பிள்ளை**

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 21 | நூல்களிபரக்ச | நூல்களிற்பரக்ச |
| 2 | 1 | சிமாமணி | சிகாமணி |

நூன்முகம் 5-ம் வரி "பிரதானமான முப்பத்தொரு மூர்த்தங்களுட்" என்பதை நீக்குக.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 6 | 3 | காரியினுஞ் | காயினுஞ் |
| 6 | 13 | தவித் | தவிர்த் |
| 10 | 24 | திருமந்திரம் | கந்தபுராணம் |
| 29 | 16 | ணயப்ப நாயகி | ணயப்பாஞயகி |
| 37 | 19 | மவரிடம் | மவரிடர் |
| 38 | 4 | விருத்திச் | விருத்திபிக்க் |
| 50 | 23 | யாவையும் | யாவையு |
| 60 | 8 | வில்லன் | வில்வலன் |
| 63 | 12 | தியா | தியர் |


---

இப்பிழைகள் நேர்ந்தமைக்கு வருந்துகின்றோம்.

# விஷய அட்டவணை


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம். |
| 1. | விநாயகர் திருவவதாரம் | ... | 1 |
| 2. | கயமுகாசுர சங்காரமூர்த்தி | ... | 12 |
| 3. | அநந்தசாப நிவாரணமூர்த்தி | ... | 21 |
| 4. | பிரணவமூர்த்தி | ... | 22 |
| 5. | புராணபரிபாலனமூர்த்தி | ... | 25 |
| 6. | பரமாசாரியமூர்த்தி | ... | 30 |
| 7. | திருமுறைகண்டமூர்த்தி | ... | 32 |
| 8. | வரம்பெறுமூர்த்தி | ... | 35 |
| 9. | விக்கினேசுவரமூர்த்தி | ... | 36 |
| 10. | அச்சறுத்தருண்மூர்த்தி | ... | 39 |
| 11. | மூலாதாராதிபமூர்த்தி | ... | 42 |
| 12. | சர்வலோகநாயகப் பிரதட்சிணமூர்த்தி | ... | 46 |
| 13. | ஆபத்சகாயமூர்த்தி | ... | 48 |
| 14. | வலம்புரி விநாயகமூர்த்தி | ... | 50 |
| 15. | விகடசக்கர விநாயகமூர்த்தி | ... | 52 |
| 16. | கூர்மசங்காரமூர்த்தி | ... | 55 |
| 17. | சந்திர சிக்ஷாரக்ஷகமூர்த்தி | ... | 56 |
| 18. | இந்திரானுக்கிரகமூர்த்தி | ... | 59 |
| 19. | அகத்தியானுக்கிரகமூர்த்தி | ... | 62 |
| 20. | இராவண கர்வபங்கமூர்த்தி | ... | 66 |
| 21. | மகாபாரதலிகிதமூர்த்தி | ... | 69 |
| 22. | விண்டுவிநாயகமூர்த்தி | ... | 71 |

| | | | பக்கம். |
|---|---|---|---|
| 23. | சமிமந்தாரானுக்கிரகமூர்த்தி | ... | 73 |
| 24. | பாலசந்திரமூர்த்தி | .... | 76 |
| 25. | மயூரேசமூர்த்தி | ... | 79 |
| 26. | புஜங்காபரணமூர்த்தி | ... | 81 |
| 27. | வல்லாளமூர்த்தி | ... | 83 |
| 28. | வக்கிரதுண்டவிநாயகமூர்த்தி | ... | 89 |
| 29. | சித்திபுத்தி திருமணமூர்த்தி | ... | 92 |
| 30. | சித்திவிநாயகமூர்த்தி | .... | 95 |
| 31. | வல்லபா கணேசமூர்த்தி | .... | 99 |




"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புதமலர் தலைக்கணி வோமே."

சிவமயம்.

# விநாயக பரத்துவம்

## 1. விநாயகர் திருவவதாரம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந் தன்மையினுற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

—பதினோராந் திருமுறை.

முன்னொரு காலத்திலே இந்திரன் அசுரேந்திரனைப் போரில் வென்றான் அசுரேந்திரன் வருந்திச் சுக்கிராசாரியருக்கு விண்ணப்பித்தான். ஆசாரியர், "வசிட்ட முனிவர் மரபில் வந்த மாகதரிடம் ஓர் அசுர கன்னிகையை அனுப்புதி; அவள் அவருடன் சேரும்பொழுது ஒருவன் தோன்றித் தேவர்களை வெல்வான்" என்று கூறினர். அசுரேந்திரன் விபுதை என்பவளை மாகத முனிவரிடம் அனுப்பினன். அவள் சமயம் பார்த்துத் தவஞ் செய்துகொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு களிற்றியானை பிடியுடன் புணர, அதனை முனிவர் நோக்கிப் புணர்ச்சிமேல் மனம் வைத்தார்.

விபுதை அவரை அணுகி, அன்புண்டாகும்படி வணங்கிநின்ருள். முனிவர் மகிழ்ச்சியுற்று "யாமிரு வரும் யானை யுருவெடுத்துக் கூடி இன்புறவேண்டும்" என்ருர். விபுதை பெண் யானையாகத் தோன்ற, முனிவர் களிருகத் தழுவி இன்பநுகர்ந்தாசை நீங்கினர். அப்பொழுது கயமுகாசுரன் என்பவன் தோன்றினன். பிடியானையின் அளவற்ற உரோமங்களினின்றும் அநேக அவுணவீரர் தோன்றினர்கள். மாகத முனிவர் பழைய உணர்வுதோன்ற, "பெண்ணே! இனிப்போகுதி" என்ருர். விபுதை போயினள். கயமுகன் உயிர்களை உண்டு இரத்தத்தைப் பருகித் திரிந்தான்.

அசுரகுருவாகிய சுக்கிரர் கயமுகனை அணுகித் தவஞ்செய்யும்படி உபதேசித்து, அனுமதி கொடுத்தனுப்பினர். கயமுகன் மேருவினெருசாரிற் போய் மூவாயிர வருடம் தவஞ் செய்தான். சிவபெருமான் தோன்றிப் பல வரங்களைக் கொடுத்து மறைந்தருளினர்.

கயமுகாசுரன் ஆயுதங்களையும் பிறவரங்களையும் பெற்று, இந்திராதி தேவர்களைவென்று, மதங்கமாபுரம் என்னும் நகரத்தை அமைத்து, ஏழுலகிலும் தன்கொடுங்கோலும் ஆஞ்ஞா சக்கரமுஞ் செல்ல, அரசுசெய்திருந்தான். அரசுசெய்யுங் காலத்து இந்திரன் முதலிய தேவர்களை நோக்கி, "நீங்கள் தினந்தோறும் எம்முன் வரும்பொழுது, உங்கள் கைகளாற் சிரசில் மும்முறை குட்டி, கைகளைமாறிக் காதுகளைப் பற்றித் தாழ்ந்தெழுந்து, அதன்பின்

நம்பணிகளைச் செய்மின்" என்றான். தேவர்கள் அதனை மறுத்தற்கஞ்சி, முன்பு நின்று, அவன் பணித்த அப்புன்தொழிலையும் பிறபணிகளையும் நாடோறுஞ் செய்து பழியின் மூழ்கினார்கள்.

கயமுகாசுரனுடைய ஏவலினால் வருந்திய தேவர்கள் திருக்கைலாச மலைக்குப்போய்ச் சிவபெருமானை வணங்கினார்கள். அவர்களுள் விட்டுணு சிவபெருமானை நமஸ்கரித்து, "எம்பெருமானே! கயமுகன் தவஞ்செய்து பெற்ற வலியினால் தேவர்களை வருத்துகின்றான். தேவரீர் அவனுடைய உயிரைத் தொலைத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதனைக் கேட்டருளிய கடவுள் "இனியொரு புத்திரன் எம்மிலிருந்து தோன்றுவான்; கயமுகாசுரனை வெற்றி கொள்ளும்படி அவனை அனுப்புவோம்" என்று திருவாய்மலர்ந்து விடைகொடுத்தருளினர்.

சிவபெருமான் தேவர்களது இடரை நீக்குவதற்குத் திருவுள்ளங்கொண்டு, திருக்கைலாச மலையிலேயுள்ள நந்தனவனத்தில் உமாதேவியாருடன் போய், அதனியல்புகளை அவரோடு திருக்கண்ணுற்று, ஓவியங்களையுடைய ஒரு மண்டபத்திற் சென்றார் உமாதேவியார் அதிலுள்ள ஓவியங்களெல்லாவற்றையுங் கண்ணுற்றார் சிவபெருமானது ஆஞ்ஞையினால் அம்மண்டபத்தின் நடுவே, ஒரு பிரணவ எழுத்தே இரண்டு திருவுருக் கொண்டு யானைகளின் வடிவாய்த் தோன்றிச் சேர்ந்தது. அதனைத் தேவியார் கண்ணுற்றுச் சிவபெருமானை

வணங்கிப் "பிரணவ எழுத்து யானை வடிவாய்ச் சேர்வது என்னை"? என்று வினவினர். சிவபெருமான் அவரை நோக்கி, எவற்றுக்கும் மூலமாகிய பிரணவ எழுத்தானது நீ முன்பு விரும்பிப் பார்த்தமையினாலே இரண்டாகிய யானையுருக்கொண்டு சேர்கின்றது; காட்சி மாத்திரத்தால் இதனைச் செய்தற்குக் காரணமாயுள்ள உன்னுடைய மாட்சியையாமன்றி வேறியார் அறியவல்லார்; உன்னுடைய திருவருட் செய்கை வேதங்கட்கும் எட்டாததாகும் என்று சொல்லியருளினர். யானைகளிரண்டும் நிருமலமாகிய புணர்ச்சியை விட்டன. அப்பொழுது ஐந்து திருக்கரங்களையும், மூன்று திருக்கண்களையும், சந்திரனைத்தரித்த செவ்வானம் போலுந் திருச்சடையினையும், யானைமுகத்தையும் மும்மதங்களையுமுடைய ஒரு பாலகர் தோன்றியருளினர். அவர் மெய்யன்போடு தியானிக்கின்ற அடியார்களுடைய அறிவுக்கறிவாயுள்ளவர்; எங்கும் வியாபித் திருப்பவர்; யாவராலும் அறியப் படாதவர்; எவராலும் வணங்கப்படும் இயல்பினர்; சிவபெருமான் இருவர் என்று சொல்லும்படி நின்றருள் செய்பவர்; நான்கு வேதப் பொருளாயுள்ளவர்; உலகிலுள்ளோருடைய அஞ்ஞானத்தையும் மனத் துன்பங்களையும் நீக்குதற்காக அருளுருக்கொண்டு அவதரித்தவர்.

இவ்வியல்பினையுடைய புத்திரராகிய விநாயகக் கடவுள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் நமஸ்காரஞ் செய்ய அவர்கள் கருணை செய்தனர். சிவபெருமான், "எக்கருமங்களிலும் முதலில்

வணங்கப்படும் முதன்மையை அப்புத்திரருக்குக் கொடுத்து, கயமுகனைச் சங்காரஞ் செய்து விட்டுண வினுடைய சாபத்தை நீக்குதி" என்று கிருபை செய்து, பூதங்களைச் சேனைகளாக உண்டாக்கிக் கொடுத்து, உமாதேவியாரோடும் விநாயகரோடும் சோலையை நீங்கித் திருக்கைலாச மலைக்குப்போய், விநாயகக்கடவுளை நோக்கி, "நீ நம்முடைய கோபுர வாயிலிலே நாயகனா யிருக்குதி" என்று இருத்தித் தாம் உமாதேவியாரோடும் கோயிலினுட் போய் வீற்றிருந்தருளினார். திருநந்திதேவர் வந்தனை செய்யவும், பிரமா முதலிய தேவர்கள் வந்து வந்து வணங்கவும் விநாயகக்கடவுள் எழுந்தருளி யிருந்தார்.

கந்தபுராணம் - கயமுகனுற்பத்திப்படலம்

"பாங்கரில் வருவதோர் பரம ஞானையால்"

என்றமையாலும்,

"ஆங்கத னடுவணி லாதி யாகியே
யோங்கிய தனியெழுத் தொன்றி ரண்டதாய்த்
தூங்குகை மலைகளிற் றேன்றிற் றென்பவே" (142)

என்றமையாலும் பிரணவமாகிய தனியெழுத்தே இருவடிவுற்ற தென்பதூஉம்,

"முன்புநீ காண்டலின் மூலமா யுடையதோர்
மன்பெருந் தொல்பொறி மருவியீ ருருவுறீஇ
யன்பினு லானைபோற் புணருமா லாகையா
னின்பெருந் தகவினை நினைகிலாய் நீயுமே"

என்னுஞ் செய்யுளாலும்,

"காட்சியா லிதுசெயுங் காரணம் பெற்றநின்
மாட்சிதான் யாமலான் மற்றியா ருணர்குவா
ராட்சியா லுற்றதொல் லருமறைக் காரியினுஞ்
சேட்செலா நிற்குநின் றிருவருட் செய்கையே" (145, 146)

என்னுஞ் செய்யுட்களாலும் இவ்விருவடிவுகளும் சத்தியுஞ் சிவமுமாமென்பதூஉம்,

"...................... தந்தியும் பிடியுமாய்
துன்னியே புணர்வுறுந் தூயசெய் தொழில்விடா" (147)

என்றமையாலும் இவ்விருவடிவங்களின் கலப்பு அசுத்த மாயாதத்துவங்களிலுள்ளோர் அசுத்தக் கலப்புப் போலாகாது சுத்தமாமென்பதூஉம்,

"...................... புவனமுற் றவர்கடம்
மிருளறுத் தவர்மனத் திடர்தவித் தருளவோ
ரருளுருத் தனையெடுத் தவதரித் துளனவன்" (150)

என்றமையால் விநாயகரது வடிவம் அருள்வடிவமாம் என்பதூஉம்,

"ஒருமையா லுணருவோ ருணர்வினுக் குணர்வதாம்
பெருமையான்" (149)

என்றமையால் மெய்யன்போடு தியானிப்பவர்களுடைய அறிவுக்கறிவாயுள்ளவர் என்பதூஉம், "எங்கணும் பிரிவறும் பெற்றியான்" என்றமையால் சர்வவியாபகர் என்பதூஉம், "அருமையான்" என்றமையால் யாவராலும் அறியப்படாதவர் என்பதூஉம், "எவரும் அடிதொழுந்தன்மையான்" என்றமையால் எவராலும் வணங்கப்படும் இயல்பினர் என்பதூஉம், பெறப்பட்டவாறு கண்டு கொள்க.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

எனவும்,

செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்ததும்பி மொய்ம்புறுஞ்
சேரேவாரா நீள்கோதைத் தெரியிழை பிடியதுவாய்
ஒற்றைச்சேர் முற்றற்கொம் புடைத்தடக்கை முக்கண்மிக்
கோவாதேபாய் மாதானத் துறுபுகர் முகவிறையைப்
பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமும்
பேராநோய்தா மேயாமைப் பிரிவுசெய் தவனதிடங்
கற்றிட்டே யெட்டெட்டுக் கலைத்துறைக் கரைச்செலக்
காணுதாரே சேராமெய்க் கழுமல வளநகரே.

—திருஞானசம்பந்தர் திருமுறை - 1.

எனவும் வருந் திருவாக்குக்களிலும், சுப்பிரபேதாகமம் விக்கினேச ஸ்தாபனவிதிபடலத்திலும் இவ்வுண்மைகள் தோற்றுவதை உற்று நோக்கி உணர்க.

வாதுளாகமத்திலே, தத்துவபேதபடலம் 139-ம் சுலோகத்திலே மகேசுரருடைய திருக்கண்டத்தினின்றும், கணேசர் தோற்றினரென்று கூறப்பட்டிருப்ப, கந்தபுராணம் சுப்பிரபேதாகமம் முதலியவற்றில் கயமுகசங்காரத்தின்பொருட்டுப் பிரணவத்தினின்று தோற்றினரெனக் கூறுவது முரணுமோ எனின், ஆகாது. அங்கே கூறியது பிரதமமகாசிருட்டியிற் றோற்றத்தை; புராண முதலியவற்றிற் கூறியது அவாந்தரசிருட்டியிற் றோற்றத்தை என அறிக.

ஒருநாள் விட்டுணு சிவபெருமானைத் தரிசிக்கும் படி திருக்கைலாசமலைக்குப் போய் விநாயகக் கடவுளை வணங்காதவராய் உள்ளே சென்று சிவ பெருமானை வணங்கித் துதித்தார். பரமசிவன் அப்பொழுது விட்டுணுவை இருக்கும்படி பணித்து, ஒரு திருவிளையாடலையுன்னி உமாதேவியாரை நோக்கி, நீ நம்மோடு சூதாடு என்றார். உமாதேவி யாரும் அதற்கு உடன்பட்டனர். விருப்பு வெறுப் பின்றி ஆன்மாக்களது இருவினைகளை முற்றொருங் குணர்ந்து அப்புண்ணிய பாவத்துக்கேற்பத் தனு கரணபுவன போகங்களைக் கொடுத்தருளுஞ் சிவ பெருமான் விட்டுணுவை நோக்கி, "நீ இதற்குச் சாட்சியாய் இருப்பாய்" என்று பணித்தார். அவர் அதற்கு உடன்பட்டு இருந்தார். பரமசிவனுடைய உத்தரவின்படி ஆலாலசுந்தரர் முதலியோர் சூதாடுகருவியையும் ஆடுதற்குரிய பலகையையுங் கொண்டுவந்தார்கள். திருக்கைலாசபதி "விட்டு ணுவை நோக்கி" இக்காய்களை முறையாக வை என்று கூற அவர் வைத்தார். உமாதேவியாரைத் தமக்கு எதிராக இருத்திச் சிவபெருமான் தாம் கவற்றை உருட்டினார். பின்பு தேவியாரும் உருட்டி னார். எவற்றினும் மேலவராகிய அவ்விருவரும் பஞ்சென்றும், பாலை என்றும், வெடி என்றும், இஃது அடியென்றும், இஃது பெட்டையென்றும் சூதாடுதற்குரிய குழூஉக்குறிகளை முறைப்படி அள வற்றனவாகச் சொல்லிக் கவற்றை எறிவார்கள். கருவிகளை எதிரேறத் தள்ளி விளையாடுவார்கள். இவ்வாறு சூதாடும்பொழுது சிவபெருமான் தேவி

யாருக்குத் தோற்று, அவரை நோக்கி, "நின் வலிமை நன்று" என்று நகைத்து, "நீ நம்மை வென்றுயல்லை" என்றார். தேவியார் அதனைக் கேட்டுத் தாம் கடவுளோடு வாதாடுவதற்கஞ்சி, விட்டுணுவை நோக்கி, "சான்றாக இருந்த நீ இதனைச் சொல்லுதி" என்றார். விட்டுணு, "சூது வென்றவர் சிவபெருமானே" என்றார். உமாதேவியார் "நீ நல்ல உண்மையைச் சொன்னாய்" என்று அவரைக் கோபித்து, நீ இதனைப் பாராதவனுமல்லை; பக்கத்திலிருந்தாய்; நீ அறியாததொன்றுமில்லை; மாயையிலும் வஞ்சனையிலும் சிறந்த விட்டுணுவே! நீ இறுமாப்பினால் இந்தப் பொய்யைச் சொன்னாய்; ஆதலால் பசிவருத்தக் குருட்டுப்பாம் பாகக் கடவை" என்று சபித்தார். உடனே அவர் பாம்பாயினர்.

விட்டுணு துன்பமடைந்து, சிவபெருமானுடைய பாதங்களை வணங்கி, "அடியேனுக்கு இவ்வுரு நீங்கும் வழியை அருளுக" என்றார். சிவபெருமான் விட்டுணுவை நோக்கி, "நீ தென்றிசையிலே, தென் தேசத்திலே, ஆலவனமென்று ஒரு இடமிருக்கின்றது, அதில் மிகப்பெரிய ஒரு ஆலமரமுள்ளது. நீ அங்கேபோய் அம்மரத்தடியிலுள்ள பொந்தொன்றில் இச்சர்பம் நீங்கும்படி பெருந்தவஞ்செய்து கொண்டிருக்குதி; அக்காலத்தில் நம்முடைய குமாரனாகிய விநாயகன் அங்கே வருவான்; நீ அவனை எதிர்கொண்டு தரிசிக்கும்பொழுது, உன்னுடைய இப்பாம்பு வடிவம் நீங்கும்" என்று சொல்லியருளினார். விட்டுணு சிவபெருமானை வணங்கி, விடை

பெற்றுக்கொண்டு, ஆலவனத்திற்போய் அம்மரப் பொந்திற் புகுந்து தவஞ்செய்துகொண்டிருந்தார்.

சூதாவது சதுரங்க முதலியவற்றால் ஆடுதல். அது தருமமும் பொருளும் இன்பமுமாகிய மூன்றுக் கும் இடையூறுயுள்ளது. செல்வத்தை அழித்து, வறுமையைத் தவறாது கொடுக்கும் இயல்புடையது. இம்மை மறுமை யிரண்டிலும் துன்பத்தை அடை விப்பது. இதுபற்றியே, "சூதும் வாதும் வேதனை செய்யும்" என்றார் பெரியோர். இவ்விதமாகிய தீமைகளை உண்டுபண்ணும் சூதைச் சிவபெருமான் ஆடியது குற்றமாகாதோ எனின்; ஆகாது. எங்ஙன மெனின்; விட்டுணுவினுடைய அகந்தைச் சூதை நீக்கும்படி தமது திருவருட்சத்தியோடு ஆன்மாக்க ளது இருவினைப் பயன்களை முற்றாக ஒருசேர அறிந்து, புண்ணிய பாவத்துக்கேற்பத் தனுகரண புவனபோகங்களைக் கொடுத்தருளும் சிவபெருமான் ஆடிய சூது தத்துவச் சூதேயாம்.

"பற்றிக லின்றியே பழவினைப் பயன்
முற்றுணர்ந் துயிர்களை முறையில் வைப்பவன்" (163)

—கந்தபுராணம், கயமுகனுற்பத்திப் படலம்.

எனவும்,

"ஏற்றனவ னெய்திய வின்னருள் யாவதேயோ
தேற்ற மஃதியார்க்கு மளப்பெருஞ் செய்கையாலே"

—திருமந்திரம்.

எனவும்,

"காயம் பலகை கவறைந்து கண்மூன்று
யாயம் பொருவ தோரைம்பத் தோரக்கா
மேய பெருமா னிருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப் பறியேனே"

—திருமந்திரம்.

எனவும் வருவனவற்ருல் உணரப்படும்.

பொய்யாவது உள்ளதை இல்லாததாகவும், இல்லாததை உள்ளதாகவும், சொல்லுதல். பொய் மிக இழிவுள்ளது. பொய் சொல்பவர் கோவதையும், ஸ்திரீவதையும், சிசுவதையும், தந்தைவதையும், செய்தவராவர். பொய்ச்சாட்சி சொன்னவரும், பொய்வழக்குப் பேசினவரும், வழக்கிலே நடுவு நிலைமையின் வழுவித் தீர்ப்புச் செய்தவரும், ஏழு பிறவிகளிற் சம்பாதித்த எல்லாப் புண்ணியங்களை யும் கெடுத்தவராவார். அவர்கள் எண்ணில்லாத காலம் நரகத்துன்பத்தை அனுபவிப்பார்கள். பின்னும் அவர்கள் பன்றி கழுதை நாய் பாம்பு முதலிய பிறப்புக்களிற் பிறந்து, பின்பு மனிதப் பிறப்பிலே பிறவிக் குருடரும், செவிடரும், குட்ட நோயினரும், ஊமர்களுமாய்ப் பிறப்பர்; மிக்க பசி தாக முடையவராய் வருந்தித் திரிவர்.

சகல உலகங்களையுங் காக்கவல்ல விட்டுணு வானவர் சிவபெருமானுடைய சார்பாக இருந்தும் ஒரு பொய்ச் சாட்சியினல் அனுபவித்தற்கரிய சாபத்தைப் பெற்ருர் என்ருல் இவ்வுலகத்திலே பொய்யையே கூறி வாழ்கின்றவர் அனுபவிக்கும் நரகத்துன்பத்தையும் பிறவித்துன்பத்தையும் யார் கூற வல்லவர்.

# 2. கயமுகாசுர சங்காரமூர்த்தி

கயமுகாசுரனுடைய ஏவல் செய்து மனம் வருந்திய இந்திரன் முதலிய தேவர்கள் விநாயகக் கடவுள் திருவவதாரஞ் செய்தமையை அறிந்து, மகிழ்ந்து, திருக்கைலாச மலையை அடைந்து, அவருடைய திருவடிகளை வணங்கித் துதித்தார்கள். அத்தேவர்களுள் இந்திரன், "வேத ஒழுக்கங்களை நீக்கி, மிகக் கொடுந் துன்பங்களைச் செய்கின்றவனாகிய கயமுகாசுரனுடைய உயிரையும் எங்களுடைய குறையையும் நீக்கும்படி தேவரீர் வருவீர் என்று எங்களுக்குப் பரமசிவன் அருளிச் செய்தார்; ஆகையால் தேவரீரை அடைந்தோம்; எங்கள் துன்பத்தை நீக்கியருளுக" என்று பூசித்து வேண்டினன். விநாயகக்கடவுள், "அஞ்சற்க; அஞ்சற்க; கயமுகாசுரனைச் சங்காரஞ் செய்து, உங்களுடைய துன்பத்தை நீக்குவோம்" என்று கிருபை செய்தார். அத்திருவாக்கைக் கேட்ட தேவர்கள் "எங்களுடைய துன்பம் நீங்கியது; மறுமை இன்பங்களையும் அடைந்தனம்" என்று கூறி மகிழ்ச்சியுற்றார்கள்.

விநாயகக்கடவுள் கயமுகாசுரனைச் சங்காரஞ் செய்யத் திருவுளங் கொண்டு, திவ்விய சிங்காசனத்தினின்றெழுந்து, வாய்தலில் வந்து அசலன் என்பவனது தோளின் மீதேறிப் போருக்குச் சென்றார். பூதசேனைகள் வந்து சூழ்ந்து, அவருடைய புகழ்களைச் சொல்லித் துதித்தும், சாமரைகளை வீசியும்,

குடைகளை ஏந்தியும், பூக்களைத் தூவியும், பலவகைப் பட்ட வாத்தியங்களை இயம்பியுஞ் சென்றார்கள். விநாயகக்கடவுள் மதங்கமாபுரிக்கெதிரிற் போயி னார். அதனைத் தூதர்களாலறிந்த கயமுகாசுரன் கோபமுற்று விரைந்தெழுந்து, யுத்தகோலமுற்றவ னாய்த் தேரிலேறி, ஆயிரம் வெள்ளஞ் சேனைகள்சூழ, யுத்தகளத்தை அடைந்தான். பூதர்கள் அவுணர்க ளோடு எதிர்த்து யுத்தஞ்செய்து வெற்றியடைந்தார் கள். அதனைக் கண்ட கயமுகன் வில்லை வளைத்துப் பாணங்களைச் செலுத்தப் பூதர்கள் யாவரும் வருந்தி வலிமைகெட்டுப் புறங்கொடுத்தார்கள். விநாயகக் கடவுள் கயமுகாசுரனை அணுகினார். கயமுகாசுரன் தேருடன் விநாயகக்கடவுளுடைய திருமுன்னிலையை அடைந்து, கோபித்துப் பார்த்து, "மைந்தனே! உன் பிதா நான் செய்த தவத்தை நோக்கி, எனக்குப் பல வரங்களைத் தந்தார். விட்டுணு முதலிய தேவர்களும் மற்றையோர் யாவரும் போரில் வந்து எதிர்ப்பின் அவர்கள் எனக்குப் புறந்தரவும், அவர்களது படைக்கலங்கள் ஒருங்கே வந்தாலும், அவைகளால் இறவாமலிருக்கும் பெரும் வலி பொருந்தவும், தேவர் முதலிய வகுப்பினரால் இறவாதிருக்கவும், என்னை நிகர்த்த ஒருவன் வந்து போர் செய்யினும் அவனுடைய ஆயுதங்களாலும் அழியாதிருக்கவும் பெற்றுக்கொண்டேன். நீ இந்திராதி தேவர்களுடைய துன்பத்தை நீக்குபவன் போல என்னுடன் போர்செய்ய வந்தாய்; யான் உன்னை வென்று அவர்களுடைய உயிரையும் பருகு வேன்; என்னோடு போர்செய்து வெற்றிகொள்வ

தற்கு வல்லையாயின் வருதி" என்று கூறினன். சிவகுமாரர் அவனை அருளோடு நோக்கி, "கய முகனே! முன்னாளிலே உனக்குப் பலவரங்களையுந் தந்த நமது பிதாவே உன்னைச் சம்மாரஞ் செய்து, இந்திரன் முதலிய தேவர்களது துன்பத்தை நீக்கிச் சுவர்க்காதி உலக ஆட்சியைக் கொடுத்து வரும்படி எமக்குக் கட்டளையிட்டருளினர். சுவர்க்க உல கத்தை இந்த இந்திரன் அரசு செய்ய விடுத்து, நீ இம்மண்ணுலகத்தில் அரசுசெய்திருக்குதி; அது உனக்கு இசையாதாயின் நாம் உன்னுயிரைக் கவரும்படி யமைந்து நின்றேம்; உன்னுடைய எண்ணம் யாது? சொல்லுதி" என்றார். கயமுகா சுரன் அக்கினி சொரியப் பார்த்து விரைந்து ஒரு வில்லை வளைத்துப் பாணங்களைச் செலுத்தினன். விநாயகக்கடவுள் ஒரு எழுப்படையினல் அவை களைச் சிந்தி, அதனல் அடித்து, அவன் வில்லை முரித்தார். அவன் வேறொரு வில்லை எடுத்து வளைக்க, அதையும் அழித்தார். கயமுகன் ஒரு தண்டாயுதத்தை எடுத்துக்கொண்டு எதிர்த்தான். அவர் எழுவினல் அத்தண்டையும் அடித்தழித்து, அவ்வெழுவினல் அவனுடைய மார்பிலடித்தார். அவன் செயலற்று மனம் நடுங்கி, ஒன்றும் பேசாத வனய் நாணமுற்று ஒடுங்கி, இறந்தவனுக்குச் சம மாக நின்றான். விநாயகக்கடவுள் அவனுடைய சேனைகளையும் அழிக்கத் திருவுளங்கொண்டு, ஒரு பாசத்தை வீசினர். அது அவனுடைய சேனைகளைக் கட்டியது. அதன்பின் கணிச்சியைச் செலுத்த, அது அச்சேனைகளைக் கொன்றது கயமுகாசுரன்

பதைபதைத்து, மனம்வருந்தித் தன்னிடத்துள்ள படைக்கலங்க ளெல்லாவற்றையுஞ் செலுத்தினன். அவைகள் கடவுளை வலஞ்செய்து துதித்துக் கட்டளையின்படி நின்றன. கயமுகாசுரன் கோபாக்கினி அதிகரிக்க, வாளாநின்றான். சிவகுமாரர் அவனை நோக்கி, நாம் ஆயுதங்களைச் செலுத்தினல், நமது பிதாக் கொடுத்த வரத்தினல் அவைகளெல்லாம் இவனைக் கொல்லமாட்டா என்று இறைப்பொழுது சிந்தித்துத் தம்முடைய திருக்கோட்டி லொன்றைத் திருக்கரத்தால் முரித்துக் கயமுகாசுரன்மீது விட்டார். அது அவனுடைய மார்பைப் பிளந்து விரைந்து சென்று, சுத்தோதக சமுத்திரத்தில் மூழ்கி, அவருடைய திருக்கரத்தில் வந்து வீற்றிருந்தது. கயமுகன் ஆரவாரித்துத் தேர்மேல் வீழ்ந்து மயங்கினன். அவனுடைய மார்பினின்றும் நதி போலப் பெருகிய இரத்தவெள்ளம் பக்கத்திலுள்ள ஒரு காட்டிற் புகுந்தமையால் அவ்விடம் திருச்செங்காடு என்னும் பெயர்பெற்று, இன்னும் யாவருங் காணும்படி இருக்கின்றது.

சிவபெருமான் கொடுத்த வரத்தினல் இறவாத கயமுகன் வீழ்ந்து இறந்தவன் போன்று, பழைய வடிவை விட்டு ஒரு பெருச்சாளி வடிவங்கொண்டு, விநாயகக் கடவுளைத் தாக்கும்படி வந்தான். அவர் அவனுடைய போர்வலிமையை நீக்கி, அசலனென்னும் பூதனுடைய தோளினின்று மிறங்கி, "நீ எம்மைச் சுமக்குதி" என்று அவனுடைய பிடரிற்றாவி வீற்றிருந்து, அப்பெருச்சாளி வாகனத்தைச் செலுத்தியருளினர்.

அதனைக் கண்ட பிரமா இந்திரன் முதலிய தேவர்கள் கயமுகாசுரன் இறந்தான்; நம்முடைய இடர் போயிற்று; பகையுந் தீர்ந்தது என்று ஆடிப் பாடி விநாயகக்கடவுளுடைய திருமேனி மறையும் வண்ணம் பூமழை பொழிந்து நின்று,

"காப்பவ னருளுமேலோன் கண்ணகன் ஞாலம்யாவுந்
தீப்பவ னேனைச்செய்கை செய்திடு மவனுநீயே
யேப்படுஞ் செய்கையென்ன வெமதுளம் வெதும்புமின்ன
னீப்பது கருதியன்றே நீயருள் வடிவங் கொண்டாய்."

"உன்னிடைப் பிறந்தவேத முன்பெரு நிலைமைதன்னை
இன்னதென் றுணர்ந்ததில்லை யாமுனை யறிவதெங்க
னன்னையும் பயந்தோன்றுனு மாயினை யதனுன் மைந்தர்
பன்னிய புகழ்ச்சியாவும் பரிவுடன் கேட்டிபோலாம்."

—கந்தபுராணம்.

என்று சொல்லி வணங்கித் துதித்து, முகமலர்ச்சி யுள்ளவர்களாய் மூத்தபிள்ளையாரை வந்து சூழ்ந் தார்கள் அக்கடவுள் அவர்களுக்குக் கிருபா நோக்கத்தோடு பேரருள் புரிந்தார். பிள்ளையார் போரிலிறந்த பூதர்களை நோக்கி, "எழுதிர்" என்று அருளிச்செய்ய. அவர்கள் எல்லோரும் எழுந்து, ஹர, ஹர என்று துதித்து, அவரை வணங்கிச் சூழ்ந்தார்கள். பூதர்கள் மதங்கமாபுரியிற் போய், ஆயுதபாணிகளாயுள்ள அவுணர்களைக் கொன்று, போர்க்களத்திற்கு மீண்டு வந்தார்கள்.

பிள்ளையார் போர்க்களத்தை நீங்கித் திருச் செங்காட்டிற் போய், சிவலிங்கப்பிரதிட்டைசெய்து பேரன்போடு பூசித்துத் துதித்தார். அத்தலத்தை மேலோர் கணபதீச்சுரம் என்று வழங்குவர்.

விநாயகக்கடவுள் பின்னர் ஆகுவாகனத்தி லிவர்ந்து, தேவர்கள் சூழ விட்டுணு பாம்புவடிவா யிருக்கும் வனத்தை அடைந்து, அவருடைய சாபத்தை நீக்கி, அவ்விட்டுணுவும் பிரமா முதலிய தேவர்களும் நமஸ்கரிக்க, பெருச்சாளி வாகனத்தி லேறி, பூதசேனைகள் சூழத் திருக்கைலாசமலையை அடைந்து, தமது இடத்தில் வீற்றிருந்தருளினர்.

அத்தினத்தில் விட்டுணு முதலிய தேவர்கள் விநாயகக்கடவுளை வணங்கித் திருமுன் நின்று, "எம்பெருமானே! எங்களை இடர்ப்படுத்திய கயமுகா சுரனைத் தேவரீர் சங்காரஞ் செய்தமையால் அடி யேங்கள் உய்ந்தனம். நாங்கள் நேற்றைவரையும் அந்தக் கயமுகாசுரனுக்கு எதிரே தவறுமற் செய்த தொண்டை இன்றுமுதல் தேவரீருடைய சந்நிதா னத்திற் செய்வோம்" என்றார்கள். பிள்ளையார், "அவ்வாறு செய்குதிர்" என்றார். தேவர்கள் அன்பினோடு முட்டியாகப் பிடித்த இரு கரங்களி னாலும் தங்கள் தங்கள் சிரசுகளில் மும்முறை குட்டி, இரண்டு கைகளையும் எதிர் எதிராக மாற்றி, இரண்டு காதுகளையும் பிடித்துக்கொண்டு, கணைக்காலுந் தொடையும் ஒன்றையொன்று தொடும்படி மும்முறை தாழ்ந்தெழுந்து, வணங்கி நின்றார்கள். விநாயகக்கடவுள் மகிழ்சிறந்தார். "இன்றுமுதல் உலகத்திலுள்ளோர் எவரும் எங்களைப்போல இத் திருத்தொண்டைத் தேவரீருடைய சந்நிதானத்திற் செய்துவர அருள்செய்யவேண்டும்" என்று தேவர் கள் வேண்டுதல் செய்தார்கள். அவர் "அவ்வாறே யாகுக" என்றருள்புரிந்து, அவர்கள் யாவர்க்கும்

விடைகொடுத்தனுப்பினர் அவர்கள் தத்தம் பதவி களிற் போய் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். இச் சரித்திரம்,

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி யாறங்க மானார் போலு
மடியேனை யாளுடைய வடிக டாமே.

—திருநாவுக்கரசர் தேவாரம்.

எனவும்,

பேசத்தகாதெனப்பேயெருதும்பெருச்சாளியுமென்
றேசத்தகும்படியேறுவதேயிமையாதமுக்கட்
கூசத்தகுந்தொழினுங்கையுநுந்தையுநீயுமிந்தத்
தேசத்தவர்தொழுநாரைப்பதியுட்சிவக்களிறே.

—பதினோராந் திருமுறை.

எனவும்,

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே.

—திருஞானசம்பந்தர் தேவாரம்.

எனவும், மிகச் சுருக்கி விளக்கப்பட்டமை காண்க. விரிவு கந்தபுராணத்தா லுணர்ந்து கொள்க.

கயமுக சங்காரத்தின் பொருட்டு முரிக்கப்பட்ட தாகிய ஒரு கொம்பை ஏந்தியது, ஆணவம் கன்மம்

மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்குபவர் தாம் என்பதை அறிவித்தற்காகும். ஆன்மாக்களை அநாதியே பந்தித்த ஆணவமலமாகிய யானையைப் பாசத்தாற் கட்டி அங்குசத்தா லடக்கி, மறைத்த லென்னுங் கிருத்தியத்தைச் செய்பவர் தாம் என்பதை உணர்த்துவதற்காகப் பாசாங்குசங்களை ஏந்தினர் ஆணவ ரூபமாகிய கயமுகனுடைய சேனைகளைப் பாசத்தாற் கட்டிக் கணிச்சியா லடக்கி, அவன் மலவலி கெட்டுப் பெருச்சாளி ரூபமாக வர, நீங்காத ஞானத்தைக் கொடுத்துச் சுத்தனுக்கி வாகனமாம் பேற்றை அளித்து அடிமைக்கொண் டதனல், ஆணவமாகிய யானையை அடக்கி, ஆன் மாவை அடிமைக் கொள்ளுபவர் என்பது இனிது விளங்கும். கணபதியாகிய விநாயகக்கடவுளைப் பூசித்துப் பெறற்கரும் பேறுற்றவரும், அவரது திருவருளினலே தெய்வப் புலமை கைவரப் பெற்ற வரும் ஆகிய ஔவைப்பிராட்டியார்,

"கோடாயுதத்தாற் கொடுவினை களைந்து"

—விநாயகர் அகவல்.

எனவும், கச்சியப்ப முனிவர்,

"கண்ணி லாணவ வெங்கரி பிணித்தடக்கிக்
கரிசினேற் கிருகையு மாக்கும்
அண்ணலைத் தணிகைவரை வளராபத் சகாயனை
யகந் தழீஇக் களிப்பாம்"

—தணிகைப்புராணம்.

எனவும் திருவாய்மலர்ந்த திருவாக்குகள் பற்றியும் உணர்ந்து கோடற்பாலன.

"காப்பவனருளு மேலேன்" என்னுஞ் செய்யுளால் விநாயகக்கடவுளே சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்திய சுதந்திரர் என்பதும், பிரமா முதலிய மூர்த்திகட்கெல்லாம் முதல்வர் அவரே என்பதும் உணரப்படும். சிவபெருமான் பஞ்சகிருத்திய பதி தாம் என்பதை ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களினுலும் உணர்த்துதல் போல, விநாயகரும் துதிக்கை முதலிய ஐந்து திருக்கரங்களினுலும் உணர்த்துகின்றனர். "உன்னிடைப் பிறந்த வேதம்" என்னுஞ் செய்யுளால் ஆன்மாக்கள் பொருட்டு வேதாகமங்களைத் தோற்றுவித்தருளியவர் அவரே என்பது முதலியனவும் உணரப்படும். குடிலையானது அகரம் உகரம் மகரம் விந்து நாதமாய்ப் பிரிந்து, அகரத்தில் இருக்கு வேதமும், உகரத்தில் யசுர் வேதமும், மகரத்தில் சாம வேதமும், விந்துவில் அதர்வண வேதமும் தோன்றின என்று வாயுசங்கிதை செப்புமாறறிக.

விநாயகக்கடவுள் ஓர் கூறு கொம்புண்மையால் ஆண்போலவும், மற்ருெரு கூறு கொம்பின்மையால் பெண் போலவும், இரண்டுங் கூடியமையால் அலி போலவும் விளங்கலின், அவன், அவள், அது என்னும் ஆண் பெண் அலியாகிச் சராசரங்களாகிச் சுத்த சத்தாய், எல்லாமாய், அல்லவுமாய், யார்க்குஞ் சொல்லுதற்கரிதாய் விளங்கும் தற்பர சிவத்தினியல்பையும், அவர் கொண்ட கேவல வடிவம் இருபத்தைந்தனுள் ஒன்ருய்ச் சத்தி ஓர் கூருகவும், சிவம் ஓர் கூருகவும் அமைந்துள்ள

அர்த்தநாரீசுவர மூர்த்தத்தின் தன்மையையும் தம் வடிவாற் காட்டியருளுகின்றார். அது,

வெண்ணிலாக் கற்றை கான்று
விளங்குமோர் பிறைக்கோ டின்றி
யெண்ணிலோர் பாகங் கூந்தற்
பிடியென விருந்த வாற்றாற்
பெண்ணொரு பாகம் வைத்த
பிஞ்ஞக னுருவு காட்டு
மண்ணலங் களிநல் யானை
யடிமலர் சென்னி வைப்பாம்.

—கூர்மபுராணம்.

என அதிவீரராமபாண்டியர் கூறியவாற்றால் தெளிவாக உணரப்படுகின்றது.

---

# 3. அநந்தசாப நிவாரணமூர்த்தி

**வி**நாயகக் கடவுள் கயமுகாசுரனைச் சங்காரஞ் செய்தபின் ஆகுவாகனத்திலிவர்ந்து, தேவர்கள் சூழத் திருமால் பாம்பின் உருவாய்த் தவஞ்செய்து கொண்டிருந்த ஆலவனத்துக்கு எழுந்தருளினர். அங்கே ஓர் ஆலமரப் பொந்திலே தவஞ்செய்து கொண்டிருந்த திருமால் விநாயகக்கடவுள் எழுந்தருளிவந்ததை அறிந்து, விரைந்து எதிர்கொண்டு சென்று தரிசித்துத் துதிக்கப் பாம்புருவம் நீங்கியது. விட்டுணு தம்முடைய பழைய உருவத்தைப் பெற்று மகிழ்ந்து, சிவபெருமானுடைய திருவருளை உன்னித் துதித்து, "உமாதேவியார் சொல்லிய சாபத்தைத் தொலைத்த முதல்வரே! தேவரீர்

அடியேனுடைய பூசையை ஏற்றருளவேண்டும்'' என்று பிரார்த்தித்துப், பூசோபகரணங்களைக் கொணர்ந்து, அவரைப் பூசித்துத் தோத்திரஞ் செய்து, "சுவாமி! மார்கழி மாதத்துப் பூருவ பக்கச் சஷ்டியாகிய இத்திதியிலே அடியேன் தேவரீரைப் பூசித்தது போல யாவரும் தேவரீருடைய திருவடிகளையே புகலிடமென்று, நினைத்துப் பூசனை செய்திடவும், அப்படிப் பூசிப்போருடைய துக்கங்களையெல்லாம் தேவரீர் அன்றைக்கே நீக்கி, அழியாத செல்வத்தை அவர்களுக்குக் கொடுத்திடவும் வேண்டும். இவ்வரத்தை அடியேனுக்கு அருளுக'' என்றார். விநாயகக்கடவுள், "அவ்வாறாகுக'' என்றருள்புரிந்து, "உன் பூசையை மகிழ்ந்தேம்'' என்று கூறியருளினார். பின்னர் அவ்விட்டுணுவும் பிரமா முதலிய தேவர்களும் துதித்துச் செல்லப் பெருச்சாளி வாகனத்திலேறித் திருக்கைலாச மலையை அடைந்தருளினார்.

---

## 4. பிரணவமூர்த்தி

**வே**தமானது சிவபெருமானை முதல் இடை கடைகளிற் பிரகாசப்படுத்துகின்றது. முதலில் ஓம் என்று தொடங்குகின்றது. அது பிரணவம் என்று சொல்லப்படும். இதன் வடிவமே விநாயகக்கடவுள். வேதத்தின் முதலெழுத்து விநாயகருடைய சொரூபமாதலை அவரது திருமுக முணர்த்தும். அதனையே "கைவேழமுக''மென்று பெரியோர் கூறுவர். அது, "முந்தைவேத முதலெழுத்தாகிய எந்தை'' எனவும்,

"மூலமொழிப்பொருளாமெந்தை" எனவும், "தாரகப் பிரமமான மாக்கயமுகத்து வள்ளல்" எனவுங் கந்த புராணங் கூறுமாற்றானும் உணர்க.

பிரணவத்தின் வரிவடிவை முதற்கண் அறிவது மரபாம். முதலாம் இரண்டாம் உறுப்புகள் நட்சத்திரவடிவு தண்டவடிவுகளாக அமையப் பெற்றது பிரணவம் என்று காமிகாகமம் கூறு கின்றது. ஆகையால் அவ்விரண்டுறுப்புங் கலந்த வடிவம் ஊமை எழுத்தென்றும், மூலமனு என்றும், பிள்ளையார்சுழி என்றும், மௌனக்கரம் என்றும், மௌனக்குறி என்றுஞ் சொல்லப்படும். 'உ' என்னு மெழுத்து நாதவிந்துக்களின் வரிவடிவாம். இது ஓங்காரவாச்சியராகிய விநாயகரது துதிக்கை போலாம். இது,

"மோனமே குறியதா முதலெழுத் தருளிய"

—கந்தபுராணம்.

என்பதாலும்,

"கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதி யஞ்சலி செய்குவாம்"

—தாயுமானவர்.

என்னும் பாடலானும் உணரப்படும்.

இதுபற்றியே கணபதியை முதலில் வழிபடும் மரபை உலகங் கைக்கொண்டு அனுட்டித்து வருகின்றது. இதனையே சிவபெருமான் அவருக்கு அருளிச்செய்தாரென்று உண்மைநூல்கள் கூறும். விநாயகரும் சிவமும் சத்தியும் பிரணவசொரூபி

யாவர். விநாயகக் கடவுளைத் தம்மின் வேறுகாத சிவபெருமானையே ஓங்காரப்பொருளென்று வேதங் கூறும். "அஸ்துசதாசிவோம்" என்பதே அதுவாம். திருநாவுக்கரசு சுவாமிகளும், "ஓங்காரத்துட் பொருளானை" எனவும், "ஓங்காரத் தொருவன்" எனவுந் திருவாய்மலர்ந்துள்ளார். சிவத்தோடு அபேதமாய்ச் சத்தி என விளங்கும் விநாயகரது தாயை "உம" என்று வேதங் கூறி, "உமாசகாயம்" என்று சிவத்தைத் துதிக்கும். அ — உ — ம என்னும் பிரணவம் உம என்றபோது உ—ம்—அ எனத் திரிந்து விளங்கும். இதுபற்றியே கந்தபுராணத்திலும் "மூலோங்காரப் பொருளாயிருந்தாள்" எனக் கூறப்பட்டது. இதனாலும் விநாயகரும் சிவமும் சத்தியும் ஒருவரேயென்று பெறப்பட்டவாறு காண்க.

"ஊமை யெழுத்தொடு பேசு மெழுத்துறி
லாமை யகத்தினி லஞ்சு மடங்கிடு
மோமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே.

—திருமந்திரம்.

# 5. புராண பரிபாலனமூர்த்தி

**வா**தராயணர் என்னும் பெயர்பெற்ற வியாச முனிவர் சிவபெருமானுடைய அநுமதிப்படி சநற்குமார முனிவரிடத்தில் மாணுக்கக் கிரமமாகப் பதினெண்புராணங்களையும் ஓதியுணர்ந்தார். பின்பு, யாவருந் தம்மை நினைத்துத் தொடங்கிச் செய்கின்ற கருமங்களை விக்கினமின்றி நிறைவேற்றுந் தெய்வமாகிய விநாயகமூர்த்தியை வழிபடாது அப்புராண சரித்திரங்களைச் சுலோகரூபமாகச் சொல்லத் தொடங்கினுர். அவர் விக்கினேசுவரருடைய கிருபையைப்பெற்றுத்தொடங்காமையால் உண்மை ஞானத்தைப் பெருமல் ஊமரைப்போல வருந்தி மயங்கிப் பிரமதேவரிடம் போய்த் தமது குறையை விண்ணப்பித்தார். பிரமா வியாசரை நோக்கி, "முனிவனே! நீ வேதத்தை நான்காகப் பகுத்த போது, முதலில் பிரணவத்தை உச்சரியாதபடி வேதமோதுதல் முறையல்லவென்பதை உணர்ந்து முதலிற் பிரணவத்தைச் சொன்னுய்; பிரணவப் பொருளாயிருக்கும் விநாயகர் தம்மைப் பிரணவத் தினுற் தோத்திரஞ் செய்யத் திருவுள்ளமுவந்து இடையூறு சேராவண்ணங் காத்தருளினுர். இப்பொழுது வித்தியாகருவத்தினுல் விக்கினங்களை நீக்குங் கடவுளை மனம் வாக்குக் காயங்களினுல் வழிபாடு செய்யாமல் புராணஞ்சொல்லத் தொடங்கினமையால் இத்துன்பம் வந்து சேர்ந்தது. விநாயகக் கடவுளைப் பூசைசெய்யின் அவர் உண்மை ஞானத்

தைத் தந்து, எடுத்த கருமத்தை நிறைவேற்றுவார்" என்று உபதேசித்தார்.

வியாசமுனிவர் பிரமாவை வணங்கி விடை பெற்றுக்கொண்டு, ஒருவனத்திற்சென்று கணபதியைத் தியானித்துப் பன்னிரண்டு வருடந் தவஞ் செய்தார். விநாயகர் கிருபைகூர்ந்து காட்சி கொடுத்தருளினர். முனிவர் அன்புடன் நமஸ்காரஞ் செய்து, கண்களினின்றும் ஆனந்தஅருவி சொரிய, சரீரம் புளகங்கொள்ள, அகமுருகிச் "சச்சிதானந்த சொரூபரே! அடியேனது மலபாசத்தை நீக்கி, நீங்காத மெய்யன்பைத் தருதல்வேண்டும். பதினெண் புராணங்களையும் இடையூறின்றி நிறைவேற்றவும் கிருபை செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார். விநாயகக்கடவுள், "அவ்விதமே ஆகுக" என்று கிருபைசெய்து, மறைந்தருளினர். வியாசமுனிவர் தமக்குக் கணேசப்பெருமான் காட்சிகொடுத்தருளியவிடத்தில் ஒரு ஆலயமுண்டாக்கி, விநாயகரைப் பிரதிட்டைசெய்து, பதினெண் புராணங்களையும் இடையூறின்றி நிறைவேற்றினர். இதனை விநாயக புராணம் வியாசர் பிரமனையடுத்த படலத்தானும், வரம்பெறு படலத்தானும் உணர்க

புராணமாவது பரமசிவன் உலகத்தைப் படைத்தல் அழித்தல் முதலியவைகளைக் கூறும் வேதவாக்கியப்பொருளை வலியுறுத்தி பிரித்து அறிவிப்பது. சைவபுராணம் முதல் பிரமாண்ட புராணம் இறுதியாகிய பத்தும் சிவபுராணங்களாம். காருடபுராணம் முதல் பாகவதபுராணம் இறுதியா

கிய நான்கும் விஷ்ணுபுராணங்களாம். பிரமபுராணம் பதுமபுராணம் என்னும் இரண்டும் பிரமபுராணங்களாம். ஆக்கினேயம் அக்கினிபுராணமாம். பிரமகைவர்த்தம் சூரியபுராணமாம்.

வைஷ்ணவபுராணங்களிலும் பிறவிடங்களிலும் சிவன் எனப்படும் உருத்திரன் விட்டுணுவினிடத்திற் பத்திசெய்தார் என்றுவது, விட்டுணுவை வணங்கினார் என்றுவது அபகர்ஷமுடையவராகக் கூறப்படுமிடங்களில் அவர் சிவனுரது கேவலம் விபூதியாம். (அனுருத்திரராம்) என்று பராசரபுராணம் கூறுகின்றது. சிவபுராணக்கதைகள் சிறிதும் மறுவில்லாதன; அவை எவையும் பெருமை படைத்தனவாம். அவற்றுக்குச் சான்றுயுள்ளன வேதங்கள்; அவ்வுண்மையை அறிஞர்கள் வேதங்களில் ஆராய்ந்துணர்ந்து கொள்வார்களாக. சிவபுராணங்களை விடுத்து ஏனைய விட்டுணுபுராண முதலியன அவ்வத் தேவர்கள் செய்த செய்கைகளுள்ளே நல்லனவாயுள்ளன சிறிதாயிருப்பின் அவற்றை விரித்துப் பேசும். அவர்களிடத்திற் குற்றங்கள் காணப்படின் மறைத்துவிடும். மறைத்து விடுதலோடமையாது இல்லாத கதைகளையும் முகமனுக எடுத்துக் கூறும்; உலகத்துள்ளார் விட்டுணுபுராண முதலியவைகளைப் படித்திருந்தாலும் அவர்கள் சந்தேகங்கள் சிவபுராணங்களைப் படித்தாலன்றித் தீரா எங்ஙனமெனின், "அரசனுடைய அகண்டைசுவரியத்தைப் போய்ப் பாராத ஒவ்வொருவனும் தன் தன் செல்வத்தையே பெரிதென்று எண்ணுமாறு போலாம்" என்னும்

பொருள் தோன்றக் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணத்திற் கூறியிருக்கின்றனர்.

வேதப் பொருள்களை உள்ளபடி உணர்ந்து கொள்வதற்குப் புராணங்களே அங்கமாகின்றன. ஆரணம் முழுதையும் உணர்ந்த வேதியனேயாறும்,சிவபுராணத்தின்பொருளையுணர்ந்திலானாயின், வேதமானது அவனைப் பூமியிலே நம்மை வஞ்சிப்பவன் இவனும் என்று அஞ்சுகின்றது. ஆதலினாலே வேதத்தின் பொருளைப் புராணத்தால் அறியவேண்டும். அரதத்தாசாரியர் தாம் அருளிச்செய்த சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் சுலோகம் 117-ல் வேதப் பொருளை நிச்சயித்தற்குப் புராணம் அங்கமாம் என்று அருளினர். சிவஞான சுவாமிகளும் சிவஞானபோதபாஷ்யத்து முதற்சூத்திரத்து இரண்டாமதிகரண உரையில் "இனி உண்மையான் நோக்குவார்க்குச் சிவபுராணங்களெல்லாம் வேதப் பொருளையே விரித்தெடுத்தோதுதலிற் சிறந்த பிரமாணமெனவும், ஏனைய புராணங்கள் அங்ஙனம் அல்லாமையின் இவற்றோடு முரணியவழி முரணாதவாறு உய்த்துணர்ந்து பொருள் கொள்ளப்படும் எனவும்" என்றருளிச் செய்தனர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சிவபெருமானது பரத்தன்மையை விளக்குவன புராணங்களே என்னு முண்மையை,

வேத முதல்வன் முதலாக விளங்கிவைய
மேதப்படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூதமுதல்வன் முதலே முதலாகப் பொலிந்த
சூதனொலி மாலையென்றே கலிக்கோவை சொல்லே.

—தேவாரம்.

என்றருளிச் செய்தனர். சேக்கிழார் சுவாமிகளும் இத்தேவாரப் பொருள் அருளிச்செய்யுமிடத்தில்,

> வேத முதல் வனெனும் மெய்த்திருப் பாட்டினினே
> ராதியுல கோரிடர் நீங்கிட வேத்தவாடும்
> பாதமுதலாம் பதினெண் புராணங்க ளென்றே
> யோதென் றுரைசெய்தனர் யாவுமோதா துணர்ந்தார்.

என அவ்வுண்மையை நிலைநிறுத்தியருளியமை காண்க.

புறச் சமயத்தார் சைவ சாஸ்திரங்களின் உண்மையை உணராமல் புராணத்தைப் பொய்க்கதைகள் என்று புகலுதல் போலச், சைவருள்ளும் அங்ஙனம் கூறுவார் உளரேல் அவர்களுக்குச் சைவ சித்தாந்த சாத்திரங்களும், சைவத் திருமுறைகளும் பொய்யெனப்பட்டுச் சமய சாத்திரங்களுமின்றாய்ச், சமயமுமின்றாய் முடியுமென்க. எதனால் எனின்,

> நாயகன் கண்ணயப்ப நாயகி புதைப்ப வெங்கும்
> பாயிரு ளாகி மூடப் பரிந்துலகினுக்கு நெற்றித்
> தூயநேத் திரத்தினாலே சுடரொளி கொடுத்த பண்பிற்
> றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேசதென்னுர்.

—சிவஞானசித்தியார்.

என்றற் றொடக்கத்தனவாகச் சைவசித்தாந்த மெய்ச் சாத்திரங்களுட் புராணசரித்திரங்களே அனுபவப் பயனுக்கும் பிறவற்றுக்கும் பலப்பல விடங்களிலும் கூறப்படுதலானும் "உயர் காயத்திரிக்குரிய பொருளாகலின்' என்னுஞ் செய்யுளுட்போந்த இருபத்திரண்டு ஏதுக்களுட் காயத்திரியை ஒழித்தொழிந்த இருபத்தொரு ஏதுக்

களும் புராண சரித்திரங்களே யாகலானும், சித்தாந்த சாத்திரங்களும் திருமுறைகளும் பொய்யெனப்பட்டுச் சமய சாஸ்திரங்களும் இன்றாய் முடியும். முடியவே, அச்சாத்திரங்களால் உணர்த்தப்படும் சைவசித்தாந்த சமயமும் இன்றாய்முடியும் ஆதலினால் என்க. இத்துணை விசேடமுடையன சிவபுராணங்கள். சிவபுராண சிரவண விசேடத்தினாலே பாவம் நீங்கும்; புண்ணியம் வரும்; பத்தி வாய்க்கும்; மகாதேவருடைய அருளுண்டாகும்; தீமையெல்லாங் கழன்று மேற்கதியுண்டாகும்; ஆதலினாலே திருக்கோயில்களிலும், மடங்களிலும், சோலைகளிலும், நதிக்கரைகளிலும், வேள்வி நடக்கும் இடங்களிலும், சுத்தமான இடங்களிலும், மற்றும் புண்ணியம் நிறைந்த இடங்களிலும் புராணங்களை ஓதுதல் சிறந்த புண்ணியமாகும்.

---

## 6. பரமாசாரியமூர்த்தி

மெய்கண்டதேவர் திருவெண்ணெய்நல்லூர்ச் சிவாலயத்திற் சுயம்பு மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாருடைய திருச்சந்நிதியிலே வேதசிவாகமப் பொருளை உணர்ந்தும், சிவஞானபோதத்தைத் தெளிந்து நிட்டை கூடியும் வருங்காலத்து, அப்பொல்லாப்பிள்ளையார் மெய்கண்ட தேவருக்குச் சூர்ணிகையைச் செவியறிவுறுத்தினர் சூர்ணிகையும் மெய்கண்டதேவர் சிவஞானபோதத்துக்கு அருளிய வார்த்திகமும்

பொருளால் ஒற்றுமையுடையனவாம். சூர்ணிகை என்பது சூத்திர முதலியவற்றின் பொருளை இலகுவாகச் சுருங்கிய வசனரூபமாயுரைப்பது எனப் பொருள்படும். வார்த்திகம் என்பது பொழிப்புரை எனப்பொருள்படும்

பொள்ளார் பொல்லார் என மரீஇயிற்று. உளி முதலியவற்றாற் போழ்ந்து செய்யப்படாதவர் என்பது கருத்து. எனவே, சுயம்பு மூர்த்தி என்றதாம்.

அல்லாத பரசமய வலகைத் தேர்விண் டகல
வகல்புனற் பெண்ணை யயல்சூழ் வெண்ணெய்ப்
பொல்லாத விபமுகத்துப் புத்தே டன்பாற்
புனிதசிவா கமப்பொருண்மை பொருந்த வாய்ந்து
நில்லாத நிலையிதுமற் றென்று மொன்றாய்
நிற்குநிலை யிதுவென மெய்ந் நெறிதேர்ந்தி யாரும்
வெல்லாத சிவஞான போதஞ்சொன்ன
மெய்கண்டான் சரணமுடி மீதுகொள்வாம்.

— சேதுபுராணம்.

என நிரம்பவழகிய தேசிகராற் கூறப்பட்டவாற்றானு முணர்க.

# 7. திருமுறை கண்டமூர்த்தி

சையமலையின்கண்ணே தோன்றிப் பெருகும் திவ்விய தீர்த்தமாகிய பொன்னிநதி சூழ்ந்த சோழ நாட்டின் திலகமென விளங்கும் திருவாரூர்த் தியா கேசரது திருப்பாதங்களைப் பணிந்து செங்கோ லோச்சும் அபயகுலசேகர ராச ராசமன்னர், தமது சபையில் வரும் அன்பர் ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமி கள் முதலிய நாயன்மார் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்துள் ஓரோர் பதிகங்களை ஓதக்கேட்டு, கையிரண்டும் உச்சிமேலேற, கண்ணீர் கரைந் தோட, மெய்ம்முழுதும் புளகம் போர்ப்ப, சிவபெரு மானுடைய மலர்ப்பாதங்களைத் துதித்து, தேவாரத் திருமுறைகளைத் தேடி இல்லாமையினாலே கவலை யுறுவாராயினர்.

அங்ஙனம் இருக்குங் காலை திருநாரையூரிலே ஓர் ஆதிசைவப் பிராமணருக்கு உலகம் ஈடேறச், சைவம் வாழ, ஒரு சிறுவர் தோன்றினார். அவர் உபநயநஞ் செய்யப்பெற்று, வேத முதலிய கலை களைப் பயின்றுவருநாளில், பிதாவாயினார் ஒரூர்க்குச் செல்ல, அவர் கட்டளைப்படி (சுயம்புமூர்த்தி) பொல் லாப்பிள்ளையாருக்குத் திருமஞ்சன முதலியன வெல்லாஞ்செய்து, நிவேதனத்தை அவர் திருமுன் னிலையில் வைத்து, "எம்பெருமானே! இதனைத் திரு வமுது செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார். பிள்ளையார் திருஅமுது செய்யாதிருப்பது கண்டு, அப்புத்திரர் வெம்பி, அடியேன் ஏதேனுந் தவறு

செய்ததுண்டோ? அடியேன் நிவேதித்ததை உண்ணாதது என்னை?" என்று தமது தலையினை மோதப் புகுந்தார். அப்பொழுது பிள்ளையார் "நம்பீ! பொறு" என்று தடுத்து அவ்வமுது முழுவதையும் உவந்து திருவமுது செய்தருளினார்.

நம்பியாண்டார் நம்பி "எந்தையே! அடியேன் இனிப் பாடசாலைக்குச் சென்றால் உபாத்தியாயர் அடிப்பார்; ஆதலாலே வேதமுதலிய கலைகளைத் தேவரீரே ஓதித் தரவேண்டும்" என்று விண்ணப்பித்தார். பரமாசாரியராகிய விநாயகக்கடவுளும் ஓதுவிக்க, நம்பியாண்டார்நம்பி ஓதி மகிழ்ந்தார். அதுபோல மற்றைநாளும் நிகழ, நம்பியாண்டார் நம்பி வீற்றிருந்திடுஞ் செய்தியை வேந்தர் கேட்டு, திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாருக்கு நம்பியாண்டார்நம்பி நிவேதிக்கும்படி வாழைப்பழம், தேன், அவல், எள்ளுண்டை முதலியவற்றோடு அந்நகரில் வந்து சேர்ந்தார்.

அங்ஙனம் வந்தவர் நம்பியினுடைய பாதங்களை வணங்கி, "இவற்றைப் பொல்லாப்பிள்ளையாருக்கு இப்பொழுதே நிவேதிக்க" என்று சொன்னார். நம்பி, அரசர் கூறியவற்றைக் கேட்டு யானைமுகக் கடவுளுடைய திருவடிகளை வணங்கி, "அரசன் தொகுத்த இப்பொருள்களை நிவேதித்தருளுக" என்று படைத்தனர். விநாயகர் துதிக்கையினால் ஏற்றுத் திருவமுது செய்தருளினார். அரசன் அகம் நெகிழ, கண்ணீர் வார, நம்பியினுடைய பாதங்களில் வணங்கி, "மறையவரே! சமயகுரவர்

மூவருடைய திருநெறித்தமிழும், அவர்தஞ் செய்தியும் பூமியில் விளங்கச் செய்தருளுக" என்று போற்றி நின்றார். நம்பியாண்டார்நம்பி அரசன் வேண்டுகோட்கு உடன்பட்டு, ஆநந்தவெள்ளஞ் சொரிய, பொல்லாப்பிள்ளையாருடைய பாதங்களில் வணங்கி விண்ணப்பஞ்செய்தார். பிள்ளையார், "நம்பி! தேவாரத் திருமுறைகள் 'சிதம்பரத்திலே மூவர் கையடையாளமுள்ள ஓர் அறையில் உள்ளன' என்று திருவாய்மலர்ந்து, அவற்றையருளிய, நாயன்மார் சரித்திரத்தையும் அருளிச் செய்தார். நம்பியாண்டார்நம்பி அதனைச் சோழ ராசாவுக்கு உபதேசித்தார். நம்பியாண்டார்நம்பியுடன் சிதம்பரஞ் சார்ந்து, கனகசபைக்கு மேற்றிசையிலுள்ள அறையினெதிரே சமயகுரவர் மூவரையும் உலாவருவித்து நிறுத்திக்கொண்டு, தில்லைவாழந்தணருடைய அநுமதிப்படி திருக்கதவைத் திறந்து பார்த்தார். பார்த்தபொழுது வன்மீகம் மூடியிருப்பது கண்டு கவலையுற்றார். அப்பொழுது 'இக்காலத்துக்கு வேண்டும் பதிகங்களை வைத்து ஏனையவற்றை மண்மூடச் செய்தோம்' என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அரசர் கவலை நீங்கி மூடாது எஞ்சிய ஏடுகளை எடுத்து, நம்பியாண்டார்நம்பியினுடைய பாதங்களை வணங்கி, அவரைக் கொண்டு தேவாரம் முதலிய அருட்பாக்களைப் பதினொரு திருமுறைகளாக வகுப்பித்தனர். நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி முதலிய பிரபந்தங்களைப் பாடித், திருநாரையூரில் சிலகாலம் வீற்றிருந்து சிவபதம் அடைந்தார்.

திருமுறையிருக்குமிடம் தெரித்தருளினமை யால் விநாயகருக்குத் திருமுறைகண்ட பிள்ளையார் என்னுந் திருநாமம் வழங்குவதாயிற்று.

---

# 8. வரம்பெறு மூர்த்தி

**க**ச்சியிலுள்ள அநேகதங்காவதம் என்னுந் தலத்திலே விநாயகமூர்த்தி அநேகபேச்சுரர் என்னுந் திருநாமத்தோடு சிவலிங்கந்தாபித்துப் பூசித்தார். சிவபெருமான் உமாதேவி சமேதராய்த் தோன்றியருளினர். விநாயகக்கடவுள் அவர்களை நமஸ்காரஞ் செய்தார். அவர்கள் கருணை பாலித்தனர். சிவபெருமான் விநாயகரைத் தமது வலத் தொடையின்மேலிருத்தி, அவரை நோக்கி யாவரேயாயினும் யாதொரு கருமத்தைச் செய்யத் தொடங்குமுன் அது இடையூறின்றி முடிவுபெற வேண்டுமென்று உன்னை வழிபடுவாராயின் அவர் கருத்தின்படி அதனை முற்றுப்பெறச் செய்குதி; உன்னை முன்பு வழிபடாமற் செய்வோருடைய கருமங்களுக்கு இடையூறு செய்குதி; திருமாலாதியாந் தேவர்களுக்கும் மற்றைய ஆன்மாக்களுக்கும் நம்முடைய பூதகணங்கட்கும் பிறர்க்கும் அருளோடு நாயகனுயிருக்குதி" என்று அளவற்ற பெருங் கருணையால் உச்சிமோந்து எடுத்துப் புல்லியருளினர். இச்சரித்திரம் காஞ்சிபுராணம் அனேக தங்காவதப் படலத்தாலறிக. கணங்களுக்கு அதிபர் ஆதலினலன்றோ கணபதி கணேசர் கண

நாயகர் என்னுந் திருநாமங்களையும், துட்டர்களையும் விக்கினங்களையுஞ் சிட்சித்தலானும் சுதந்திரர் ஆகையால், தமக்கு இதரரான பிரபு இல்லாமை யானும் விநாயகர் என்னுந் திருநாமத்தையும் பெற்றனர் பிள்ளையார் என அறிந்துகொள்க.

---

## 9. விக்கினேசுவர மூர்த்தி

**த**ம்மை நினையாதவர்களுக்கு விக்கினங்களை உண்டுபண்ணுதலானும், தம்மை நினைத்தவர்களுக்கு விக்கினங்களைப் போக்குதலானும் விக்கினேசுவரர் என்னுந் திருநாமத்தை மூத்த பிள்ளையார் பெற்றனர்.

திருமால் முதலிய தேவர்கள் தேவாமிர்தம் பெறுவதற்காகத் திருப்பாற்கடலைக் கடைந்த பொழுது, விக்கினேசுவரரை வழிபாடு செய்திலர். அக்காரணத்தினல் மந்தரமாகிய மத்துக் குலைந்து, பாதலத்திலாழ்ந்தது. தேவர்கள் அவ்விடையூற்றைக் கண்டு இது விக்கினேசுவர வழிபாடின்மையால் வந்ததென்றறிந்து அவரைப் பூசித்தார்கள். உடனே அக்கடவுளின் அருளால் மந்தரமாகிய மத்து முன்போல நிலைபெற்றது. தேவர்கள் மனமகிழ்ந்து பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்றுர்கள். இச்சரித்திரம் கந்தபுராணம் முதலிய நூல்களுட் கண்டது.

மெய்கண்டதேவர் சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும் தமக்கு இடையூறு சிறிதுமணுகாமை

அறிந்தாராயினும் ஆன்றோர் ஆசாரம் பாது காத்தற்பொருட்டும் முதற்கண் இடையூறு நீக்குதற் குரிய கடவுளை வாழ்த்துவதாகிய மங்கல வாழ்த் தைச் சிவஞானபோதத்தில் அருளிச்செய்தார். அது;

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

என்பதேயாம்.

சைவசித்தாந்தத்திலே விநாயகரை எவ்விடத் தும் எப்பொழுதும் முதலில் வழிபடுக என்னும் நியமம் உள்ளது. விநாயகர் இடரைப் போக்குபவர் என்பதும் முதலில் வழிபடுதற்குரியவர் என்பதும்,

"குமரனும் விக்கின விநாயகனும்.............
போற்றிசைப்ப"

—அப்பர் சுவாமிகள்.

எனவும்,

"தனதடி வழிபடு மவரிடம்
கடிகணபதி"

—சம்பந்த சுவாமிகள்.

எனவும்,

"இயம்புநா லிருந்தமிழின் செய்யுளாற்ரு
லிடையூறு தீர்ந்தினிது முடியவேண்டித்
தயங்குபே ரொளியாகி யெங்குநின்ற
தலைவனுர் மலைமாது தன்ஞேடாடிப்

பயந்தவைங்கர நாற்றேண் முக்கணிருபாதப்
பரியதொரு நீள்கோட்டுப் பெரியபண்டிக்
கயந்தனடிக் கமலங்க ணயந்து போற்றிக்
கருத்தி லுறவிருத்திக் காதல்செய்வாம்.

—அருணந்திசிவாசாரியர்.

எனவுங் கூறியருளுமாற்று னுணர்ந்துகொள்க.

"திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கும்
ஆதலால் வானேரு மானைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை."

—கபிலதேவர் மூத்தநாயனர் திருவிரட்டைமணிமாலை.

என அருளியதூஉம் காண்க. இன்னும், விநாயகப் பெருமான்,

"வந்து வந்தனை செய்து முன்போயினன் மாதோ"

—திருக்கல்யாணப் படலம் : கந்தபுராணம்.

எனக் கூறப்பட்டதும் விநாயகர் முதலில் வணங்கப் படுபவர் என்பதை உலகினர்க்குணர்த்திய உண் மையேயாம்.

# 10. அச்சறுத்தருண் மூர்த்தி

திரிபுர சங்காரத்தின் பொருட்டுத் தேவர்களால் அமைக்கப்பட்ட பூமியாகிய தேரின்மீது சிவபெருமான் இவர்ந்து, பிரமாவை நோக்கித் "தேரை ஓட்டுக" என்றாஞ்ஞாபித்தார். பதுமாசனர் நான்மறைப் புரவியைச் செலுத்தினர். இரதம் நிலை பிரிந்திலது. பிரமர் மத்திகையினாற் குதிரைகளின் மீது அடித்தார். குதிரைகள் தங்களால் ஆன மட்டும் பாய்ந்து செல்ல முயன்றும் தேரானது நின்ற நிலையினின்றும் அசையவில்லை. ஆண்டுள்ள தேவர் முதலிய யாவரும் அதனைக் கண்டு, மனத்தில் ஆலோசித்தவர்களாய், இது யானை வதனமுடைய கணேசப்பெருமான் செயலென்று மனம் வருந்தினார்கள். வருந்திய அமரர்கள் பிரமாவோடும் கணபதியைப் பூசித்தார்கள். முற்றறிவுள்ள கயமுகப்பெருமான் மூஷிக வாகனத்திற்றோன்றியருளினர்.

அப்பொழுது தேவர்கள் புகழ, தும்புருநாரதர் பாட, தேவதுந்துபி முழங்க, முரசோடு மத்தளம் அதிர, பேரிகை சப்திக்க, வலம்புரி கோஷிக்க, துளைக்கருவிகளின் ஒலி அட்ட திசைகளிலும் பரவ, பிரளய வெள்ளம் உடைத்துப் புரண்டு செல்லும் வேகம் போல, உருளினல் மலைத்தொகுதி அதிர, வலிய இரதமானது விரைந்து சென்றது. தேரானது நிலை பிரியாது நின்ற இடம் திருஅச்சிறுபாக்கம் என்று சொல்லப்படும். இறுதல்—முரிதல்;

பாக்கம்—ஊர் இச்சரித்திரத்தை உபதேசகாண்டம் திரிபுர விசயச்சருக்கத்திற் பரக்கக் காண்க.

"முப்புர மெரிசெய்த வச்சிவ னுறைரத
மச்சது பொடிசெய்த—அதிதீரா"

—அருணகிரிநாத சுவாமிகள்.

என்று திருவாய்மலர்ந்தருளினர் விநாயகக் கடவுளுக்குக் கொடுத்த வரம் தம்மையுந் தொடரும் வலியும் உண்மையும் உடையதென்பதைச் சிவ பெருமான் இதனுல் வெளியாக்கினர். சிவபெருமான் பிதாவும் விநாயகர் புத்திரருமாக உண்மை நூல்கள் செப்பும்.

"கரியின் மாமுக முடைய கணபதி தாதை"

—சர்பந்நர்.

எனவும்,

"தண்டகமா முகத்தி றற்குத் தாதை காண்"
"கைவேழ முகத்தானைப் படைத்தார் போலும்"

—அப்பர்.

எனவும் வருந் திருவாக்குக்களை நோக்கி இவ்வுண்மை தெளிக. பிதாவுக்குப் பிள்ளை இடர் விளைத்தல் எங்ஙனமெனில், கூறுதும்: பிதா பிள்ளை என்றது அருள் நாடகமாம் என்றறிக. பூவும் பூவினது நிறமும் பூவினது மணமும்போலச் சிவனுஞ் சத்தியாரும் சிவகுமாரரும் எண்ணப்படுதல் சைவாகம நூற்றுணிபாம். ஆதலால் அவர்தம்மாட்டு உயர்வு தாழ்வு கற்பித்தல் குற்றமாம். ஒரு பொருளே மூன்ருகப் புகழப்படுதல் ஆன்மாக்களது பிரயோசனங் குறித்தேயாம். இதனுல் பிதாவாயிருந்து அனுக்கிரகித்தலும், பிள்ளையாயிருந்து

இடர்விளைத்தலும் பிறர் பிரயோசனங் கருதி யென்பது பெறப்பட்டது. அவனே மகேசன்; அவனே உமை; அவனே விநாயகன்; அவனே கந்தன் என அதர்வ சிரோபநிடதமும், "நீயே பெண்; நீயே ஆண்; நீயே குமரன்" என சுவேதா சுவதர உபநிடதமும், "என்னைக் கன்றினை" என அப்பர்சுவாமிகள் தேவாரத் திருவருட்பாவும்,

"தனதனற் றோழா சங்கரா சூலபாணியே
தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கண்மூன் றுடையதோர் கரும்பே
யனகனே குமர விநாயக சனக
வம்பலத் தமரசே கரனே
யுனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனே னுகருமா நுகரே."

—திருமாளிகைத்தேவர்: திருவிசைப்பா.

எனவும்,

"ஒருமையா லுணருவோ ருணர்வினுக் குணர்வதாம்
பெருமையா னெங்கணும் பிரிவரும் பெற்றியா
னருமையா னேவரு மடிதொழுந் தன்மையா
னிருமையா மீசனே யென்னநின் றருளுவான்."

—கந்தபுராணம்.

எனவும், சிவனே விநாயகரென்று தெற்றென உணர்த்தி நிற்பது காண்க.

# 11. மூலாதாராதிப மூர்த்தி

குய்யத்துக்கும் குதத்துக்கும் நடுவே குண்டலினி வட்டவடிவாயிருக்கும் அதன் நடுவில் முக்கோண மிருக்கும். முக்கோணத்தின் நடுவில் வசஷஸ என்னும் நாலிதழ்க்கமல மிருக்கும். அதன் நடுவில் பிரணவாக்கர மிருக்கும். அதில் விக்கினேசுவரர் யானைமுகத்தையும், செந்நிறத் திருமேனியையும் உடையவராய், அபயவரத கரங்களும், பாசாங்குசங் களைத் தரித்த திருக்கரங்களும் உடையவராய் மூஷிக வாகனராய், வல்லபர்சத்தியுடன் கூடினவ ரர்ய் எழுந்தருளியிருப்பர்.

மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு
மாமலர் நாலினும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தி னுள்ளே
ஓமென விநாயகன் உலாவி நின்றனே.

—திருமந்திரம்.

பாசத்தையும் அங்குசத்தையும் ஏந்தியது தம்மைக் கட்டுபவரும் செலுத்துபவரும் பிறிதொரு வர் இல்லை யென்பதை உணர்த்துவதற்காகும்.

செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

"ஏர் கொண்ட தன்னைத் தளைப்பவரு
மூருநரு மிலரென்பது தேறற்
கெடுத்த வெம்பாச மோ டங்குசந்
தன்கரத் தேந்தி."

—சிவஞானசுவாமிகள்

என்று கூறியுள்ளார்.

ஆணவம் கன்மம் மாயையாகிய மும்மதமுற்று, ஞானமாகிய தூணை அறமுரித்து, அன்பாகிய சங்கிலியை உதறி, திருவருளாகிய கூடத்தினின்றும் நீங்கி, இருநூற்றிருபத்துநான்கு புவனங்களாகிய கடிய காட்டில் ஓடி, எப்பாகர்க்கும் அடங்காதன வாய் இயங்குகின்ற உயிர்களாகும் யானைகளை விடாது தொடர்ந்து பிணிக்கும் வலியுடையன அங்குசபாசங்களென அறிக.

"மும்மல மாமதமுற்றுப் போத முழுத்தறி யறவீசி
முகிழ்த்தல ரன்பின் சங்கிலி யுதறி முதிர்ந்தவ ருட்கூடத்
திம்மென நீங்கி வெளிக்கொடு புவன மெனுங்கடுவனமோடி
எப்பாகர்க்கு மடங்கல வாகி யியங்கு முயிர்க் கரிகள்
தம்மை விடாது தொடர்ந்து பிணிப்பத் தகுமங் குசபாசம்
தாங்குதல் கண்டும்"

பக்குவ முதிர்ச்சியாற் சிவபுண்ணியம் நிரம்பி மலபரிபாகம் பிறந்து, சிவசத்தி பதியப்பட்டு, இருவினையொப்புப் பழுத்த ஆன்மாக்களது பிறவி நீக்கும்படி ஞானகுருவாய்வந்து அடிமைக்கொள்பவர் விநாயகரே என்பதை உணர்த்துவது அவருடைய ஒரு திருக்கரமாம்.

முற்பிறவிகளிலே ஒன்றன்பின்னொன்றாகிய படி முறையானே சரியை முற்றிய பின் கிரியையும், கிரியை முற்றியபின் யோகமும் அனுட்டித்து முற்றுப்பெற்றபின் அம்மூன்றும் முற்றுதலால் மலபரிபாகமும் சத்திநிபாதமும் தோன்றும். மலபரிபாகமாவது: மலசத்தி தேய்தல்; அதாவது ஆணவமல காரியமான மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்னும் ஏழு

கெட்ட குணங்கள் ஆன்ம அறிவைவிட்டு நான்கு பாதமாக நீங்குதல். **மோகம்** - குருவினாலும் நூலினாலும் தீயவென்றறிந்தவற்றில் நீங்காமல் நிற்கும் மயக்கம். **மதம்** - தன்னைப்போல ஒருவருமில்லையென மதித்தல். **இராகம்** - கிடையாத பொருளினிடத்து ஆசைப்படுதல். **கவலை** - கிட்டிய பொருள் பிரிந்தபொழுது வருந்துதல். **தாபம்** - சுற்றத்தை விட்டுப் பிரிந்ததற்கும் பிரிவதற்கும் ஆற்றாமை. **வாட்டம்** - அவ்வாற்றாமையால் மலர்ச்சியின்றி வாடுதல். **விசித்திரம்** - எச்செயலும் வினையின் வழியாய் நிகழ்வதென்றெண்ணாது தான் செய்ததாகவும் பிறர் செய்ததாகவும் எண்ணுதல். **சத்திநிபாதம்** - சத்தி பதிதல்; **சத்தி** - திருவருள்; **நிபாதம்** - பதிதல். **சத்திநிபாதமாவது:** ஆன்மாவினது ஞானத்தைத் தடுக்கும் ஆணவ மலசத்தி நழுவும் அவசரத்தில் முற்பிற்பாடறச் சிவத்தினது சிற்சத்தி பதிந்து அவ்வான்மாவினது நித்தியஞானக்கிரியையை விளக்குவதாம். சத்திநிபாதம் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். [தீவிரதரம் எனினும் அதிதீவிரம் எனினும் ஒக்கும்] **மந்ததரமாவது:** நமக்குப் பெறுபேறுயுள்ள பதி ஒருவர் உண்டென்று அறிவொழிந்திருத்தல். **மந்தமாவது** அப்பதியை அடைதற்கு வழி எங்ஙனமென்றாராய்தல். **தீவிரமாவது** அங்ஙனமாராய்ந்தறிந்த பதியை அடையும் பொருட்டு அதற்குத் தடையாயுள்ள பிரபஞ்சத்தை அகத்தான் வெறுத்துப் புறத்தாற் றழுவுதல். **தீவிரதரமாவது:** அப்பிரபஞ்சத்தை அகம் புறம் என்னும் இரண்டானும் முற்றத்

துறந்து, ஞானசாரிய ரொருவரையே பொருட் படுத்துத் திரிகரணங்களினாலும் வழிபடுதல். இருவினையொப்பாவது: நல்வினை தீவினை என்னும் இருவினைகளும் பொன்விலங்கும் இரும்பு விலங்கும் போலப் பிறப்பு இறப்புக்களிற் கட்டுப்படுத்துந் தன்மையிற் சமமுடையன வாகுமென ஆன்ம அறிவின்கண் விளங்கி, அவ்விருவினைகளையும் ஒப்ப நாடி உவர்த்துவிடுதலேயாம். மேன்மேல் முறுகி வளர்வனவாய சரியை முதலிய தவங்களால் அறம் பாவம் என்னுமிரண்டும் நேராக ஒத்தால் அச் சரியை முதலிய தவத்தின் முதிர்ச்சியால் ஞான குருவைத் தேடி அடைந்து ஞானத்தை அடைவர்.

கொடுப்பவரும், அனுபவிப்பவரும், உலகரூபியும், எல்லாப்பொருள்களிலும் வியாபித்திருப்பவரும் விநாயகரே. நாம் அவருக்கு அடிமை என்றறிந்து, மல வாசனை நீங்குதற்பொருட்டும், ஆன்மா சீவோபாதியைப் பொருந்தாமல் அதற்கு அதீதமாய் அலைவற்று நின்மலமாயுள்ள விநாயகரின் சலனமற்று இருக்கும்படியும் உயிரும் உடம்பும் பொருளும் கடவுளுடைமை எனத்திருவருளால் அறிந்து, தானஞ்செய்து கொடுக்க அங்கீகரிப்பது வரதகரமாம்.

### செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

"பக்குவமு திர்ந்துசிவ புண்ணியநி ரம்பிமல
பாகம்பி றந்து சத்தி
பதிந்துவினை யொப்புப் பழுத்தவர்கள் பந்தநோய்
பாற்றுமொரு செங்கை மலரும்

அக்கருணை யடியவர்க ளுயிருடன் பொருள்காய
மாவெவ் வகைப்பந் தமும்
அங்கீக ரிக்குமோர் கைமலரும்.''

—சிவஞானசுவாமிகள்.

---

## 12. சர்வலோக நாயகப்
# பிரதட்சிணமூர்த்தி

முன்னொருகாலத்து ஆயிரம் நரம்புகளையுடைய மகதி யாழில் வல்ல நாரதமுனிவர் சத்திய லோகத்திற் போய், பிரமாவை வணங்கி மகதி யாழை யெடுத்து அன்பிலாழ்ந்து, விரல்கள் நரம்புகளின் மீது தடவ, வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்னும் உறுப்புக்கள் எட்டினுலும், பருந்தினியக்கமும் நிழலும்போலப் பாடினுர். பிரமா தலையை அசைத்து மகிழ்ந்து, தமது கையிலிருந்த மாதுளம் பழத்தைக் கொடுத்தார். நாரதமுனிவர் அதனை ஏற்று இது சிவபெருமானுக்கே உரியது என்று கூறினுர். பிரமா—''நம் கருத்தும் அவ்விதமேயாகும்'' என்று சொன்னுர். நாரதமுனிவர் அவ்விடத்தில் நின்றும் விடைபெற்றுச் சென்று சிவசந்நிதானத்தில் அம்மாதுளம் பழத்தை வைத்து வணங்கினுர். சிவபெருமான் விருப்புடனெடுத்து நாரதர்க்கு நல்லருள் புரிந்து விநாயகக்கடவுளையும் சுப்பிரமணியக்கடவுளையும் பார்த்துப் புன்னகைசெய்தனர். விநாயகக்கடவுளும், சுப்பிரமணியக்கடவு

ளும் வந்து தமக்கு அப்பழத்தைக் கொடுக்கும்படி வேண்டினர். சிவபெருமான் அவர்களை நோக்கி, உம்மிலெவர் ஒரு கணத்துள் பிருதுவி முதல் நாத மீருகிய உலகங்களை யெல்லாம் வலம் வருகின்ருரோ அவருக்கே இப்பழம் உரியதாகும்" என்று சொல்லி யருளினர். சுப்பிரமணியக்கடவுள் மயில்வாகனத்தி லிவர்ந்து எல்லா உலகங்களையும் ஒரு நொடியிற் கண்டு திருக்கைலாசத்தை அடைந்தார். சுப்பிர மணியக்கடவுள் உலகை வலம் வந்து கைலை சேர்வ தன் முன்னரே, விநாயகக்கடவுள் சர்வலோகங் களிலும் பாலும் நீரும், வெளியும் காற்றும், உடலும் உயிரும், கண்ணொளியும் சூரியனொளியும் போலப் பிரிப்பின்றி அத்துவிதமாக வியாபித்து நிற்குந் தன்மையாரை வலம்வந்து, "உலகங்களிலும் பல வகைப்பட்ட ஆன்மாக்களிலும் ஒருமித்து நிறைந்து விளங்கும் ஒரு பொருள் உண்டென்று சொல்லுவது தேவரீரல்லாமல் வேறென்றுண்டோ? தேவரீரை வலம் வந்தது உலகத்தைச் சுற்றியதனேடொக்கும்" என்று கூறினர். கூறுதலும் சிவபெருமான் விநாயகக்கடவுள்கையில் தம்முடைய கையிலிருந்த மாதுளங்கனியைக் கொடுத்தருளினர். (சில நூல் மாங்கனியைக் கொடுத்தருளினர் எனக்கூறும்.)

மலஞ் செய்த வல்வினை நோக்கி யுலகை வலம் வருமப்
புலஞ் செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடை மேற்
சலஞ் செய்த நாரைப் பதியரன் றன்னைக் கனிதரவே
வலஞ் செய்து கொண்டம தக்களிறே யுன்னை வாழ்த்துவனே.

—நாரையூர் திருவிரட்டைமணிமாலை.

# 13. ஆபத்சகாய மூர்த்தி

"களவெனு மின்பக் கடற்றுறை
வழக்கமு முலகில்
நாட்டிய நுதலுங் கருத்தொடுந் தமியே
நண்ணினன் வள்ளிமால் விளங்கல்."

—தணிகைப்புராணம்.

எனக்கூறியபடியே, உலகத்திலே களவொழுக்கம் நிகழ்தற்பொருட்டுத் திருவுள்ளங் கொண்ட அறுமுகக் கடவுள் வள்ளிமலையை அடைந்தருளினர். அடைந்தருளிய பெருமான் வள்ளியம்மையார் முன் பல திருவிளையாடல்களைச்செய்து இரந்தும், அவர் இசையாதவராயினர். அப்பொழுது குமாரக் கடவுள் பாங்கன் வழியாகப் புணருகின்ற மன்றலை மதித்து, தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது தணிகைமலையில் எழுந்தருளியிருக்கும் ஐந்துகரத் தெந்தையாகிய ஆபத்சகாய விநாயகரை நினைத்தலும், அவர் தோன்றிப் பாங்கனும் முறைக்கணின்று பல கிளவிகளைக் காட்டியருளி ஒரு வேழ வடிவமானர். வேழமானது மும்மதநீர் பாய, நாற்கால் களிற் பட்டன தூளியாகத், தருக்களைச் சாய்த்துக் குவடுகளை முரித்து வள்ளியம்மையாருக்கு நேரே வந்தது அவர் அவ்வியானையைக் கண்டு அஞ்சிச் சுப்பிரமணிய சுவாமியைக் கிட்டி "எந்தையே! இவ்வியானையால் வரும் இடையூற்றை நீக்கி, என்னைக் காத்தருளுக" என்று அவருடைய்பின்பக்கத்திலே சேர்ந்து தழுவிக்கொண்டார்.

அப்பொழுது குமாரக்கடவுள் தமது முன் பக்கத்திலே விநாயகராகிய களிற்றின் கோடு ஒற்றவும், பின்பக்கத்திலே வள்ளிநாயகியாகிய பிடியின் தனமென்னுங் கோடுகள் ஊன்றவும் அவ்விரண்டுக்கும் நடுவே ஒரு தம்பம்போலே நின் றார். அவர் விநாயகரை வந்தனைகள் செய்து, "எம்பெருமானே! தேவரீர் வருவதால் புந்திமயல் தீர்ந்தேன்; புனையிழையுஞ் சேர்ந்தனள்; இனி நீர் மீண்டெழுந்தருளுக" என்று கூறிக் கும்பிட்டார். விநாயகர், "நன்று" என்று மீண்டருளினார். சுப்பிர மணியக்கடவுளை இடரில்நீக்கி, வள்ளியம்மையாரைச் சேர்த்தவண்மையினால் திருத்தணிகையில் வீற்றிருக் கும் விநாயகரை உலகம் ஆபத்சகாய விநாயகர் என்றும் போற்றும்.

"முன்னொருசார் வந்து முதுகளிற்றின் கோடொற்ற"

என்றமையால் பிரணவ உபதேசமும்,

"பின்னொருசார் வந்து பிடியின் மருப்பூன்ற"

என்றமையால் பரிசதீக்கையும் பண்ணியதென்னுங் குறிப்புப் பொருள் கொள்ளற்பாற்று. மூத்த பிள்ளையாரை நோக்கித் தேவரீர் வருதலால்,

"புந்திமயல் தீர்ந்தேன் புனையிழையுஞ் சேர்ந்தனளால்"

என்றதும் அக்கருத்துப் பற்றியேயாம் என்க.

மயல் - பிரணவம் உபதேசிக்கவேண்டும் என் னும் ஆசை: சேர்தல் - பரிசதீக்ஷை.

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

—திருப்புகழ்.

தணிவறு கர்தன் மீக்கூர் தம்பியை யிடரி னீக்கி
மணிநகை மாதைச் சேர்த்த வண்மையி னுனு நேரில்
கணிகவெற் பமரு மைங்கைக் கடவு ளெம்பெருமான் றன்னை
அணிகிள ருலக மாவச் சகாயனென் றறிந்து போற்றும்.

—களவுப்படலம்: தணிகைப்புராணம்.

---

# 14. வலம்புரி விநாயகமூர்த்தி

முன்னொருகாலத்திலே விநாயகக்கடவுள் கணங்களோடும் உலாவி எங்கணும் திருவிளையாடல் செய்யத் திருவுள்ளங்கொண்டு, பாதலத்திலுள்ள சர்ப்பங்களை யெடுத்து, ஆபரணமாகத் திருப்புயங் களிலேற்றுவார்; நவக்கிரகங்களையும் நட்சத்திரங் களையும் தொடுத்து, அசைகின்ற துருவசூத்திரத் தைத் துதிக்கையினுற் பறித்துத் திருமார்பில் நவ ரத்தினமாலையாகத் தரிப்பார்; சர்ப்பங்களைப்பற்றி, ஆகாயத்தி லெறிய உடைந்த ஆகாசகங்கையைத் தமது பிதாவைப்போல திருமுடியில் தரிப்பார். நீர் விளையாட்டிற் காதலுற்றவராய் ஒருதினம் சமுத் திரம் யாவையும் முளக்கி, திருப்பாற்கடலை அடைந்து, நீர் முழுவதையும் துதிக்கையால் அள்ளி னார். பிரமா விட்டுணு முதலியோர் அத்துதிக்கை யிற் சார்ந்தார்கள்; இவ்வாறு திருப்பாற்கடல் வறந்தழியத் திருக்கரத்தில் ஏற்ற நீரை மீளவுர்

பூமியில் விடுத்தார்; அந்நீருடன் பிரம விட்டுணு முதலியோர் வீழ்ந்தார்கள்; விழுந்தவர்கள் ஓரிடத் திற்றிரண்டு, தாம் துன்பமடைந்தமையைத் தம் முள்ளே பேசி, யாங்கள் முன் செய்த நல்வினை காரணமாக இன்று இவ்வுலகத்தில் வந்தது மறு பிறப்பென்று மதித்தார்கள்; மயக்கந் தீர்ந்தபின் விட்டுணு தமது இடக்கரத்திலிருந்து வழுவிய சங்கைக் காணுதவராய் வருந்தித் தேடினர். அது விநாயகக்கடவுளது கணங்களுள் ஒருவர் வாயிற் கொண்டு ஒலிப்பதை அறிந்தார். அறிந்த விட்டுணு சிவாஞ்ஞையினல் காஞ்சிப்பதியை அடைந்து, வலம் புரிக்கணேசரைத் தாபித்து விதிப்படி பூசித்துத் துதிப்பாராயினர். "உபநிடதங்களாலு மறிதற் கரிய ஆனந்தவடிவை யுடையவரே! பிரணவப் பொருளானவரே! யானைமுகத்தை யுடையவரே! வெண்மைநிற முடையவரே! பொன்னிற முடைய வரே! செந்நிற முடையவரே! பச்சைநிற முடைய வரே! கிருபைக்கு இருப்பிடமானவரே! அடியவர் இடர் அகற்ற அவதரித்தவரே! துட்டர்களுக்கும் அவுணர்களுக்கும் இடையூற்றை யுண்டாக்குபவரே! மெய்யடியார் நினைத்த நினைத்த வரங்களைக் கொடுத் தருளும் வள்ளலே! நமஸ்காரம் என்று தோத்திரஞ் செய்து, "தேவரீர் திருவிளையாடல் செய்யுங்கால் உம்முடைய துதிக்கையினுள்ளாகப் புகுந்துவரப் பெற்றேன். ஆகையால் யான் பரிசுத்தமுடைய ஞயினேன். அப்பொழுது அடியேன் கரத்தகன்ற பாஞ்சசன்னியம் உம்முடைய கணநாதருடைய கையிலுள்ளது; அதனை இப்பொழுதே தந்தருளுக" என்று இரந்தார்.

விநாயகக்கடவுள் விட்டுணுவுக்குப் பிரசன்னராய், பூதகணத் தலைவனுடைய கையிலிருந்த பாஞ்சசன்னியத்தைக் கொடுத்தருளினர். விட்டுணு கணபதியை வணங்கி, பாஞ்சசன்னியத்தைப் பெற்றுக்கொண்டார். காஞ்சிப்புராணம் வலம்புரி விநாயகப்படலத்தால் இச்சரித்திரம் இனிது காண்க.

---

## 15. விகடசக்கர விநாயகமூர்த்தி

தக்கன் யாகம் அழிந்த நாள் விட்டுணு சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, விடைபெற்று வைகுந்தமடைந்து, சிங்காசனத்தில் வீற்றிருந்தார். அப்பொழுது விடுவசேனன் திருமாலை வணங்கினன். அவர் தம்மை வணங்கிய விடுவசேனனது முகத்தை நோக்கி, "முன்னளில் எனது சக்கரம் ததீசி முனிவரால் வாய்மடிந்தது. பின்பு யான் சிவபெருமானிடத்தில் சலந்தராசுரனைச் சங்காரஞ்செய்த சுதர்சனத்தைப் பெற்றுக்கொண்டேன். இத்தினம் அதை வீரபத்திரர்மீது விட, அவர் பூண்ட வெண்டலை யொன்று கௌவியது; இனி உலகத்தைக் காப்பது எவ்வண்ணம்" என்று துக்கத்துடன் சொன்னர். விடுவசேனன், "என்னை வைரவக்கடவுளது சூலத்திலிருந்து விடுவித்த தலைவரே! யான் இப்பொழுதே போய் வீரபத்திரக் கடவுளை மகிழ்வித்துச் சக்கரத்தைக் கொண்டு வருவேன்" என்று சொல்லி விடைபெற்றுப் போயினன்.

சென்றவன் காஞ்சியை அடைந்து, சிவலிங்கத் தாபனஞ்செய்து, மெய்யன்போடு பூசித்துத் தவஞ் செய்துகொண்டிருந்தான். வீரபத்திரக்கடவுள் அங்கே எழுந்தருளியபோது விடுவசேனன் அவரை வணங்கித் துதித்து "சுவாமீ! தக்கன் யாகத்தை அழித்த நாள் உம்மீது விட்டுணு விடுத்த சக்கரப் படையைத் தேவரீர் திருமேனியிற் றரித்துள்ள கபாலம் பற்றி விழுங்கியது. இப்பொழுதே அதைத் தருதல் வேண்டும்" என்று பிரார்த்தித்தான். வீர பத்திரக்கடவுள் அதனைக் கேட்டுச் சக்கரம் நம் முடைய கையில் இல்லை; கபாலத்தின் பாலுளதேல் எவ்வகையாலும் அதுவே தரப் பெற்றுக் கொள்" என்று சொன்னார். விடுவசேனன் வீரபத்திரக் கடவுளுடைய திருவாக்கைக் கேட்டு, "இனி யான் யாதுசெய்வது என்று ஆலோசித்து, அவருடைய திருமுன்னின்று காலிரண்டையும் கையிரண்டையும் முடக்கிக்கொண்டு, வாயையும் மூக்கையும், இருகண் களையும் மாறி மாறிச் சுரித்து அசைத்துப் பற்கள் தோன்ற விகடக் கூத்தாடினன். இவ்வண்ணம் ஒரு விகடமியற்ற அதை நோக்கி எல்லோருஞ் சிரித் தார்கள். அப்பொழுது வெண்டலையுஞ் சிரித்தது. சக்கரம் அதன் வாயினின்றும் வழுவிப் பூமியில் விழுந்தது.

விடுவசேனன் முதலில் விநாயக வணக்கஞ் செய்யாது விகடமியற்றியமையால், விக்கினேசுரர் விரைந்து சென்று, அதைக் கவர்ந்து அறியாதார் போலிருக்க, விடுவசேனன், "இனிச் செய்வ தென்னை" என்றழுங்கி, விநாயகக்கடவுளுடைய

திருமுன்பும் அவ்விகட நடனத்தை ஆடினுன். அவ் விகட நடனத்தை எம்பெருமான் நோக்கிக் கிருபை செய்து, சக்கரத்தைக் கொடுத்தருளினர். அன்று, முதலாகக் காஞ்சிப் பதியில் இருக்கும் விநாயகரை விகட சக்கர விநாயகரென்று உலகம் போற்று கின்றது.

காஞ்சிப்புராணம் விடுவசேனீசப் படலத்தால் இச்சரித்திரம் இனிதுணர்க.

உச்சியின் மகுடமின்ன வொளிர்தர நுதலினேடை
வச்சிர மருப்பினெற்றை மணிகொள் கிம்புரிவயங்க
மெய்ச்செவிக் கவரிதூங்க வேழமா முகங்கொண்டுற்ற
கச்சியின் விகடசக்ர கணபதிக் கன்புசெய்வாம்.

—கந்தபுராணம்.

தெருளாத தக்கனுர் வேள்வியை யழித்தும்பர்
சென்னியை யுருட்டி நினையும்
தேய்த்தசய வீரனு மிவன்றம்பி யென்பதுந்
திருமார்ப னவம திப்ப
உருளாழி கைக்கொண்டு மற்றவ னிரந்தாங்
குளுற்றும் விகடக் கூத்தினுக்
குள்ளம் பெருங்கருணை பூத்தபின் ஞங்கதனை
யுதவினு னிவனென் பதும்
வெருளாது சீறிய வரக்கனைப் பந்தாடி
விட்டதுங் கேட்டி லாய்போல்
வேண்டிநா மேவலி னழைத்திடவு மதியாது
விண்ணுறு சேறி கண்டாய்
அருளாதி வன்கடியில் வேறுபுக லேதுனக்
கம்புலீ யாட வாவே
அருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறெ
டம்புலீ யாட வரவே.

—சிவஞானசுவாமிகள் பிரபந்தம்.

# 16. கூர்மசங்கார மூர்த்தி

முன்னொரு காலத்திலே தேவர்களும் அவுணர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது, மந்தரமாகிய மத்துக் கவிழ்ந்தது. விட்டுணு கூர்ம உருக்கொண்டு அக்கடலுட் போய் மத்தை முதுகினுற் சுமந்தார். அமரர்கள் பின்பு கடலைக் கடைந்து அமுதத்தைப் பெற்ருர்கள். விட்டுணுவாகிய ஆமை மந்தரமலையைச் சமுத்திரத்துள் நிறுத்திக் காத்தேன் என்று நினைத்துப் பெரிதும் அகந்தையுற்றுச் சமுத்திரங்களிற் போய் அவைகளை உழக்கித் திரிந்தது. அதனுல் உலகிற்கு அழிவுண்டாயது. தேவர்கள் திருமாலாம் ஆமையால் வருந்திக் கைலாசபதிக்கு முறையிட்டார்கள்.

இடுக்க ணென்ப தெமையடைந் தாலது
தடுக்க நின்னல தியாவர் தருக்குளார்
கடுக்கை யஞ்சடைக் கண்ணுத லேநினக்
கடுத்த நாங்க ளடைக்கல மையனே.

மாய ஞமை வடிவுகொண் டானவ
ஞய வேலைய கடுகி டந்தனன்
றீய செய்வன செப்பவற் ரேவினி
நீய வன்செய னீத்துற வேண்டுமால்.

இவ்வாறு தோத்திரஞ் செய்தலைக் கண்ட சிவபெருமான் கிருபைசெய்து கணேசமூர்த்தியை அனுப்பினர். கணேசர் போய் எழுகடலையுந் துதிக்கையால் அள்ளி உறிஞ்ச, ஆமையும் உட்சென்றது. உறிஞ்சிய சலத்தைப் பின்னர் வெளியே சிந்தினர்.

அந்நீர் முழுவதும் கடலுள் மீண்டு சென்றது. ஆமை நிலத்தில் வீழ்ந்தது. வீழ்ந்த ஆமையை விநாயகக் கடவுள் தமது தந்தத்தாற் குத்தித் தோண்டி ஓட்டைப் பிடுங்கிச் சிவபெருமானுக்குச் சாத்தக் கொடுத்தார். அப்பொழுது பிரமா முதலியோர் துன்பம் நீங்கி வணங்கினார்கள். இச்சரித்திரம் உபதேசகாண்டம் கூர்மாவதாரச் சருக்கத்துட் காண்க.

சில இடங்களிலே ஆமையோட்டைப் பிடுங்கியவர் சிவபெருமான் என்றே கூறப்பட்டுள்ளது. சிவனே கணேசர்; கணேசரே சிவன் என்னும் ஒற்றுமை நயம்பற்றிக் கணேசர் செய்ததைச் சிவன் செய்ததாகக் கூறியதென்க. அங்ஙனமே வீரபத்திரக்கடவுள் இயற்றியருளிய யாகசங்காரம் வைரவக்கடவுள் செய்தருளிய பிரமசிரச்சேதம் முதலியவற்றையும் சிவபெருமானே செய்தாரென்று தேவாரம் முதலியவற்றில் உரைக்கப் பட்டமை காண்க.

## 17. சந்திர சிக்ஷா ரக்ஷக மூர்த்தி

முன்னொருகாலத்திலே தேவர்கள் ஆவணி மாதச் சதுர்த்தியில் விநாயகக்கடவுளைப் பூசித்தார்கள். ஐங்கரக்கடவுள் ஆன்மாக்களிடத்தில் விருப்புற்ற திருவுள்ளத்துடன் பஞ்சகிருத்திய நடனஞ் செய்தருளினர். தேவர்கள் வணங்கிப் பிள்ளையாருடைய கிருபையைப் பெற்றார்கள்.

விநாயகப்பெருமான் நிருத்தஞ்செய்யத் தேவர் வணங்கியபொழுது, சந்திரன் விநாயகக்கடவுளுடைய முதிரைவர்க்கங்களைக் கொண்ட சரிந்த திருவயிற்றையும், துதிக்கையில் தாங்கிய மோதகத்தையும் குறுந்தாளையும் பார்த்து சிரித்தான். விநாயகர் சந்திரனை நோக்கி, "யாருங் காணாராய் நிந்தை செய்தகல நீசர்போலாவாய்" என்றார். அதனால் யாவரும் நிந்தித்து, அவனைப் பாராதவராய் அகல, அவன் வெட்கி ஒடுங்கித் திரிந்தான். பிரமா முதலிய தேவர்கள் அதுகண்டு, திருக்கைலாசமலையிற் போய் விநாயகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கிச் சொல்லுவார்:—"சந்திரன் தேவரீருடைய திருவாக்கின் வண்ணம் நீசத்துவத்தை அடைந்து வருந்தி ஒடுங்கினன். அவன் இவ்வுலகிற்கு வேண்டும். தேவரீர் சொல்லிய சாபத்தை ஒரு வருடத்தில் ஒரு நாளைக்கு அவன் வகிக்கும்படி அருளுக" என்றார்கள். விநாயகக்கடவுள் அதுகேட்டு அவ்வாறு அருள்புரிந்தார். ஆவணிமாதப்பூருவபக்கச் சதுர்த்தியில் உலகோர் அவனை நோக்காது, அத்தினத்தில் விநாயகக்கடவுளுக்கு விசேஷ பூசை செய்வர்.

இச்சரித்திரத்தை உபதேசகாண்டம் சிவவிரதமான்மியச் சருக்கத்திலும், கந்தபுராணம் சந்திரசாபப்படலத்திலும் பரக்கக்காண்க.

அடியார்கள் பசுஞானத்தைக் கவளமாக்கி ஒப்பிக்க, அதனை உண்டு, "கணபதியேல் வயிறுதாரி" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவோணகாந்தன்றளித் தேவாரத்திற் கூறியபடி பெரியதா

யிருக்குந் திருவயிற்றினுள்ளாக அடக்கி, சிவஞானத்தைக் கொடுப்பவர் தாமென்பதை உணர்த்துதல் காரணமாகக் கவள உணவாகிய மோதகத்தை ஏந்தினர். இதனை,

"உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி
யுறுதியாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைப்படுத்தித்
தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு
கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு
வினைகடீர்ப்பாம்."

—திருவிளையாடற்புராணம்

எனவும்,

"மாமாயைத் தொடரறுத்துப் பசுபோதக் கவளமுண்டு
மதமேல் கொண்டு
காமாதித் தறி பிடுங்கி வினைக்கடலை யுழக்கிவரு
கழபந் தானே."

—குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.

எனவும்,

"மும்மலக் கந்தினைப் பிடுங்கி யுயிர்ப்போதக்
கவளமாந்திக்—
கருத்துடைய சிவானந்தக் களிமிகுத்துத் திரியுமத
களபந்தானே."

—இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி.

எனவும் கூறியவாற்றால் உணர்க.

# 18. இந்திரானுக்கிரக மூர்த்தி

இந்திரன் சூரபதுமன் செய்யும் கொடுமைகளுக்கு அஞ்சி வருந்தி, மனைவியுடன் மறைந்து தக்ஷணதேயத்திலே,

பிரமபுரம் வேணுபுரம் பெரும்புகலி வெங்குருநீர்ப்
பொருவிறிருந் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.

—பெரியபுராணம்.

எனக் கூறியபடி பன்னிரண்டு திருநாமங்களையுடைய சீகாழியையடைந்து துன்பம் நீங்கி, இருந்தான். அவன் சிவபெருமானைப் பூசை செய்வோமென்று நினைத்து, சந்தனம் அகில் முதலிய மரங்களால் வேலிகோலிச் சிறுசண்பகம் கோங்கு முதலிய தருக்களையும், மல்லிகை முல்லை செவ்வந்தி முதலாகிய புதல்களையுந் தெரிந்து ஒரு நந்தனவனத்தையுண்டாக்க, அவை மிகமலர்ந்தன. இந்திரன் அம்மலர்களாலே தினந்தோறும் சிவபெருமானைப் பூசித்திருந்தான். இருக்குங்காலத்திலே அவுணருடைய ஆஞ்ஞையினாலே, முகில் மழை பெய்யாதாக, அந்நந்தனவனம் வாடியது. இந்திரன் வருந்திச் சிவபெருமானைத் துதித்தான். அப்பொழுது "இந்திரனே! நீவைத்த நந்தனவனம் அழியாது; இத்தலத்தில் ஆறொன்று வரும்; வருந்தற்க" என்றோர் அசரீரிவாக்கெழுந்தது. அவ்வாக்கை இந்திரன் கேட்டு மனத்திடப்பத்தோ டிருந்தான்.

இருக்கும்பொழுது நாரதமுனிவர் இந்திரனிடத்தே போனார். இந்திரன் தொழுதபாணியினனாய், அடியேன் செய்யுஞ் சிவார்ச்சனைக்கு ஓரிடையூறுண்டு. நந்தனவனம் சிறிதும் நீரின்றி வாடிற்று. சிவார்ச்சனை செய்வதற்குப் பூவுமில்லை; என்று விண்ணப்பஞ்செய்து, ஒரு ஆசனத்தின்மீது அவரை இருத்தித் தானுமிருந்தான். நாரத இருடி அதைக்கேட்டு,"அகத்தியமுனிவர் வில்லன் வாதாவியென்னும் இருவரை வதைத்து, அதனால் வந்த பிரமகத்தி தோஷம் நீங்கும்படி சிவபூசைசெய்து கொங்கதேசத்தி லிருக்கின்றார். சிவபெருமானாற் கொடுக்கப்பட்டு அவருடைய கமண்டலத்திலிருக்கின்ற பொன்னி நதியை இங்கேவருமாறு செய்தால் உன்மனக்குறை தீரும்" என்றார். அயிராணி கேள்வன் "அந்நதியை இங்கே வரச்செய்வது எப்படி?" என்று வினாவினான். அவர், "இந்திரனே! விநாயகக் கடவுளை வழிபட்டு வேண்டிக் கொள்வையாயின், அக்கடவுள் அந்நதியைக் கவிழ்த்துவிடுவார்". என்று சொல்லித் தமது பதியை அடைந்தார்.

இந்திரன் பேரானந்தமடைந்து, முனிவர் சொல்லிய பிரகாரம் விநாயகக்கடவுளது திருவுருவைத் தாபித்து அருச்சித்து,

> இக்கொடு தென்னங்காயு மேனலி னிடியுந்தேனும்
> முக்கனி பலவும் பாகு மோதக முதலமுற்றுந்
> தொக்குறு மதுரமூலத் தொடக்கமுஞ் சுவைத்தீம் பாலு
> மிக்கபண் ணியமுமாக விருப்புற நிவேதித் தானால்.

இந்த வகையாக நிவேதித்து வழிபாடு செய்ய விநாயகக்கடவுள் அநந்தகோடி பூதங்கள் சூழப் பிர

சன்னராயினர். இந்திரன் "அடியேன் உய்ந்தேன்" எனக்கூறி அவருடைய உபயபாதங்களிற் சிரசு தீண்டும்படி வணங்கினன். விநாயகக்கடவுள் பேரருளோடு நோக்கி, "இந்திரனே! நினது பூசையை ஏற்றுக் கொண்டாம்; உனக்கு வேண்டிய வரம் யாது?" என்ருர். இந்திரன் அதுகேட்டு "எம்பிராற்காக இங்கேயோர் நந்தனவனத்தை வைத்தேன். அது நீரின்மையால் அக்கினி பட்டதுபோலக்கரிந்து போயது. எந்தையே! அகத்திய முனிவர் சிவார்ச்சனை செய்துகொண்டு கொங்கதேசத்தில் இருக்கிருர். அவரது கமண்டலத்தின்கண்ணே பொன்னி என்னுந் தீர்த்தமுள்ளது. அதனைத் தேவரீர் பூமியிற் கவிழ்த்துவிட்டால், இந்த வனத்திற் பாய்ந்துவரும்; அப்பொழுது அடியேனுடைய குறைதீரும்" என்ருன். விநாயகக்கடவுள் இந்திரனை நோக்கி, "அங்ஙனமே செய்வேம்" என்று அருள்செய்து, அவனை அங்கே நிறுத்தி, சிவபெருமானுடைய திருவருளாலே, அகத்திய முனிவருடைய கமண்டலத்தில் பொன்னிநதி வந்தமையையும், அதற்குஇம்முனிவன் என்று உன் பொருட்டாகக் கைகாட்டுவானே அன்றே இவனை நீங்கிப் பூமியிற் செல்லுதி என்று சிவபெருமான் வரங்கொடுத்த சூழ்ச்சியையும் நினைத்து, கொங்கதேசத்தை அடைந்து, முனிவருடைய கமண்டலத்திலே காகவடிவாய் வீற்றிருந்தார்.

அகத்தியமுனிவர் அதனைக்கண்டு, விநாயகக்கடவுள் என்று அறியாதவராய், தம்முடைய கமண்டலத்திலிருப்பது ஒரு காகமாகுமென்றெண்ணி,

அதனை ஓட்டும்பொருட்டுக் கையை உயர்த்தி ஓச்சினுர். உடனே விநாயகர் குண்டிகையைக் கவிழ்த்து, காவேரியை நோக்கி, "நீ பூமியிற் செல்லுதி" என்று பணித்தருளினுர். அது பலகாத தூரஞ் சென்று, இந்திரன் நோற்றிருக்கும் சீகாழி வனத்திலே சோலையிற் புகுந்தது இந்திரன் ஆநந்தக்கூத்தாடிக் கவலைநீங்கினுன். நந்தனவனம் குளிர்ச்சியோடு தழைத்துப் புஷ்பித்தது. அவன் சைவாகம விதிப்படி பூசித்துச் சீகாழியிலிருந்தான்.

முனி சிரேட்டராகிய அகத்தியருக்குச் சிவபெருமானுற் கொடுக்கப்பட்டமையானும், அகத்தியரது பரிசுத்தமாகிய கமண்டலத்திலிருந்து விநாயகக் கடவுள் கவிழ்க்கப் பாய்ந்தமையானும் காவிரிநதி மிக்க விசிட்டமுடையது; இதில் ஸ்நாநஞ்செய்வோர் போகமோட்சங்களை யடைவர். "போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச் செல்லுமா காவிரி" எனவும், "வளம்படப் பெருகி, யாவோர் பாவந் தீர்த்தஞ்சன மலம்பித் திகழுமா காவிரித் துருத்தியார்" எனவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறியருளியவாற்றானு முணர்க.

## 19. அகத்தியானுக்கிரக மூர்த்தி

விநாயகக்கடவுள் காக வடிவத்தை நீங்கி, ஒரு பிராமணப் பிரமசாரி வேடங்கொண்டு சென்ருர். அகஸ்திய முனிவர் அதைக்கண்டு உருத்து, இவன் நம்முடைய கமண்டலத்திலுள்ள நதியைச்

சிந்திப்போக வல்லனே; "இவன் வலியை விரைந்தறிவேன்" என்று சொல்லிக்கொண்டு பிராமணச் சிறுவன் வேடங்கொண்டு செல்கின்ற விநாயகக் கடவுளை வேகத்தோடு தொடர, விநாயகக்கடவுள் அதுகண்டு, பயந்தவர்போல ஓடினர். அகஸ்தியனர் அவருடைய சிரசிலே குட்டுவான் நினைந்து கைகளை முட்டியாகப் பிடித்துக்கொண்டு, அவரைத் துரத்தினர். அப்பொழுது விக்கினேசுரர் அகஸ்திய முனிவரைக் கிட்டுவார்; ஆகாயத்திற் றேன்றுவார்; திசைகளிற் செல்லுவார்; பூமியில் வருவார்; அவருடைய கைக்குமெட்டுவார்; தூரத்தராவார். இப்படி அகத்திய கோபத்தோடு உலையும்படி விநாயகக் கடவுள் அவர்தம் கைகளுக்குத் தப்பித் திரிதலும், முனிவர் மிகவுந் தளர்ந்து, இவன்மாயம் சொல்லமுடியாததாயிருக்கிறது; இனி யான் செய்வது என்னே? என்று நினைந்தார். அப்பொழுது விநாயகக்கடவுள் அதனைத் திருவுளங்கொண்டு, இரங்கித் தமது திருமேனியை விரைந்து அவர்க்குக் காட்டியருளினர். அகத்தியமுனிவர் தரிசித்து, விநாயகக்கடவுளை நாயேனே முதிர்ச்சியோடு துரத்தினேன் என்று கலங்கி ஏங்கி இரங்கி, முன்னே விநாயகக்கடவுளைக் குட்டும்படி கவித்த தம் கைகளிரண்டையும் எடுத்து வருத்தமுண்டாகத் தம்முடைய நெற்றியிலே குட்டினர்.

அதனை விநாயகக் கடவுள் திருநோக்கஞ் செய்து, "அகத்தியனே! உன் செயல் என்னே? சொல்லுதி" என்றார். அகத்திய முனிவர், "ஐயனே! சிறிதும் அறிவில்லாத யான் தேவரீரை அந்தண

குமாரனென்று மதித்துச் சிரசிற் குட்டச் சிந்தனை செய்தேன், அதற்குப் பரிகாரத்தையும் முந்தியே செய்துகொள்ளுகின்றேன்" என்று விண்ணப்பித்தனர். விநாயகக்கடவுள், "உனது மனத்துன்பத்தை நீக்குதி" என்றருளிச்செய்ய, முனிவர் துயரம் நீங்கி, கடவுளுடைய திருவடிகளில் பலமுறை வீழ்ந்து வணங்கி, "தேவரீரது திறத்தை அறியாத தமியேன் செய்த பிழையைப் பொறுத்தருளுக" என்று பிரார்த்தித்தார். விநாயகக்கடவுள் முனிவரை நோக்கி, அகத்தியனே! இந்திரன் நமது பிதாவைப் பூசிப்பதற்காக உண்டுபண்ணிய நந்தனவனம் நீரின்மையாற் கரிந்து போய்விட்டது; அதன் பொருட்டு நீரை விரும்பி, எம்மை வழிபட்டான்; ஆதலினால் உனது கமண்டலத்தைக் கவிழ்த்து, அந்நதியைப் பூமியிற் செல்லக் கட்டளையிட்டேம். நீ பொருது செய்தவற்றைச் சிறிதும் மனத்திற் கொள்ளோம்; நீ நம் பிதாவாகிய சிவபெருமானிடத்தில் மெய்யன்புடையவன்; ஆதலால் நமக்கும் அன்பனுவாய்; வேண்டிய வரங்களைக் கேட்பாய்; தருகுவோம்" என்றார். அகத்தியமுனிவர் எம்பெருமானை வணங்கி, "அடியேன் உய்ந்தேன்" என்று கூறி, "தேவரீரிடத்தும் சிவபெருமானிடத்தும் தமியேன் அன்புடையவனுயிருக்கும் வரத்தைத் தந்தருள வேண்டும் இப்பொழுது யான் செய்தது போல உமது திருமுன்னிலையில் முட்டியாகப் பிடித்த இரு கரங்களாலும் குட்டுபவர்களுடைய குறையை நீக்கி, அன்னையைப்போல வந்து அருள்செய்ய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். சிவகுமாரர்,

"அவ்வரங்களைத் தந்தனம்" என்றருளி, "இன்னமும் நீ விரும்பிய வரங்களைக் கேட்குதி" என்று கூற, முனிவர் அதுகேட்டு, "சுவாமீ! கமண்டலத்திலிருந்த நதியானது தேவரீர் கவிழ்த்தமையால் நீர் எள்ளளவுமின்றிப் பூமியிற் கவிழ்ந்து விட்டது. சிவபெருமான் தந்த அந்த நதிபோனால், அதுபோல எனக்கு வேறு நதியொன்றுண்டா? ஆதலினால் ஒரு தீர்த்தத்தைத் தந்தருளுதல் வேண்டும்" என்றார்.

விநாயகக்கடவுள் தாம் கவிழ்த்துவிடச் செல்லுகின்றதாகிய ஆற்றிற் சிறிது நீரைத் துதிக்கையால் அள்ளி, முனிவருடைய கமண்டலத்தில் விட்டார். விடுதலும், அந்நீர் கமண்டலத்தை நிரப்பி எஞ்சிய பாகம் முழுவதும் ஆற்று வெள்ளத்தோடு பாய்ந்தது. அகத்தியமுனிவர் தமது கமண்டல நீர் முன்போலிருக்கக்கண்டு, பிரணவப்பொருளாகிய கடவுளுக்கு இதுபோலுஞ் செயல்கள் அரியனவா என்று நினைத்து, அவரை வணங்கி, "அடியேன் இனி ஒரு குறையுமில்லேன்; கவிழ்த்த நதியையும் முன் போலத் தந்தருளினீர்; அன்பற்ற சிறியேன் உய்ந்தேன்; இனியும் அடியேன் நினைத்தபொழுது எழுந்தருளிவந்து அருள்புரிக. அடியேனை மறவற்க" என்று வேண்டினர். விநாயகர் "அங்ஙனமே யாகுக" என்று தம்மைச் சுற்றிவந்த படையோடும் மறைந்தருளினர். அகத்தியமுனிவர் விம்மிதமுடையராய்ச் சிவகுமாரருடைய திருக்கோலத்தைத் தியானித்துக் கொங்கதேசத்தை நீங்கினர்.

யாவரும் விநாயகக்கடவுளை வணங்கும்பொழுது இரு கரங்களினாலும் சிரசில் ஐந்து முறை குட்டுதல்

வேண்டும். குட்டும்பொழுது மத்தகத்திலிருக்கும் அமிர்தமானது பெருகி மூலாதாரத்தில் எழுந்தருளி யிருக்கும் விநாயகரை அடைந்து அபிடேகமாக, அவர் உவந்து அருள் செய்வர். மும்முறை குட்டுவது முண்டு; அது மும்மலநீக்கத்தின் பொருட்டாம்.

---

## 20. இராவண கர்வபங்க மூர்த்தி

இலங்கைக்கிறைவனுகிய இராவணன் தான் அழியாதிருக்கும்படி சிவபெருமானைக் குறித்துத் திருக்கைலாச மலையிலிருந்து தவஞ்செய்தான். அவன் முன்னிலையில் சிவபெருமான் தோன்றி, "உனக்கு யாது வரம் வேண்டும்" என்று வினவி யருளினர். இராவணன் சிவபெருமானை நோக்கி, "இலங்கையும் யானும் அழியாவண்ணம் அருள் புரிக" என்ருன். சிவபெருமான் ஒரு சிவலிங் கத்தை அவனுடைய கையிற் கொடுத்து, "இரா வணனே! இச்சிவலிங்கத்தை இலங்கையிற் ருபிப்பாயாயின் அவ்விலங்கை அழியாது; விட்டுணு முதலிய தேவர்களும் உன்னை வெல்லமாட்டார்கள். வாகனங்களில் ஏறிச்செல்லாமல் ஆசாரத்துடன் நடந்து செல்வாயாக. வேறிடத்தில் வைத்தால் இச்சிவலிங்கத்தை எடுக்க முடியாது; இதனை அறிதி" என்று சொல்லி மறைந்தருளினர். இரா வணன் அவ்விலிங்கத்தைக் கையிலேற்று இலங் கையை நோக்கிச் சென்ருன். தேவர்கள் அதை அறிந்து வருந்தி, இவன் இவ்விலிங்கத்தை இலங்

கையிற் பிரதிட்டை செய்வானேயானல், அதன் அருள் விசேடத்தால் என்றும் அழியாதவனுவான்; எம்மையும் முன்னையிலும்பார்க்க, அதிகமாக வருத்துவான் என்று தங்களுள் ஆலோசித்து, விக்கினேசுரரைப் பூசித்து, "இராவணனுடைய மனக்கருத்து நிறைவேருமல் விக்கினஞ்செய்து, எம்மை இரட்சித்தருளுக" என்று பிரார்த்தித்தார்கள். விநாயகக்கடவுள் அவர்களுக்குக் கிருபை செய்து, வருணனை அழைத்து, "நீ இராவணனுடைய வயிற்றிற் புகுந்து, சல உபாதியை உண்டாக்குவாயாக" என்றனுப்பித் தாம் ஒரு பிராமணப் பிரமசாரியாகி, அவன் வரும் மார்க்கத்தில் நின்ருர். இராவணன் அப்பிரமசாரியை நோக்கி "எனக்கு நீர் மிகுத்து அகத்தை வாட்டிப் பெரிய துன்பஞ் செய்கின்றது; நான் சலவிசர்ச்சனஞ் செய்து, சுத்திபண்ணி இங்கே வரும் வரையும் இவ்விலிங்கத்தை வைத்திரும்" என்ருன். அதற்கு விநாயகக்கடவுளாகிய பிரமசாரி "யான் மெல்லிய யாக்கை யுடையேன்; இவ்விலிங்கத்தைத் தாங்கும் வல்லமையுடையே னல்லேன்; நீ வலிதிற் றருகின்ருய்; தந்தால் நல்லதே; மும்முறை அழைப்பேன்; அழைக்க நீ வராதொழிவையாயின், பூமியில் வைப்பேன்" என்ருர். இராவணன் இசைந்து சிவலிங்கப் பெருமானை அவர்கையிற் கொடுத்துச் சல விசர்ச்சனத்துக்குப் போனன். போய் நெடுநேரம் வாராதிருத்தலும், அப்பிரமசாரியானவர் மும்முறை விளித்தார். அரக்கன் வந்திலன். பெருமானும் சிவலிங்கப்பெருமானைப் பூமியில்வைத்தார். வருணனும் அவன் வயிற்றினின்றும் விலகினன்.

இராவணன் சுத்திசெய்தபின், பிரமசாரியின் முன்னிலையை அடைந்து, சிவலிங்கம் பூமியில் இருப்பதைக் கண்டான். கண்டு விநாயகரைக் கோபித்துப்பார்த்து, இலிங்கத்தை இருபது கரங்களாலும் மகாபெலத்துடன் பிடித்திழுத்தான். இலிங்கம் நிலைபெயர்ந்திலது. இராவணன் தன்னால் இழுக்கமுடியாமையின் இது "மகாபலம்" என்றான். இராவணன் கூறியதை உலகமறிந்து மகாபலநாதரென்று வணங்குகின்றது. இராவணன் பின்பும் தன்னால் ஆனமட்டும் இழுத்தான். அவ்விலிங்கம் குழைந்து, பசுவின் காதுபோல நிமிர்ந்தது. அதனால் அத்தலம் திருக்கோகர்ணம் என்று புகழ்ந்து துதிக்கும்படி இருக்கின்றது. (இறைவியார் பெயர் கோகர்ணநாயகி)

இராவணன் பிரமசாரியைப் பார்த்துக் கோபமிகுதியினால் இருபது கரங்களாலுங் குட்டினான். குட்டியவுடன் விநாயகக்கடவுள் பிருதிவிமுதல் நாதமீறாகிய தத்துவங்களும் சராசரங்களும் பிறவும் திருவடிமுதல் திருமுடிவரையும் பொருந்த நிமிர்ந்து ஒரு விசுவரூபங்கொண்டு தோன்றி, இராவணனைத் திருக்கரத்தினால் தூக்கிப் பந்துபோற் பூமியில் விழாதபடி பலமுறை எறிந்து ஏந்தினர். தசக்கிரீவன் இளைப்படைந்து அகந்தை நீங்கியவனாய், "என்னுடைய அறியாமையாற் பார்ப்பனச் சிறுவனென்றெண்ணி இவ்விதஞ் செய்தேன்; அப்பிழையைப் பொறுப்பது உமக்கியல்பாகும்." என்று இரந்து இரந்து துதிக்க, விக்கினராஜர் அவனைப் பூமியில் விடுத்தார். விடுத்தகடவுள்

"நிருதர்குலவேந்தே! நினது குற்றத்தை யாம் பொறுத்தனம்; உனது இருபது கரங்களாலும் பத்துச் சிரசுகளிலும் குட்டுதி" என்று சொல்லுத லும், இராவணன் குட்டிக்கொண்டு, ஆனந்தக் கூத்தாடி விநாயகக் கடவுளை உவப்பித்தான். விநாயகமூர்த்தி கிருபாநோக்கஞ்செய்து, "எம்மு டைய அருணலத்தை விரும்பி, உன்னைப்போல இரு கரத்தாலுஞ் சிரசிற்குட்டி வணங்கியவர்பால் மகிழ்ச்சி செய்வோம்" என்று சொல்லி மறைந் தருளினர். இச்சரித்திரத்தைப் பிரமோத்தரகாண் டம் சிவதானமகிமை உரைத்த அத்தியாயத்தா னுணர்க.

---

# 21. மகாபாரத லிகிதமூர்த்தி

ஸ்ரீ கிருஷ்ணர் அருச்சுனனுக்கு உபதேசித்த பகவத்கீதையைத் தன்னகத்துக்கொண்டமையா னும், விட்டுணு முதலாகிய தேவர்களுடைய சரித்தி ரங்களைக் கூறுகின்றமையானும், சின்னாட் பல் பிணிச் சிற்றறிவினராகிய மக்கள் எளிதினுணரும் படி உறுதிப் பொருள்களைக் கூறுகின்றமையானும், வேதங்களை நான்காக வகுத்த வியாசமுனிவரால் அருளிச்செய்யப்பட்ட உரிமையானும் பாரதம் ஐந்தாம் வேதம் என்று சொல்லப்படும்.

விநாயகக்கடவுள் கயமுகாசுரனைச் சங்கரிக் கும்படி முரித்ததாகிய தமது தந்தத்தை எழுத் தாணியாகவும், மேருவை ஏடாகவுங்கொண்டு பாரத

சரித்திரத்தை எழுதியருளினர் என்று புராணேதி காசங்கள் புகலுகின்றன.

"ஒருகரிக்கொம்பாற்—சுவடுபட்டிடுமேருவும்"

—முதனுட்பானுகோபன் - கந்தபுராணம்.

அறியுற்றிடு பாரதமானவெலாங்
குறியுற்றிடு தோன்முகர்குஞ்சரன்மேல்
எறியுற்ற மருப்பினிலேடெனவாய்ப்
பொறியுற்றிடு மென்பது பொய்த்திடுமோ.

—விந்தகிரிப்படலம் - கந்தபுராணம்.

விரிதரு பசும்பொற் குன்றிற் பாரதம் விளங்கத் தீட்டி
வரிசெயு மருப்புத் துண்டம் வளர்சடைச் செருகி யாங்கு
தெரிதரக் குழவித் திங்கள் சென்னிசேர்த் தாலங் காட்டிற்
பரிவுசெய் மூலத் தானக் கரியினைப் பணிதல் செய்வாம்.

—திருவாலங்காட்டுப் புராணம்.

..............பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.

—திருவாதவூரடிகள் புராணம்.

நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக வங்கூரெ முத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.

—வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

# 22. விண்டு விநாயக மூர்த்தி

காசிபமுனிவரது மனைவியருள் ஒருத்தியாகிய அதிதி என்பவள் விட்டுணு தனக்குப் புத்திரராகத் தோற்றவேண்டுமென்று தவஞ்செய்தாள். அதனை, அவளுக்கு மாற்றாளாகிய திதி என்பவள் அறிந்து, தேவர்களை வெல்லத்தக்க புத்திரர்களைப் பெற விரும்பிக் காசிப முனிவரோடு கூடினள். அப்பொழுது இரணியன் இரணியாக்கன் என்னும் இரண்டு அசுரர்கள் பிறந்தார்கள். அவர்களுள் இரணியன் என்பவன் பிரமாவை நோக்கிப் பெருந் தவஞ்செய்தான். பிரமதேவர் தோன்றி "இரணியனே! நீ விரும்பிய வரங்கள் யாவை? கூறுதி" என்று வினவினர். இரணியன், "பிருதுவி முதலிய பஞ்சபூதங்கள் மிருகங்கள் பட்சிகள் விலங்குகள் ஆயுதங்கள் முதலியவற்றால் இரவிலும் பகலிலும் பூமியிலும் ஆகாயத்திலும் இறவாதிருக்கவேண்டும்; எனது உதிரம் பூமியிற் சிந்தினால் அதினின்று என்னைப்போல் உருவுண்டாகி என் பகைவரை அழிக்கவேண்டும்" என்று வேண்டினன். பிரமதேவர், "அவ்வாறே யாகுக" என்று மறைந்தருளினர். அவன் தருக்குற்றுத் தேவர் முதலியோரை வருத்திக் கொடுங்கோல் செலுத்திவந்தான்.

அங்ஙனம் நிகழுங் காலத்தில் விட்டுணுமூர்த்தி இரணியனைக் கொல்ல ஓர் உபாயத்தைப் பெற விரும்பிப் பூமியிலே போய் ஒரு வன்னி விருட்சத்தின் கீழ் விநாயகமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து

பூசித்துவந்தார். வருங்காலத்தில் விநாயக்கடவுள் அருள்சுரந்து தோன்றியருளினர். விட்டுணு தொழுது "சுவாமீ! இரணியனைக் கொல்ல அடியேற்கு வரந்தரவேண்டும்" என்று பிரார்த்தித்தார். விநாயகக்கடவுள் "விண்டுவே! பகலுமிரவுமல்லாத மாலைப்பொழுதில், ஆகாயமும் பூமியும் அல்லாத மடியில் அவனை வைத்து நகத்திறைற் கீறிப் பிளந்து, இரத்தம் பூமியில் விழாவண்ணம் வாயால் உறிஞ்சுதி" என்று கிருபைசெய்து மறைந்தருளினர். பின்னர்த் திருமால் நரசிங்காவதாரங்கொண்டு ஐங்கரக்கடவுள் கூறிய உபாயத்தின்படி இரணியனைச் சங்கரித்தனர்.

தேவநாயகராகிய விநாயகர் விட்டுணுவுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தருளிய காரணத்தினால் விண்டுவிநாயகர் என்னுந் திருநாமத்தைப் பெற்றனர்.

விட்டுணு இரணியனைக் கொன்றமை,

"துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித்
தொகுதிறலவ் விரணியனை யாகங் கீண்ட
அங்கனகத் திருமாலும்"

—அப்பர் தேவாரம்

எனப் பேசப்பட்டிருத்தல் காண்க.

# 23. சமிமந்தாரானுக்கிரக மூர்த்தி

முன்னொருகாலத்தில் நந்திகோத்திரமுனிவருக்கு அவுரவர் என்னும் ஒரு புத்திரர் இருந்தார். அவுரவ முனிவரும் சுமேதை என்பவளும் கலந்து சமி என்னும் புத்திரியைப் பெற்றார்கள். தாய் தந்தையர்கள் தமது மகளாகிய சமியைத் தௌமிய முனிவருடைய புத்திரனும் சௌனக முனிவருடைய மாணாக்கனும் ஆகிய மந்தார முனிவனுக்கு விதிப்படி தத்தஞ்செய்து கொடுத்தார்கள். சிலநாட் சென்றபின் மந்தாரன் தாய்தந்தையர் ஆச்சிரமத்திற்கு மனைவியை அழைத்துச் சென்றான். அவர்கள் காட்டுமார்க்கமாகச் செல்லும்பொழுது, விநாயகக் கடவுளுடைய சாரூபத்தைப் பெற்ற புருசுண்டி முனிவர் எதிரே வந்தார். அத்தம்பதிகள் பழைய வினை யனுபவிக்குங் காலம் நேரிட்டவர்களாய் அம் முனிவரது துதிக்கரத்தையும் தொந்திவயிற்றையும் பார்த்துச் சிரித்தார்கள். முனிவர் அதைக்கண்டு, "பெரியோர்முன் செய்யத்தகாத குற்றத்தை நீங்கள் இப்பொழுது என்முன் செய்தமையால் வன்னி மந்தாரை என்னும் மரங்களாவீர்கள்" என்று சபித்தனர். அவ்விருவரும் முனிவருடைய பாதங்களை வணங்கி, "யாங்கள் அறிவின்மையாற் செய்த பிழையைப் பொறுத்துக் கிருபைசெய்தருளுக" என்று பலவாறு வேண்டினார்கள். அதற்கு முனிவர் சிறிதிரங்கி, "நீங்கள் வன்னிமரமும் மந்தார விருட்சமுமா யிருக்கும்பொழுது விநாயகக்கடவுள் உங்களிடத்தில் எழுந்தருளுவர். அப்பொழுது

நீங்கள் மேன்மையை அடைந்து இம்மரவடிவு நீங்காமல் கடவுளுக்கு உரிமையாவீர்கள்; ஆன்மாக்கள் உங்களை வணங்குவார்கள்; முடிவில் முத்தியையடைவீர்கள்" என்று சொல்லித் தமது ஆச்சிரமத்தை அடைந்தார். மந்தாரன் மந்தாரை மரமாகவும், சமி என்பவள் வன்னிமரமாகவு மிருந்தார்கள்.

சௌனகமுனிவர் தமது மாணாக்கன் வராமையைக்குறித்து வருந்திப் பின் யோகமார்க்கத்தால், அவ்விருவரும் சாபமேற்ற வரலாற்றை அறிந்தார். ஔரவமுனிவரும் அவ்விதமறிந்தார். தௌமிய முனிவரும் அவ்வண்ணமறிந்து புத்திரசோகத்தால் இறந்தார். பின்பு சௌனகமுனிவரும் ஔரவ முனிவரும் விநாயகமூர்த்தியைத் தியானித்துத் தவஞ்செய்தார்கள். விநாயகர் சௌனகருக்குக் காட்சிகொடுத்தருளினார். முனிவர் அன்புடன் நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்தார். கடவுள், "உனக்கு வேண்டிய வரம் யாது?" என்று வினவியருளினார். முனிவர் மீண்டும் நமஸ்கரித்து, "மந்தாரனும் சமியென்பவளும் தேவரீரது அடியவருட் சிறந்த புருசுண்டி முனிவரை அறியாமை காரணமாக அவமதித்தமையால் அவரது சாபத்தை ஏற்றார்கள்; அவ்விருவரது சாபத்தையும் நீக்கியருளுக" என்று விண்ணப்பஞ் செய்தார். விநாயகமூர்த்தி புன்னகைசெய்து, "அன்பனே! எமது அடியவர்கள் வெகுண்டு கூறினும் உவந்து கூறினும் அவை அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும். அவற்றை ஒருவராலும் நீக்கமுடியாது; வன்னி மந்தாரையென்னும் அவ்விரு மரநிழலிலும் யாம் வீற்றிருந்து

அடியார்கள் விரும்பிய போகமோட்சங்களைக் கொடுத்தருளுவேம்; அவைகளின் பத்திரபுஷ்பங்களால் எம்மை அர்ச்சித்த அடியவர்கள் விரும்பிய வரங்களைக் கொடுப்பேம்" என்று அம்மரநீழலில் வீற்றிருந்தருளினர்.

சமி என்னும் பெண்ணுக்கும் மந்தாரன் என்பவருக்கும் அநுக்கிரகஞ் செய்தமையால் விநாயகர் சமிமந்தாரானுக்கிரக மூர்த்தியாயினர்.

விநாயகருக்குரிய அறுகு மந்தாரை வன்னி என்பவற்றின் பெருமை எம்மாற்கூறத்தக்கதன்று. அறுகு கிடையாவிடின் மந்தாரமலராலும், அறுகும் மந்தாரமும் கிடையாவிடின் வன்னிப்பத்திரத்தாலும் பூசிக்க. இவற்றின் விரிவுகளெல்லாம் விநாயக புராணம் சமிமந்தாரவுற்பத்திப் படலத்தானுணர்க.

பிறவியை நீக்கவிரும்பியவர்கள் சிவபெருமானிடத்தில் நீங்காத அன்பையுடைய அடியவரைக் கண்டவுடன், மனிதர் செய்யும் வழிபாட்டை அறிவோமென்று சிவபெருமானே தபோதனரென்னும் உருவினைத்தரித்து வந்தாரென்றுன்னி வணங்கல் வேண்டும். அவர்களைப் பிறர் நிந்திக்கக் கேட்டவர்களும், நிந்தித்தவரும், அதற்குடன்பட்டவரும், நிந்திக்கும்படி ஏவிவிட்டவரும், மனத்தினாலும் காயத்தினாலும் தவறு செய்தவரும், அடியார்களைக் கண்டவுடன் இருக்கைவிட்டெழாதவர்களும், அவர்கள்முன் உயர்ந்த ஆசனத்தில் இருப்பவர்களும், சிரித்தவர்களும், அவர் பேசும்போது பராமுகஞ் செய்தவர்களும், அவர் கோபிக்கும்போது தாமுங்

கோபிப்பவரும், அவருடைய ஆசனம் படுக்கை வஸ்திரம் குடை பாதுகை முதலியவைகளைத் தாமும் உபயோகிப்பவரும், பிறகுற்றங்களை அவருக்குச் செய்தவர்களும், பெருந் துன்பத்தை அடைவார்கள்.

“காட்டுமுள்ளொளியைக்கண்ட கண்ணனைக்கயந்துசொல்லக்
கேட்டவர் கேட்பித்தார்கள் கெழுமின ருடன்பட்டார்முன்
மூட்டின ரென்ற வைந்து மூடருங் கூடிமூழ்கி
மீட்டிடு வாருமின்றி யெரிநிர யத்துள் வேவார்.”

—சிவதருமோத்தரம்.

சிவனடியாராகிய புருசுண்டி முனிவரைச் சிரித்து இகழ்ந்த சமிமந்தாரை இருவரும் அவரால் மரமாகச் சபிக்கப்பட்டமை தெளிக. ஆதலால் சிவனடியார்களுக்கு மறந்தும் தீங்கு நினையற்க.

---

# 24. பாலசந்திர மூர்த்தி

முன்னொருகாலத்திலே யமதர்மராசனனவன் சித்தர், கின்னரர், கருடர், விஞ்சையர், சாரணர், முனிவர் முதலியோர் பக்கலாகச்சூழச் சிம்மாசனத்தின்மீது வீற்றிருந்தான். அப்பொழுது தேவ அரம்பையர்கள் தங்கள் மனம் கண்வழி செல்லவும், கண்கள் கைவழி செல்லவும் அபிநயித்து நடித்தனர். அங்ஙனம் நடிக்குங் காலத்தில், திலோத்தமை என்பாளது வஸ்திரம் நழுவியது. அவள் நாணமுற்றுச் சபையிலிருந்தவர்கள் அறியாவண்ணம் அவ்விடத்தினின்றும் போயினள். இயமன் அவள்

தனங்களைக்கண்டு விரகநோய் அதிகரிக்கச் சபையைவிட்டு அந்தப்புரத்துக்குப் போயினன். அதற்கிடையில் அவன் வீரியம் நிலத்தில் வீழ்ந்தது. அதிலிருந்து அனலாசுரன் தோன்றினன். அச் சபையிலிருந்தவர்கள் அவனைக்கண்டு பயந்து ஓடினர்கள். யமன் அப்புதல்வனது கொடிய உருவத்தைக்கண்டு பயந்து கதவை அடைத்துக்கொண்டான். அனலாசுரன் யமனைத் தனது பிதாவென்று விடுத்துப் பூவுலகத்தை அடைந்து, சீவராசிகளைப் புசித்தான். பின்பு தேவர்களை உண்ண நினைத்துச் சுவர்க்கலோகத்துக்குப் போயினன். அதை இந்திரன் முதலிய தேவர்கள் அறிந்து விட்டுணுவினிடம் போய்த் தங்கள் குறைகளைக் கூறினர்கள். விட்டுணு யோசித்து, இவன் விநாயகக் கடவுளாலன்றி எம்மால் அழியான் எனநினைத்து, தேவர்களுடன் அவரை வேதசிரசுகளாற் றோத்திரஞ் செய்தார். விநாயகமூர்த்தி திருவுளமிரங்கி ஒருபிராமணப் பிரமசாரியைப்போல் தோன்றினர். விட்டுணு முதலிய தேவர்கள் இவரே பிரணவத்துதித்த விநாயகரென்று நிச்சயித்து, நமஸ்கரித்து, அனலாசுரனுடைய உயிரையும் எங்கள் துன்பத்தையும் நீக்கியருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். விநாயகக்கடவுள் கிருபைசெய்தார். சுவர்க்கத்தை அடைந்த அனலாசுரன் அங்கே தேவர்களைக் காணமைற் பல இடங்களிலுந் தேடி, அவர்கள் நிற்குமிடத்தை அடைந்தான். அவன் வரவைக்கண்ட முனிவர்கள் ஓடினர்கள். தேவர்கள் வருந்தி மூவர் முதல்வராகிய விநாயக்கடவுளுக்குப் பின்பக்கமாக

மறைந்து நின்றார்கள். அவுணன் வருவதையும், தேவர்கள் வருந்துவதையும் விநாயகக்கடவுள் நோக்கி, "அனலாசுரனுக்கு இனியஞ்சற்க" என்று அபயாஸ்தம் கொடுத்தருளினார். தேவர்கள் உய்ந்தோம் உய்ந்தோம் என்று மகிழ்ச்சியுற்றார்கள்.

விநாயகக்கடவுள் தமது சுயரூபத்துடன் தோன்றி, சிவபெருமான் ஆலகாலவிடத்தைக் கண்டத்தி லடக்கியதுபோல, அவனைத் தமது திருக்கரத்திலடங்கும்படி எடுத்து, ஒருகவளமாய் விழுங்கினர். அவ்வற்புதத்தை நோக்கியவர்கள் அதிசயமடைந்து துதித்தார்கள். விநாயகக்கடவுளுடைய திருவயிற்றில் அனலாசுரன் அடங்குதலும், ஆன்மாக்களுடைய உதரங்களில் அக்கினிபற்றியது போல வெப்பமுண்டாயது. அப்போது எல்லோருந் துன்பமடைந்து வருந்தினார்கள். விநாயகக்கடவுளுக்கு நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் அறுகுகளாற்றனிமை தனிமையாகப் பூசித்தார்கள். உடனே வெப்பம் நீங்கிவிட்டது. தேவர்கள் புஷ்பங்களைச் சொரிந்து வணங்கினார்கள். மூவுலகங்களும் மகிழ்சிறந்தன.

பாலவயதுடன் வந்து எல்லாவுயிர்களையும் வருத்திய வெப்பம் நீங்கும்படி சந்திரனைப்போலக் குளிர்ச்சி கொடுத்தமையால் பாலசந்திர மூர்த்தி என்னுந் திருநாமத்தைப் பெற்றார்.

# 25. மயூரேச மூர்த்தி

**கா**சிபமுனிவரது மனைவியர் பதின்மூவருள் விநதை என்பவளிடத்துக் கத்துரு சென்றாள். பழம்பகை காரணமாக விநதை கத்துருவை அவமானஞ் செய்தாள். அவள் புத்திரனாகிய சடாயுவும் கத்துருவைத் துன்பப்படுத்தினன். கத்துரு மனம் வருந்தியவளாய்த் தனது புத்திரராகிய நாகர்க்கு அவற்றைக் கூறினாள். தாயினுடைய வசனத்தைக் கேட்ட ஆதிசேடன் கோபங்கொண்டு இப்பொழுது சடாயுவினுடைய உயிரைக் கவர்கின்றேன் என்று எழுந்தான். அப்பொழுது அஷ்டநாகங்களும் ஆதிசேடனைப் பணிந்து "யாங்கள் போய்ச் சடாயுவை அடக்கி வருகின்றோம்" என்று சொல்லி அநுமதி பெற்றுக்கொண்டு, நாகசேனைகளுடன் பூவுலகத்தை அடைந்து, விநதையின் மாளிகையிற் போயினார்கள். நாகர்கள் வந்ததைச் சடாயு சம்பாதி சேனன் என்னும் மூன்றுபக்ஷி ராசர்களுங் கண்டு, நாகசேனைகளுடன் யுத்தஞ் செய்தார்கள். நாகசேனைகள் தோற்று அஞ்சிப் பிலத்துவாரவழியாகப் பாதாளத்துக்குப் போனார்கள். அதை அட்டநாகங்களுங் கண்டு கோபமுற்று யுத்தஞ்செய்து, அம்மூன்று பட்சிகளையும் பற்றிச் சிறைவைத்தன. அதைக் கத்துருகண்டு, சந்தோஷமுற்றாள்.

விநதை துன்பமுற்றுத் தனது நாயகனாகிய காசிபமுனிவருக்கு நிகழ்ந்தவற்றைக் கூறி, எனது

புத்திரர்களுடைய சிறையை நீக்குவதற்கு ஒரு புத்திரன் என்னிடத்தில் உண்டாகும்படி கிருபை செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தாள். காசிப முனிவர் "பெண்ணே! உனது புத்திரர்களைச் சிறை மீட்டற்கு உன்னுடைய உதரத்தில் ஒரு முட்டையை உண்டாக்குகின்றும்; அதை விநாயகக்கடவுள் ஒருவரே யன்றிப் பிறிதொருவரும் உடைக்கமாட்டார்கள். அவர் அதை உடைத்தவுடன் ஒருமயில் வெளிப்படும். அவர் அம்மயிலை வாகனமாக்கிக் கொண்டு, நினது புதல்வர்களின் சிறையை மீட்பார்" என்று சொல்லி அவளுடன் சேர்ந்தார். விநதையின் வயிற்றிலிருந்து ஒரு முட்டை தோன்றியது, விநதை அம்முட்டையைப் பாதுகாத்து வந்தாள்.

ஒருநாள் விநாயகக்கடவுள் முனிபுத்திரர்களோடு விநதை தவஞ்செய்துகொண்டிருந்த காட்டில் திருவிளையாடல் செய்துகொண்டிருந்தார் விநதை அதை அறிந்து முட்டையைக் கொண்டுபோய்ப் பிள்ளையாருக்கெதிரே வைத்து வணங்கினள். பிள்ளையார் அவளுடைய குறிப்பை அறிந்து தமது திருக்கரத்தினல் அம்முட்டையைக் கீறினர். அதிலிருந்து மலைபோன்ற பருத்த உருவத்தையுடைய ஒருமயில் தோற்றியது. அதைக் கடவுள் கிருபையோடு பார்த்தருளி, அதன் முதுகில் ஆரோகணித்து விநதையை நோக்கி, "நினக்கு வேண்டிய வரங்களைக் கேட்குதி" என்றார். விநதை நமஸ்காரஞ்செய்து; "எனது புத்திரர்களை நாகர்கள் வைத்திருக்கின்ற சிறையிலிருந்து விடுவித்தல் வேண்டும்; தேவரீரது திருவடிகளை மறவாத

அன்பையும் எனக்குத் தந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். கடவுள் "அவ்விதமாகுக" என்று அருள்செய்து, முனிவர்கள் புடைசூழ மயில் வாகனத்தைச் செலுத்திக்கொண்டுவந்து, சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கித் தமது இடத்தில் இருந்தார். அத்தினம் முதலாக விநாயகரை மயூரேசர் என்று நாமஞ்சார்த்தி அடியார்கள் துதிக்கின்றனர்.

---

# 26. புஜங்காபரண மூர்த்தி

விநாயகக் கடவுள் விநதைக்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்றத் திருவுள்ளங்கொண்டு பாதாள உலகத்திற் சென்றார். அங்கே வாசுகியின் புதல்வி அன்புடன் பூசிக்க அவளுக்கு அருள் செய்து, வாசுகியின் சபைக்கு எழுந்தருளினர். விநாயகரின் வரவைக் கண்ட வாசுகி எழுந்து நமஸ்காரஞ்செய்யாமல் இறுமாந்திருந்தான். கணேசர் அவனருகிற்போய்ச் சிரோரத்தினத்தைப் பறித்தார். உடனே வாசுகி மயங்கி விழுந்தான். அவனைச் சூழ்ந்திருந்த நாகர்கள் மனங்கலங்கி நடுங்கினர்கள். விநாயகர் சம்பாயு முதலியோரைச் சிறைமீட்டு அழைத்துச் சென்றார். வாசுகி மயக்கம் நீங்கிப் பிள்ளையாருடன் எதிர்த்தான். எமது தலைவர் அவனை எடுத்து மோதிரமாக அணிந்தருளினர்.

ஆதிசேடன் அதனை அறிந்து கோபங்கொண்டு சேனைகளோடு வந்து கணேசரை எதிர்த்து யுத்தஞ் செய்தான். விநாயகர் தமது வாகனமாகிய மயிலை

நோக்கி, "நீ போய் நாகசேனைகளை வென்று ஆதி சேடனைப் பிடித்து வருதி" என்று ஆஞ்ஞாபித்தார். உடனே மயில் கோபாக்கினியோடு போய்ச் சிலரை மூக்கினுற் குத்தியும், சிலரைச் சிறகுகளால் மோதியும், சிலரைக் கால்களினுல் உதைத்தும் யுத்தஞ் செய்தது. நாகசேனைகள் புறங்கொடுத்தன. ஆதிசேடன் எதிர்த்தான். மயில் அவன்மீது பாய்ந்து சரீர நடுவிற் கொத்திக் கௌவிக்கொண்டுபோய்க் கணேசர் திருமுன்புவிட்டது உடனே விநாயக மூர்த்தி அவ்வாதிசேடனை எடுத்து அரைஞாணுகத் தரித்தருளினர். முன்பு புறங்கொடுத்தோடிய நாகர்கள் வந்து கணேசரை வணங்கினர்கள். தந்தை செய்ததை மைந்தர் செய்வது முறை என்றவாறு சிவபெருமானைப் போலத் தாமுந் தரிக்கத் திருவுளங்கொண்டு தம்மை அடைக்கலமாகவந்த நாகர்களை அங்கதம், குழை, ஆரம் முதலிய ஆபரணங்களாகத் திருத்தோள், திருச்செவி, திருமார்பு முதலிய இடங்களில் அணிந்தருளினர். வாசுகியின் புத்திரியும் நாககன்னியர்களும் வந்து நமஸ்கரிக்க, அனுக்கிரகஞ் செய்தார். பின்னர்ச் சம்பாயு முதலியோர் புடைசூழ்ந்துவர மயில்வாகனத்தைச் செலுத்திக் கொண்டு பூவுலகத்தை அடைந்து சிவபெருமானும் உமாதேவியாரும் வீற்றிருக்கும் திருக்கோயிலிற் போய் அவர்களை நமஸ்கரித்திருந்தார்.

சம்பாயு முதலிய மூன்று பட்சிகளும் விநாயகக் கடவுளை வணங்கி விடைபெற்றுக்கொண்டு போய்க் காசிப முனிவரையும் விநதையும் வணங்கிச் சுகத்தோடிருந்தன.

---

# 27. வல்லாள மூர்த்தி

முன்னொரு கற்பத்திற் பிரமா சிவானுக்கிரகத்தினால் விட்டுணுவினுடைய நாபிக்கமலத்துதித்தார். சிவபெருமான் வேதாகமங்களை அவருக்கு உபதேசித்தருளினார். பிரமா வேதாகமங்கள் எழுதிய புத்தகத்தை நாடோறும் பூசித்துவந்தார். ஒருகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் பகைத்து யுத்தஞ்செய்தார்கள். அமரர்கள் வேதமனுக்களைப் படைகளாக்கிப் பிரமாஸ்திரத்தோடு சேர்த்துப் பிரயோகித்தார்கள். அதனால் அவுணர்கள் தோல்வியடைந்தார்கள். சிலகாலஞ் சென்றபின் சங்காசுரன் அவன் தம்பியாகிய கமலாசுரன் என்னும் இரண்டு அவுணர்கள் வரத்தினாலும் வலிமையினாலும் மேம்பட்டவர்களாய் வந்தார்கள். முன்னர்த் தேவர்களுக்குத் தோற்ற அவுணர்கள் அவ்விரு அவுணத் தலைவரிடத்தும் போய் நிகழ்ந்தவற்றை முறையிட்டார்கள். அவைகளைச் சங்காசுரன் கேட்டுக் கமலாசுரனை நோக்கி: "பிரமாவிடமிருக்கும் வேதப் புத்தகத்தை நீ இத்தினத்திற் போய்க் கவர்ந்து வருகுதி" என்று கட்டளை செய்தான். கமலாசுரன் தான் கற்ற மாயையினால் அரூபியாகிப் பிரமாவின் இருப்பிடத்தை அடைந்தான். பிரமா சிவத்தியானத்தினால் யோகநித்திரை செய்துகொண்டிருந்தார். புத்தகங்கள் அவர் முன்பு இருந்தன. அப்பொழுது கமலாசுரன் வேதத்தைக் கவர்ந்துகொண்டுபோய்ச் சங்காசுரன் முன்பு வைத்தான். அவன் அதைக்

கொண்டுபோய்க் கடலுள் மறைத்துவைத்தான். அதனல் வேதவொழுக்கங் குன்றியது; பாவம் அதிகரித்தது. வறுமையும் இடரும் மிகுந்தன. வருணச்சிரம தருமங்கள் தவறியன.

சிலநாட் சென்றபின் பிரமா தமது யோக நித்திரையினின்றுமெழுந்தார். அவர் தமதுமுன் பிருந்த வேதபுத்தகத்தைக் காணுதவராய்த் துன்ப மடைந்து, பின்னர் உற்றதை ஞானத்தாலறிந்து, மேன்மேலும் மனம் வருந்துவாராயினர். வருந்தும் பிரமா திருக்கைலாசகிரிக்குப் போய்ச் சிவபெரு மானை நமஸ்கரித்து, "அசுரனெருவன் வேதபுத்த கத்தைக் கவர்ந்து சென்றனன். அவனைச் சம்மாரஞ்செய்து எமது துயரை நீக்கியருளுக" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் பிரமாவை நோக்கி "தம்மை அடைந்த அடியார்களது விக்கி னங்களைப் போக்கி அவர்களை இரட்சிக்க வல்லவன் விக்கினேசுவரனவன். நீ அவனிடம் போகுதி; அவன் உலகங்களில் வேதாகமங்களைப் பரவச் செய்வன்" என்று கட்டளை செய்தருளினர். பிரமா நமஸ்காரஞ்செய்து விடைபெற்றுக்கொண்டு, தமது உலகத்தை அடைந்து பதுமாசனத்திலிருந்து விக்கினேஸ்வரரைத் தியானித்து யோகஞ்செய் திருந்தார். விநாயகர் அவருக்குக் கிருபாநோக்கஞ் செய்து, தமது திருக்கரத்தினல் அவர் கரத்தைப் பிடித்தெழுப்பினர் எழுப்பி, "பிரமனே! வேதாகம புராணங்கள் எமது மூன்று கண்களாகப் பிரகா சிக்கின்றன. வேதம் அழிந்தது என்று வருந்தா தொழிக; நாம் அவைகளைப் பழையபடி பிரகாசிக்

கச் செய்வேம். கமலாசுரனையுஞ் சங்காரஞ் செய்வேம்" என்று சொல்லியருளினர்.

உடனே விநாயகப்பெருமான் ஓர் பிராமண வடிவங்கொண்டு வேதாகமமெழுதிய புத்தகத்தைத் தாங்கி ஆயிரஞ் சீடர்கள் நம்மைச் சூழ்ந்துவர முனிவர்கள் வசிக்கும் 'சுந்தராச்சிரம'த்தை யடைந்தார். அங்கே நித்திய கருமங்களைவிட்டு இடருற்றிருந்த முனிவர்கள் யாம் உய்ந்தோம், உய்ந்தோம் என்று சீடர்களோடுமெழுந்து அவ்வந்தணருடைய திருவடிகளை வணங்கி; இங்ஙனங் கூறுவார்:—"வேத வித்தகரே! அடியேங்கள் கமலாசுரனல் வேத வொழுக்கமிழந்து குற்றமடைந்தனம். இத்தினம் உம்மைத் தரிசித்தமையால் அவ்விடையூறுகள் நீங்கியன; நாங்கள் கடைத்தேறும்படி வந்தருளினீர். உமது வாசஸ்தானம் யாது? இங்கே எழுந்தருளிய காரணம் என்னை, கூறுக" என்றூர்கள்.

அதற்கு விநாயகப்பெருமான், அடியவர்கள் நித்தியகரும முதலியவைகளையிழந்து, இடருற்றிருப்பதை யறிந்து வேதாகம முதலிய புத்தகத்தைக்கொண்டு ஈண்டுவந்தோம். இப்புத்தகத்தை ஆராய்ந்தறிந்து எல்லாக் கிரியைகளையுஞ் செய்யுங்கள். என்னை வல்லாளரென்று சொல்லுவார்கள். இங்கே நமக்கு ஓரிருக்கைதந்து, உங்கள் கவலைகளை நீக்கிப் பேரின்பமுற்று இருப்பீர்களாக" என்றூர். அத்திருவாக்கைக் கௌதமர் முதலிய முனீந்திரர்கள் கேட்டு மகிழ்ச்சியுற்றூர்கள். அந்தணர்வடிவு கொண்டெழுந்தருளிய விநாயகக்கடவுள் இருடிக

ளாற் கொடுக்கப்பட்ட மாளிகையில் வீற்றிருந் தருளினர்.

சில முனிவர்கள் வேதாகமங்களைச் சொல்லி யருளிய சிவபெருமானே இவர் என்று வணங்கி ஞர்கள். சில முனிவர்கள் அவைகளை எமக்கு உபதேசித்தருள வேண்டுமென்று பிரார்த்தித் தார்கள். நான்குவேதங்களையும் உபதேசிக்கக் கேட்டுச் சிலர் ஆனந்தித்தார்கள் வேதங்களின் உண்மைப்பொருளைக் கேட்டுச் சிலர் சந்தேகம் நீங்கினர்கள். ஆகமங்களிற் கூறப்பட்ட திரிபதார்த் தங்களுடைய நிச்சயத்தைச் சிலர் கேட்டனர். சிலர் புராணங்களைக் கேட்டுப் பேரின்ப மடைந்தனர். முனிவர்கள் இவ்விதம் வல்லாளருடைய திருவடி களைத் தினந்தோறும் நமஸ்காரஞ்செய்து, வேதாகம புராணங்களைச் சந்தேக விபரீதமறக் கற்றனர். கற்று அவைகளைத் தங்கள் சீடர்களுக்கு ஓதுவித்தார்கள். அதனல் உலகம் முழுவதும் வேதநெறி தழைத்தோங்கிற்று. நித்திய நைமித்திக கருமங்கள் முறையாக நடைபெற்றன. அதனைப் பிரமதேவர் நோக்கி, விநாயகக்கடவுளைத் தியானித் திருந்தார்.

வைதிகசைவநெறி பிரகாசித்திருப்பதைச் சங்கா சுரனறிந்து, தனது தம்பியாகிய கமலாசுரனை நோக்கி: "நீ சுந்தராச்சிரமத்திற் போய், அங்கே ஆசிரியனுகவிருக்கும் வல்லாளனைக் கொன்று, அவன் வைத்திருக்கும் வேதநூலைக் கவர்ந்துவருக" என்று அனுப்பினன். கமலாசுரன் போர்க் கோலங்கொண்டு வல்லாளரைக் குறித்துச் சென்

ருன். அவனது வரவைக்கண்ட முனிவர்கள் மனம் நொந்து புலம்பினுர்கள். வருந்துகின்ற முனிவரை வல்லாளராகவந்த விநாயகர் கிருபாநோக்கஞ் செய்து, "நீங்கள் எனக்குப்பின்னே வந்திருங்கள்; கமலாசுரனை யாம் சங்காரஞ் செய்வோம்" என்று கூறியருளினுர். உடனே கடவுளுடைய மாயையினுல் அளவற்ற சேனைகள் தோன்றின. வல்லாளர் அவ் வாசிரிய உருவத்தை மாற்றி, ஒரு யுத்த வீரராகத் தோன்றினர். பெருமான் யாகாக்கினியிலிருந் துண்டான மயிலை வாகனமாகக் கொண்டனர். யுத்தம் ஆரம்பமாயது. கமலாசுரனுடைய சேனை களை விநாயகக்கடவுளுடைய சேனைகள் அழித்தார் கள். கமலாசுரன் விநாயகருடன் பொருதான். அவர் தமது சூலப்படையாற் குற்றி அவுணனைச் சம்மாரஞ் செய்தருளினுர். அதனுல் தேவர்களும் மற்றையோர்களும் துன்பம்நீங்கி வைதிக சைவ முறைப்படி ஒழுகினுர்கள்.

அதிபரமாப்தராய்ப் பஞ்சமந்திர சரீரியாயுள்ள சதாசிவநாயனுராலே பிரதம மகாசிருட்டி ஆரம் பத்திலே அருளிச் செய்யப்பட்ட சுருதி சுவதந்திரப் பிரமாணமாகும். சாமானிய சுருதிவேதமும் விசேட சுருதி ஆகமுமாம்.

"தொகுத்தவனருமறையங்கமாகமம்
வகுத்தவன்வளர்பொழிற்கூகமேவினுன்
மிகுத்தவன்மிகுத்தவர்புரங்கள்வெந்தறச்
செகுத்தவனுறைவிடந்திருவிற்கோலமே."

—தேவாரம்

என்றருளியுள்ளார் சம்பந்தர்.

சிவபெருமானை வேதத்துக்குக் கர்த்தா எனல் யுக்தமா? அன்று? எனச் சிலர் சந்தேகிப்பர். கூறுதும்: வேதத்துக்குச் சிவனைக் கருத்தாவாகக் கூறல் பொருத்தமே. இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம் என்பன இந்தப் பரம்பொருளின் சுவாசம் (பிருகதாரணி யோபநிடதம் • 4—10) என்றற்றொடக்கத்த சுருதியினுற் சுவாசம்போல பரப்பிரம சிவபெருமானிலிருந்து பிரயத்தனமொன்றுமின்றி வேதத்தொகுதி யுதித்தன எனப் பெறப்படலானும், "பல்வகை மார்க்கமுடைய இந்தப் பதினெண் வித்தைகளுக்கும் சாக்ஷாத்தாக, முதற்கர்த்தாவாயுள்ளார் சூலபாணியாகிய சிவபெருமான் என்று சுருதிகூறுகின்றது" என வாயுசங்கிதை பூருவபாகம் செப்புகின்றமையின் வித்தைகள் அனைத்துக்கும் சிவபெருமானே கர்த்தாவாகக் கேட்கப்படுதலினாலுமாம் என்க. இன்னும் "சமஸ்த வித்தைகளுக்கும் ஈசானர் எனவும், "இந்தச் சிவபெருமான் நம்மைச் சிவஞானத்திலே சேர்ப்பாராக" (மகாநாராயணேபநிடதம்) என்னும் சுருதிகளினால் சிவபெருமானே சமஸ்த வித்தைகளுக்கும் பிரவர்த்தகராதலும் அருண்ஞானத்துக்குக் காரணராதலுங் கேட்கப்படுகின்றது. அங்ஙனமாயின் "ஷட்ஹோத்திரியாகிப் பிரஜாபதி இருக்கு யசுர் சாமங்களாகிய இவை அனைத்தையும் படைத்தனர்" (தைத்திரியோபநிடதம்) என்றற்றொடக்கத்த சுருதி கேட்கப்படுதலால் பிரமா முதலாயினோரும் வேதங்களுக்குக் கருத்தாவாகப் பெறப்படுகின்றனரே எனின்; "பிரமாவை முதற்கண்ணே

படைத்து, அவருக்கு வேதங்களை அருளினர்'' (சுவேதாசுவதர உபநிடதம் 6—18 எனச் சுருதி கூறுகின்றமையின்'' பிரமா முதலியோர் வேதங்களுக்குக் கருத்தாவாதல் பெறப்படாதென்க.

தேவர் அனைவருக்கும் தலைவராய், பிரமாவுக்குக் கருத்தாவாய் இவருக்குச் சகல வேதங்களையும் உபதேசித்த சிவபெருமானே சர்வாதிகரும், வேதகர்த்தாவும், பரமதேசிகருமாம். இது பற்றியே "தேவர்கள் எல்லாருக்கும் முன் உளராய் இரணியகருப்பர் பிறக்க எந்த விசுவாதிகராகிய உருத்திர மகாரிஷி முதற்கண்ணே கண்டனரோ, அவர் தம்மை அருண் ஞானத்திற் சேர்ப்பாராக'' எனச் சுவேதா சுவதரசுருதி தெளிவுறக் கூறுகின்றது.

வேதமேமுதலாவுள்ளவியன்கலையனைத்துந்தொன்று
ளோதினனவனேயெங்கட்குரைத்திடவுணர்ந்தாமன்றே
யீதுநீயவற்றிற்காண்டியாருமொன்ருகக்கொண்டாய்

—கந்தபுராணம்.

---

# 28. வக்கிரதுண்ட விநாயகமூர்த்தி

முன்னொருகாலத்திலே பிரமா, எடுத்தகருமங்களை இடையூறுதவிர்த்து முற்றுபெறச் செய்பவர் விநாயகர் என்பதை மறந்து அவரை வணங்காதபடி சிருட்டிசெய்யத் தொடங்கினர். கடவுளின் அருள் விரவாமையினலே சிருட்டி நிறைவேறிற்றிலது. பிரமா கண்டு அஞ்சத்தக்கதான பலவிகார ரூபங்

கள் உண்டாயின. அவைகள் மலரோனைப் பார்த்து ஆர்ப்பரிப்பனவுஞ், சிரிப்பனவும், அடிப்பனவும், கோபித்துப் பார்ப்பனவும், தள்ளுவனவும், பிடிப்பனவும், நடிப்பனவுமாகப் பலதுன்பங்களைச் செய்தன. பிரமா புத்திகலங்கித் தளர்ச்சியுற்றிருந்தார். பின்பு ஏரம்பமூர்த்தியினது அருள் சிறிதே தோன்றுதலும், "எம்மை அடிமையாகக்கொண்ட வக்கிர துண்ட மூர்த்தியை மறந்து எனது அகங்காரத்தினாற் சிருட்டிக்கத் தொடங்கினேன். ஆகையாற்றான் இவ்விக்கினங்கள் வந்தன. இனி அவ்விக்கின கர்த்தாவைப் பணியாது இவ்விடர் நீங்காது என்று மனந்தெளிந்தார். உடனே ஸ்நாநம் முதலிய கருமங்களைச் செய்து யோகத்திருந்தார். அங்ஙனம் யோகத்திலிருக்குங்காலை, ஒரு குழந்தை விநாயக சொரூபமாகிக் காட்சிகொடுத்ததாகவும், சிருட்டி செய்யத் தொடங்கும்பொழுது அநேக இடையூறுகள் உண்டானதாகவும், அவையின்றிச் சிருட்டி செய்ய அநுக்கிரகிக்கவேண்டும் என்று பிரார்த்தித்ததாகவும்,அதற்குவிக்கனேஸ்வரர், "பிரமனே! நீ திருவருள் வசத்தினில்லாது அகங்காரத்துடன் சிருட்டிசெய்ய ஆரம்பித்தனை; ஆதலால் இவ்விடையூறுகளெல்லாம் உண்டாயின. இடையூறு நீங்கும்படி நமது ஏகாக்ஷர மந்திரத்தைச் செபி" யென்று திருவாய்மலர்ந்து அதனை உபதேசித்ததாகவுங் கண்டார். கண்டு, மனம் உறுதிபெற்று அவ்வேகாக்ஷர மந்திரத்தைப் பன்னிரு வருஷம் செபித்து வந்தார். தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பரிபூரணராகும் விநாயகர் "ஒருகரத்தில் மழுவும்,

ஒரு கரத்திற் கமண்டலமும் மற்றை யிருகரங்களும் அபயவரதமுமாகப் பொருந்த அவர் முன்னிலையிற் றோற்றியருளினர்." உடனே பிரமதேவர் நமஸ்கரித்து; "சிருட்டி, திதி, சங்காரம் ஆகிய முத்தொழிலையுஞ் செய்யாமற் செய்கின்ற பண்ணவரே! ஆன்மாக்களது மலமாயா கன்மங்களை அழித்து அருளும் நின்மலரே! உரையாலும், உணர்வாலும், உடலாலும் உணர்தற்கரியவரே! கன்னெஞ்சுங் கரைய எமக்கு முன்னிலையில் எழுந்தருளிய கடவுளே! அடியேனைப் பாதுகாத்தருளுக" என்று தோத்திரஞ் செய்தார். விநாயகக்கடவுள், "பிரமனே! நீ விரும்பிய வரங்களைக் கேட்குதி" என்று திருவாய் மலர்ந்தார். பிரமதேவர் வணங்கி, "மகாதேவ! தேவரீருடைய பாததாமரைகளில் நீங்காத அன்பையும், உலகத்தை விக்கினமின்றிச் சிருட்டி செய்யத் தகுந்த வலியையுந் தந்தருளுக" என்று பிரார்த்தித்தார். விநாயகர், "பிரமனே! எமது கிரியாசத்தி ஞானசத்திகளைத் தியானித்து உன் சிருட்டித் தொழிலைச் செய்யக்கடவாய்" என்று கிருபைசெய்து மறைந்தருளினர்.

பிரமதேவர் அவ்விரண்டு சத்திகளையும் வணங்கினர். சத்திகளிருவரும் சித்தி புத்தி என்னும் திருநாமங்களோடு அவரெதிரிற் றோற்றினர்கள். பிரமர் அவ்விருவரையும் நோக்கி, "தாயர்களே! அடியேனுக்கு எக்காலத்தும் இடையூறு அணுகாதபடி எனது அருமைப் புத்திரிகளாக அமர்ந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அங்ஙனமே தேவியரிருவரும் உடன்பட்டுக் கிருபைசெய்தார்கள்.

பிரமா ஆனந்தித்து, விநாயகப் பெருமான் இச்சித்தி புத்திகளோடும் வீற்றிருப்பதாகப் பாவித்துப் பூசித்து வருவாராயினர். மலரோனுடைய சிருட்டிப்புத் தொழில் இனிது நிறைவேறியது.

---

## 29. சித்திபுத்தி திருமணமூர்த்தி

**பி**ரமதேவர் ஒருதினம் விநாயகக்கடவுளை வணங்கி, "உலகங்களின் உள்ளும் புறம்புமாக வியாபித்திருக்கும் பரம்பொருளே! சிருட்டி கைகூடும்படி முன்னர் எம்பால் அனுப்பிய கிரியாசத்தி ஞானசத்தி எனப்படும் சித்தி புத்திகளை உலகமுய்யும்பொருட்டுத் திருமணஞ் செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அட்டமூர்த்தியாகிய விநாயகர் அதற்கிசைந்து, "நீ திருமணத்துக்காகிய முயற்சிகளைச் செய்வாயாக; யாம் கணநாதர்முதலியவர்களுடன் அங்கே வருவேம்" என்று ஆஞ்ஞாபித்தார். பிரமா திருக்கைலையை அடைந்து சிவபெருமானையும் உமாதேவியாரையும் நமஸ்காரஞ் செய்து, விநாயகக்கடவுளுக்கு எனது புத்திரிகள் இருவரையும் திருமணஞ் செய்ய அனுமதி தரல் வேண்டும்" என்று வேண்டினர். சிவபெருமானும் தேவியாரும் அனுக்கிரகம் புரிந்தனர்.

பிரமா சத்தியவுலகத்தை அடைந்து, தேவர் முதலியோருக்கு விநாயகக்கடவுளுடைய விவாக சோபனத்தைச் சொல்லும்படி தூதுவரை அனுப்பினர். பின்பு பிரமதேவர் விசுவகன்மனை நோக்கி,

"திருக்கல்யாண மண்டபத்தையும் பிறவற்றையும் சாத்திரமுறைப்படி உண்டாக்குதி" என்று கட்டளை செய்தார். விசுவகன்மா மணச்சாலை முதலியவற்றைச் சிறப்புற அமைத்தான். தூதுவரால் விவாக சோபனத்தை அறிந்த நவக்கிரகங்கள் தேவர்கள் முனிவர்கள் கந்தருவர் முதலியோர் யாவரும் கணேசருடைய திருக்கல்யாணத்தைத் தரிசித்து ஈடேறும் நோக்கமாக வந்தனர்.

நாரதமுனிவர் திருக்கைலாசபதியை வணங்கி, "தயாநிதியே! விநாயகக்கடவுளுடைய திருமணத்திற்காகிய முயற்சிகளெல்லாம் நிறைவேறின. தேவரீர் அனுக்கிரகஞ் செய்தருளுக" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் கிருபையோடு விநாயகரை நோக்கியருளினர். அவர் திருமணக் கோலங்கொண்டு, ஈராயிரம் மருப்புகளையுடைய ஐராவணம் என்னும் யானையில் இவர்ந்தருளினர். சிவபெருமானும் உமாதேவியாரும் இடபவாகனத்தில் ஆரோகணித்தனர். சுப்பிரமணியக்கடவுளும் வீரபத்திரர் முதலியோரும் தத்தம் ஊர்திகளில் ஏறினர்கள். பதினொரு ருத்திரர்களும் ஆதித்தியரும் வித்தியேசுரரும் வசுக்களும் திக்குப்பாலகர் முதலியோர்களும் பக்கலாக வந்து வணங்கிச் சூழ்ந்தார்கள். பூதசேனைகளும் திருநந்திதேவரும் கணநாதர்களும் வந்து வணங்கினர்கள். பிரணவமும் வேதங்களும் கலைகளும் காலங்களும் இராசிகளும் சத்தகோடி மந்திரங்களும், சிவாகமங்களும் தேவ வடிவுகொண்டு வந்தன.

விநாயகக்கடவுள் திருமணக் கோலத்துடன் உருத்திரர் முதலியோர் புடைசூழ வருகின்றமையைப் பிரம விட்டுணுக்கள் கண்டு நமஸ்கரித்தனர். விநாயகக்கடவுள் ஐராவணத்திலிருந்திறங்கித் திருமணச் சாலையினுள் அமைத்த மாணிக்க சிங்காசனத்தில் வீற்றிருந்தருளினர். உமாமகேசுவரர்களும் ஓர் திவ்விய சிங்காசனத்தில் வீற்றிருந்தார்கள். சுப்பிரமணியர் முதலியோரும் தத்தமக்கு விதித்த ஆசனங்களில் இருந்தார்கள். தேவமகளிர் அட்டமங்கலங்களை ஏந்தினர்.

இலக்குமி முதலிய தெய்வப்பெண்கள் சித்தி புத்திகளை நமஸ்காரஞ்செய்து புடைசூழ்ந்துவர, அவர்கள் மணச்சாலையில் வந்து விநாயகக்கடவுளுடைய மருங்கிலிருந்தார்கள். பிரமா தமது புத்திரிகளின் கரத்தைக் கணேசமூர்த்தியினது திருக்கரத்தில் வைத்துச் சரசுவதி நீர்விடத் தத்தஞ் செய்து கொடுத்தனர். அப்பொழுது மங்கலவாத்தியங்கள் சத்தித்தன. தேவர் முதலியோர் அர அர என்று சொல்லித் துதித்தார்கள். சனகமுனிவர் விவாகக் கிரியையைச் செய்தார்.

திருமணம் நிறைவேறியபின் தேவர் முனிவர் கணநாதர் முதலிய யாவரும் உமாமகேசுவரரை நமஸ்காரஞ்செய்து, அதன்பின் சித்திபுத்தி சமேதராகிய கணேசரையும் வணங்கித் திருவருளைப் பெற்றுத் தத்தம் பதவிகளை அடைந்தனர். சிவபெருமான் கந்தவேள் முதலியோர் புடைசூழ்ந்துவர சித்தி புத்தி சமேதராகிய விநாயகரைத் திருக்

கைலாசமலைக்கு அழைத்துச் சென்றருளினர். விநாயகக்கடவுள் கிரியாசத்தி ஞானசத்தியாகிய சித்தி புத்திகளோடு உலகமுய்ய வீற்றிருந் தருளினர்.

---

# 30. சித்திவிநாயக மூர்த்தி

முன்னொருகாலத்தில் விட்டுணு திருப்பாற் கடலில் நித்திரை செய்தார். அவரது காதுகளில் தேவர்கள் அஞ்சத்தக்க வலிமையுடைய மது கைட வர் என்னும் இரண்டு அசுரர்கள் தோற்றினர்கள். அவர்கள் முனிவர் முதலிய பெரியோர்களை வருத்தி னர்கள். வேதாகம ஒழுக்கங்களை அழித்தார்கள். அவர் தம்முருவை மறைத்துக்கொண்டு ஐங்கரக் கடவுளுடைய திருவருளையே துணையாகக்கொண்டு திருப்பாற்கடலை அடைந்தார். அங்குத் திருமால் துயில்செய்வதைக் கண்டார். பிறருடைய நித்திரை யைப் பங்கப்படுத்துதல் கூடாதென்று வேதாகமங் கள் கூறுகின்றன. ஆகையால் இவரை எழுப்புதல் கூடாதென்று யோசித்து, நித்திராதேவியை அழைத்து, "விட்டுணு உனது வசத்தராய் நெடுநாள் துயில்கின்றனர். மது கைடவர் எம்மை வருத்து கின்றார். இவ்விட்டுணு அவுணர்களைச் சம்மாரஞ் செய்து, எமது துன்பத்தை நீக்குவதற்காக நீ அருள வேண்டும்" என்றார். நித்திராதேவி அவரைவிட்டு நீங்கினள். உடனே அவர் எழுந்தார். அப்பொழுது அவுணர்களாற் றுன்புற்ற தேவர்கள் வணங்கினர் கள். பிரமா விட்டுணுவை நோக்கி, "மதுகைடவர்

எம்மை வருத்துகின்றார்கள். அவர்களைச் சம்மாரஞ் செய்து எம்மை இரட்சிக்க வேண்டும்" என்றார். திருமால் பிரமா முதலிய தேவர்களை நோக்கி "மது கைடவர்க்கு அஞ்சற்க" என்றார். இங்ஙனங் கூறி உடனே எழுந்து பலவகை ஆயுதங்களை ஏந்தி ஊழிக் காலத்தெழும் பேரொலிபோலச் சங்கையூதினார். அச்சத்தத்தை மது கைடவர் கேட்டு விண்டுவின் முன்னிலையில் வந்துநின்று அறைகூவினார்கள். இரு திறத்தாரும் நெருங்கிநின்று பலவகைப்பட்ட யுத்தங்களை நெடுநாட் செய்தார்கள்.

விஷ்ணுமூர்த்தி அவர்களை வெல்வதற்குச் சத்தியற்றவராய் கந்தருவ வடிவங்கொண்டு மறைந்து திருக்கைலாசகிரியை அடைந்து யாழைக் கையிலெடுத்து வாசித்துக்கொண்டிருந்தார். அவ்வோசையானது சாமவேதப்பிரியராகிய சிவபெருமானுடைய திருச்செவியில் ஏறியது. உடனே சங்கரனார் பிருட்டதந்தன் நிகும்பன் என்னும் பூதகணத் தலைவரை நோக்கி "மலைச்சாரலில் யாழ்வாசிப்பவன் மாலாகும்; நீங்கள் அவனையிங்கே அழைத்து வாருங்கள்" என்றருளினார். அவர் அழைத்துச் சென்று சதாசிவனாருடைய திருச்சந்நிதியில் விட்டார். விட்டுணு சங்கரரை வணங்கி ஓர்பக்கலாக நின்று யாழை மறுபடியும் கையிலெடுத்து அக்கடவுளது பெருமைகளைப் பாடி வாசித்தார். சிவபெருமான் விட்டுணுவை நோக்கி, "அன்பனே! உனக்கு யாதுவரம் வேண்டும்" என்று வினவியருளினார். திருமால் மனமகிழ்ந்து, "சுவாமீ! எனது காதுகளில் இரண்டவுணர்கள் தோன்றினார்கள். யான் அவர்

களுடன் பலநாளாக நின்று யுத்தஞ்செய்தும் வெற்றிகொண்டிலேன். அவர்களுக்கு எனது உருவை மறைத்துவந்து தேவரீரை அடைக்கலம் புகுந்தேன். அவர்களை வெல்லும் வலியைத் தந்தருளுக" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் விண்டுவைநோக்கி, "நீ விக்கினேசுவரனைப் பூசை செய்யாது அவர்களுடன் யுத்தஞ்செய்யத் தொடங்கினாய்; ஆகையால் அவர்கட்குத் தோற்றனை; இனி விநாயகனை வழிபட்டுப் பகைவர்களை வெல்வாயாக" என்று உபதேசித்தருளினார்.

விட்டுணு அவ்வருளைப்பெற்று நமஸ்கரித்து, அனுமதி பெற்றுக்கொண்டு பூவுலகத்தில் வந்து வேதாகம முறைப்படி நூறு வருடம் விநாயகரைப் பூசித்துச் சடாக்ஷரத்தைச் செபித்துவந்தார். கணநாயகர் அருள்சுரந்து தோன்றியருளினார். விட்டுணு வணங்கித் தோத்திரஞ்செய்தார். விநாயகர், "விண்டுவே! உனக்கு யாதுவரம் வேண்டும்?" என்று வினவியருளினார். விட்டுணு, "கிருபாமூர்த்தியே! எனது செவிகளிலிருந்து தோற்றிய அசுரர்கள் உயிர்களை வருத்துகின்றார்கள். அவர்களைக் கொல்வதற்கு வலியைத் தரவேண்டும்; அவர்களன்றி மற்றைய துட்டர்களையும் அழிக்கும் வரத்தையுந் தரல்வேண்டும். உம்முடைய திருவடிகளில் நீங்காத அன்பையுந் தருதல்வேண்டும். அடியேன் தெரியாமற் செய்யுங் குற்றங்களையும் குணமாகக்கொண்டு பொறுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். "விட்டுணுவே, உனக்கு அவைகளைத் தந்தோம்;

முன்னர் உன்னுடன் யுத்தஞ்செய்த அவுணர்கள் ஒரு வஞ்சகத்தை நினைத்து மறைந்திருக்கிறார்கள். நீ நமது சடாட்சரத்தைத் தியானஞ் செய்துகொண்டு யுத்தத்திற்குச் செல்லுதி; அவர்கள் வெளிப்படுவார்கள்" என்று கூறி மறைந்தருளினர்.

அதன்பின்னர் விட்டுணு பேரானந்தமடைந்து, விநாயகமூர்த்தி தமக்குத் தோன்றியருளியவிடத்தில் ஒரு ஆலயமுண்டுபண்ணி, அதில் விநாயகரைப் பிரதிட்டை செய்து, நாம் விரும்பியவைகளைச் சித்தியாக்கியமையால் அவருக்குச் சித்திவிநாயகர் எனத் திருநாமமிட்டு வழிபாடு செய்து ஆனந்த சாகரத்தில் மூழ்குவாராயினர். விட்டுணு விநாயகரைப் பூசித்த க்ஷேத்திரம் சித்திகேத்திரமென்று வழங்கிவருகின்றது.

விட்டுணு சித்திவிநாயகரது அநுக்கிரகத்தால் மது கைடவரைக் கண்டுகொண்டார். அவுணர் உடனே திருமாலைப் பார்த்து, "மாயவனே! முன்னர் எங்கட்குத் தோற்றோடினை; யுத்தத்திற்கு நாணமின்றித் திரும்பி வந்தனை" என்றிவ்வாறு கூற, அதைக்கேட்ட திருமால் கோபித்து, "புலி பதுங்குவது பாய்தலுக்காகுமென்பதை நீவிர் அறியீரோ" என்றார். அசுரர்கள் கறுத்து எதிர்த்தார்கள்; இரு பகுதியார்க்குமிடையே பெரும்போர் நடந்தது. விட்டுணு பாஞ்சசன்னியம் என்னும் சங்கை ஊதிச் சார்ங்கத்தை வளைத்துச் சக்கரத்தை எடுத்து, விநாயகமூர்த்தியினுடைய திருவுருவைத் தியானித்

துப் பிரயோகித்தனர். சக்கரம் பட்டு அவுணப் பதகர் இருவரும் இறந்துபோயினர்கள். விட்டுணு அசுரர்களது ஆவியை யுண்டமையை அமரர்கள் கண்டு ஆடிப் பாடிப் புஷ்பமழை பொழிந்து பேரானந்தங்கொண்டார்கள்.

---

## 31. வல்லபா கணேசமூர்த்தி

முன்னொரு காலத்திலே பிரமா சத்தியலோகத்தில் மரீசி முதலிய முனிவர்களும் தேவர்களும் சூழ வீற்றிருந்தார். அவர்களுள் மரீசிமுனிவர் பிரமாவை வணங்கி, "சிருட்டி திதி சங்காரம் என்னும் முத்தொழில்களைச் செய்யும் மும்மூர்த்திகளுக்கும் தலைவரும், உலககாரணரும், சர்வவியாபியுமாயுள்ள கடவுள் எவரென்பதை எமக்குச் சொல்லவேண்டும்" என்றார். பிரமா தமக்கொப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கும் விநாயகக்கடவுளைத் தியானித்து, ஆனந்தபரவசராய் வேதங்களினாற் றுதித்தார்; பின்பு மரீசிமுனிவரை நோக்கி, "மைந்தனே! முன்னொருகாலத்தில் ஆணவமலமறைப்பினால் நானும் விட்டுணுவும் தனித்தனி யாமே பரப்பிரமமென்று வாதித்து யுத்தஞ்செய்தோம். அப்பொழுது எங்கள் நடுவில் ஒரு சோதி தோன்றியது; அச்சோதியாய் நின்றவரே சிதாகாசமத்தியர். அவரே சர்வேசுரர்; அவரே கணேசர்; அவரே மும்மூர்த்திகளுக்குந் தலைவர்" என்று சொன்னார். மரீசிமுனிவர் திரும்ப

வும் நமஸ்கரித்து, "படைத்தல் காத்தல்களைச் செய்கின்ற உம்மோடு ஒருவராயிருந்து சங்கார கிருத்தியத்தைச் செய்கின்ற உருத்திரர் உங்களுக்குத் தலைவராயிருப்பதற்குக் காரணம் என்னை?" என்று வினவினர்.

பிரமா புன்னகைபுரிந்து "புதல்வனே! சிவபெருமான் எங்களை முன்னாளிற் சிருட்டித்து, படைத்தல் காத்தல் என்னுந் தொழில்களைத் தந்து எம்மிருதயத்திலிருந்து அவைகளை நடாத்துவிக்கின்றார். பிரளயகாலத்தில் எங்களையும் அழிக்கின்றார். மீளவுஞ் சிருட்டித்து எல்லாச் சுகங்களையுந் தந்தருளுகின்றார். வேதாகமங்களை யுண்டாக்கி, எங்களுக்கு உபதேசித்தவரும் அவரே. 'பரமான்ம சிவபெருமான் எள்ளில் எண்ணெய் போன்றும், தயிரில் நெய்போன்றும், (வறந்த) நதியில் ஜலம்போன்றும், அரணியில் அக்கினிபோன்றும் மறைந்துள்ளார்; இங்ஙனம் ஆன்மாவிலே பரம ஆன்மா அறியப்படுகின்றார்' எனச் சுவேதாசுவதரம் கூறுமாறு யாண்டும் வியாபித்திருக்கின்றார். ஆகையால், சங்கார கருத்தாவாகிய அச்சிவபெருமானே எங்களுக்கு முதல்வர். சிவபெருமானே துட்டநிக்கிரக சிட்ட பரிபாலனத்தின் பொருட்டு விநாயகராகத் திருவவதாரஞ் செய்தார்" என்று உபதேசித்தார்.

மரீசிமுனிவர் தமது உள்ளத்திற் கொண்ட ஆசங்கையை நீக்கி மானதவாவிக் கரையிலிருந்து கணேசமூர்த்தியைத் தியானித்து அருந்தவஞ் செய்தார். விநாயகர் மூஷிகவாகனத்தின்மீது காட்சி

கொடுத்தருளினார். முனிவர் எழுந்து நமஸ்காரஞ் செய்து துதித்து நின்றார். கடவுள் முனிவரை நோக்கி, "உனக்கு யாதுவரம் வேண்டும்" என்றார். "அடியேனுக்கு உலக அரசாட்சியையும், வேதங்களில் வல்லுநராய், மிகுந்த சற்குணமுடையவராய், பேரறிவுடையவராய், பாவங்களைச் சிறிதும் சிந்தியாதவராய் விளங்குகின்ற பல புத்திரர்களையும் உதவல்வேண்டும்; உம்மிடத்தில் நீங்காத அன்பைத் தரல்வேண்டும்; வள்ளலே! உம்முடைய வாமபாகத்தில் இருக்கின்ற ஈசுவரியே எனக்குப் புத்திரியாய் வரல்வேண்டும்; அவரை யான் தத்தஞ் செய்துகொள்ளல் வேண்டும்" என்று மரீசிமுனிவர் பிரார்த்தித்தார். விநாயகர், "அவ்வாறாகுக" என்று மறைந்தருளினார். முனிவர் பிரமாவினால் உண்டாக்கிக் கொடுத்த பிரமநகரத்திலிருந்து இந்திரன் முதலியோர் நமஸ்கரிக்க அரசுசெய்தார். பின்பு தேவவல்லியை விவாகஞ்செய்து, பல புத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்று வாழ்ந்திருந்தார்.

மரீசிமுனிவரது தவத்தை நிறைவேற்றத் திருவுள்ளங்கொண்டு மகேசுவரன் மகேசுவரிக்கு அனுக்கிரகித்தார். உமாதேவியார் மகேசுவரரிடத்தில் அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு யமுனைநதியையடைந்து அதிற் புஷ்பித்திருக்கும் தாமரை மலர்களுள் ஒருமலரின்மீது சங்குவடிவமாய்ச் சிவத்தியானத்துடன் இருந்தார்.

மரீசிமுனிவர் ஒருதினம் தமது மனைவியுடன் யமுனையை அடைந்து விதிப்படி ஸ்நானஞ்செய்து

நித்திய கருமத்தை முடித்தனர். அப்பொழுது அந்நதியிலுள்ள ஒரு புஷ்பஞ் சிறப்புற்று விளங்குவதையும், அதில் தெய்வத்தன்மை பொருந்திய ஒரு சங்கு இருப்பதையுங் கண்டார். கண்ட முனிவர் அதை எடுக்கும்படி அதன் சமீபமாகப் போனூர். அது ஒரு பெண்குழந்தை வடிவாயது. முனிவர் அதைப்பார்த்துச் சகல தீவினைகளையும் நீக்கி நற்கதி அடைவித்தல் காரணமாக மகேசுவரியே தோன்றினூர் என்றுன்னி ஆவலோடு அவரைக்கையிற்ருங்கிக் கடைத்தேறினூர் முனிவர் தேவவல்லியை நோக்கி, "ஆணவ இருளினூற் கட்டுண்டு கிடக்கும் ஆன்மாக்களைப் போல இவரை நினையற்க; இவர் மேலான பேற்றினைக் கொடுக்கத் தக்கவரேயாம்; அன்பாக இவரை வளர்க்குதி" யென்று கொடுத்தார். தேகவல்லிகரத்திலேற்றமாத்திரத்தில் தனங்களிலிருந்து பால் சொரிந்தது அதை உலகமாதாவுக்கு ஊட்டினூள் பின்பு முனிவர் மனைவியாருந் தாமும் பரிசனங்கள் சூழ நகரத்தை அடைந்தார். அடைந்து அப்புத்திரியாருக்கு வல்லபை என்னுந் திருநாமத்தைச் சாற்றி வணங்கினூர்.

வல்லபாதேவிக்கு ஐந்துவயசாயது. அவர் "சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்தற்கு அனுமதி தரல்வேண்டும்" என்று தாய் தந்தையருக்கு விண்ணப்பித்தார். முனிவர் ஒரு தவச்சாலை அமைத்துக் கொடுத்தார். வல்லபை அத்தவச்சாலையை அடைந்து சிவபெருமானது திருவடிகளைத் தியானித்து, ஏகாக்ஷர மந்திரத்தைச் செபித்துக்

கொண்டு அரிய தவத்தைச் செய்தார். சிவபெருமான் சிவசின்னங்களை அணிந்த ஒரு பிராமணவேடம் பூண்டு வந்து தவத்தைச்சோதித்து, நல்லருள்செய்து அவ்வுருவத்தை மாற்றிக் கணேசமூர்த்தியாய்க் காட்சிகொடுத்து அருள்செய்தனர். அதனை அறிந்த முனிவர், விவாகத்துக்காகிய கருமங்களை நிறைவேற்றித் தேவர்முதலியோர்க்குத் திருமணப்பத்திரங்களை அனுப்பி, முனிவர்கள் புடைசூழத் தவச்சாலையை அடைந்து வேதங்களாலும் அறிதற்கரிய விநாயகக் கடவுளை நமஸ்காரஞ்செய்தார். கடவுள் கிருபை செய்தார்; சுவாமியை அழைத்துக்கொண்டுசென்று மணமண்டபத்தில் இருத்தினர்கள். தெய்வப்பெண்கள், வல்லபையை அந்தப்புரத்துக்கு அழைத்து மணக்கோலஞ்செய்து, கணேசமூர்த்தியிருக்கும் மண்டபத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அவரின் பக்கலில் இருத்தினர்கள். அந்தப் பொழுதில் விட்டுணு முதலிய தேவர்களும் தெய்வமகளிர்களும் கணேசரையும் வல்லபையையுந் துதித்தார்கள். கின்னரர் யாழ் வாசித்தார்கள். அரம்பையர்கள் நடித்தார்கள். தேவவல்லி நீர் வார்க்க மரீசிமுனிவர் வல்லபையினுடைய திருக்கரத்தை விநாயகக்கடவுளுடைய திருக்கரத்தில் வைத்துத் தத்தஞ்செய்து கொடு[illegible]ார். பிரமா அக்கினியைக் கொணர்ந்து விவாக[illegible] கிரியையைச் செய்து முடித்தார்.

விநாயகக்கடவுள் அவரவர்க்கேற்றவாறு கிருபை செய்து, மரீசிமுனிவர்க்குப் பலவரங்களையுங் கொடுத்தருளினர். பின்பு பலவகைப்பட்ட வாத்தியங்கள்

சத்திக்க, மணித்தீபம் என்னும் ஆலயத்தை அடைந்து, ஆன்மாக்களுய்ய இனிது வீற்றிருந்தருளினார். தேவர் முனிவர் முதலியோர் வல்லபா சமேதராகிய விநாயகரை வணங்கி, விடைபெற்றுக் கொண்டு தத்தம் நகரங்களை அடைந்து வாழ்ந்திருந்தார்கள்.

**விநாயகபரத்துவம் முற்றிற்று.**

---

அகரமென வறிவாகி யுலகமெங்கு
மமர்ந்தகர வுகரமக ரங்கள்தம்மாற்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொருள் நான்கினையு மிடர்தீர்ந்தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டுகொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்துவாழ்வாம்.

---